விலை: ரூபா 20 பக்கங்கள் 24

# உதயன்

சுடர் 30 கதிர் 267 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 3, வியாழக்கிழமை 20.08.2015

# பிரச்சினைகளைத் தீர்க்க இணக்கப்பாட்டு அரசு

## அனைத்துக் கட்சிகளுக்கும் ரணில் பகிரங்க அழைப்பு

கொழும்பு, ஓகஸ்ட் 20

நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள முன்வருமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இணக்கப்பாட்டு அரசொன்றைக் கொண்டுசெல்லவே நாம் இந்தத் தேர்தலில் போட்டியிட்டோம். நாட்டு மக்களின் பிரச்சினைகளைப் பார்த்து, அதைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத்தில் அனைவரையும் ஒன்றிணைக்கவேண்டும். அந்த வேலைத் திட்டத்திலிருந்து நாம் விலகமாட்டோம். அதைச் செய்வோம் என்றும் அவர் கூறினார்.



.இந்தியாவுடன் சிறந்த நட்புறவைப் பேணுவோம். இந்தியாவையும், சீனாவையும் சமநிலைப்படுத்தும் வகையில் எமது வெளியுறவுக் கொள்கை அமையாது என்றும் அவர் குறிப்பிட்டார். இந்த வியடத்தில் தம்மிடம் ஒரு கொள்கை உள்ளது என்றும், அதற்கமைய தாம் முன் னோக்கிச் செல்வோம் என்றும் அவர் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றதன் பின்னர் அலரி மாளிகையில் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்ற

பக்கம் 21

### புதிய அரசை உன்னிப்பாக அவதானிப்போம்

*ஜேர்மனி தெரிவிப்பு*

பேர்லின், ஓக. 20

புதிய அரசின் நடவடிக்கைகள் குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்படும் என ஜேர்மனிய அரசு தெரிவித்துள்ளது.

இலங்கையுடன் தொடர்ந்தும் இணைந்து செயற்பட விரும்புவதாக ஜேர்மனிய வெளிவிவகார அமைச்சர் பிரான்க் வோல்டர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலும், பொதுத் தேர்தலும் அமைதியானதும் நீதியானதுமான முறையில் நடை

பக்கம் 21

### மஹிந்த அரசில் அங்கம் வகித்த 23 பேர் தோல்வி

கொழும்பு, ஓக. 20

நாடாளுமன்றத் தேர்தலில், போட்டியிட்ட மஹிந்த ராஜபக்ஷ அரசில் அங்கம் வகித்த முன்னாள் அமைச்சர்கள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 23 பேர் தோல்வியைத் தழுவியுள்ளனர்.

ஐக்கிய மக்கள் முன்னணியின் சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.பி.திசநாயக்க, மஹிந்தானந்த அளுத்கமகே,

பக்கம் 21

### சர்வதேச நீதிமன்றில் மஹிந்தவை நிறுத்தவேண்டும்

*ஆஸி .செனட்டர் கருத்து*

சிட்னி, ஓக. 20

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முற்படுத்த வேண்டுமென ஆஸ்திரேலிய செனட் சபை உறுப்பினர் லீ ரியன்னன் தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் அவர் இந்தக் கருத்தை வெளி

பக்கம் 21

## இலங்கையில் இம்முறை ஜனநாயக ரீதியில் தேர்தல்

### ஐரோப்பிய ஒன்றியம் பாராட்டு

கொழும்பு, ஓக 20

இலங்கையில் இம்முறை நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் தாம் விரும்பியபடி வாக்குகளைப் பயன்படுத்த, ஜனநாயக ரீதியில் வாய்ப்பு வழங்கப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித் துள்ளது.

அத்துடன் தேர்தல் பரப்புரைகள் தொடர்பான கடும் சட்ட திட்டங்கள் காணப்பட்டதுடன் சிறந்த நிர்வாகத்துடன் அமைதியான முறையில் தேர்தல் நடந்த தாகவும் ஐரோப்பிய ஒன் றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரதான கண்காணிப்பாளர் கிறிஸ் டியன் புரோடா தெரிவித் துள்ளதாக, ஐரோப்பிய ஒன்றியம் வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரும், அவரது அதிகாரிகள் குழுவும் வெளிப்படையாகவும் பக்கச் சார்பின்றியும்

பக்கம் 21

## தீர்வை எட்டுவதற்கு தமிழ் மக்கள் ஆணை

### கூட்டமைப்பின் வெற்றி குறித்து கனேடியத் தமிழர் பேரவை

மொன்றியல், ஓக. 20

நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அதன் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் தமிழ் மக்கள் அரசியல் தீர்வொன்றை எட்டுவதற்கான ஆணையை வழங்கியுள்ளனர் என்று கனேடியத் தமிழர் பேரவை தெரிவித் துள்ளது.

அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகப்பெரும் தேர்தல் வெற்றியைப் பெற்றமைக்காக இரா.சம்பந்தன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வதாகவும் கனேடியத் தமிழர் பேரவை குறிப்பிட்டுள்ளது.

பக்கம் 21

### பொறுப்புக் கூறல் நகர்வுகளை புதிய அரசு முன்னெடுக்கட்டும்

*ஐ.நா. செயலர் அழைப்பு*

கொழும்பு, ஓக. 20

பொறுப்புக்கூறல் நகர்வுகளை இலங்கையின் புதிய அரசு முன்னெடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார் ஐ.நா பொதுச் செயலர் பான் கீ மூன்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர், நாடாளுமன்றத் தேர்தலில் அமைதியான முறையிலும், பரந்தளவிலும் பங்கேற்ற இலங்கை மக்கள்

பக்கம் 21

## தேசியப் பட்டியல் குறித்து கூட்டமைப்பு முடிவில்லை

யாழ்ப்பாணம், ஓக. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கிடைத்துள்ள இரண்டு தேசிய பட்டியல் ஆசனங்களையும், யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் இன்னமும் முடிவு எடுக்கவில்லை என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா தெரிவித்தார்.

இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களையும் யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெற்று வருகின்றது. கிழக்கு மாகாணத்தைக் கருத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. அத்துடன் பெண் பிரதிநிதிகள் தேர்தலில் வெற்றி பெறவில்லை.

பக்கம் 21

## தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுவேன்

*சொல்கிறார் மஹிந்த*



கொழும்பு, ஓக. 20

நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளைப் பணிவுடன் ஏற்றுக்கொள்வதாகவும், தொடர்ந்து நாடாளுமன்ற அரசியலில் ஈடுபடவுள்ளதாகவும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள சுருக்கமான அறிக்கை ஒன்றிலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாறு காணாத தடைகளை நாம் எதிர்கொண்ட போதிலும், எமது கட்சியின் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்கள் அளித்துள்ள

பக்கம் 21

## யாழ். மாவட்டத்தில் நீதியான தேர்தல்

### அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

8ஆவது நாடாளுமன்ற தேர்தலை யாழ்.மாவட்டத்தில் மிகவும் அமைதியாகவும் - நேர்மையானதும் - நீதியானதுமாக நடத்தி முடிக்க ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக, யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தத் தேர்தலை மிகவும் சிறப்பாக நடத்தி முடிக்க பல

பக்கம் 21

## சிறுபான்மை இனத்தவர்கள் 42 பேர் நாடாளுமன்றத்துக்கு

### தேசியப் பட்டியலிலும் சிலருக்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 20

அமையவுள்ள புதிய நாடாளுமன்றத்துக்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பிரதான ஐந்து அரசியல் கட்சிகளிலிருந்து 42 சிறுபான்மையினத்தவர்கள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

17 தமிழ் உறுப்பினர்களும், 15 முஸ்லிம் உறுப்பினர்களும் மக்கள் ஆணையைப் பெற்று இவ்வாறு சபைக்

பக்கம் 21

## கூட்டமைப்பில் இம்முறை 6 புதிய எம்.பிக்கள் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த 4 பேர் இந்த முறை தேர்தலில் தோல்வியைத் தழுவியுள்ளனர். கடந்த நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத புதிய 6 பேர் இம்முறை தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தர்மலிங்கம் சித்தார்த்தன் புதிதாக இம்முறை தெரிவாகியுள்ளார். இவர் ஏற்கனவே புளொட் சார்பில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற

பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீயில் எரிந்து பெண் சாவு

யாழ்ப்பாணம், ஓக.20

தீயில் எரிந்து இளம் குடும்பப் பெண் சிகிச்சை பயனளிக்காது நேற்று உயிரிழந்தார். உரும்பிராய் மேற்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான ய.தமிழினி என்பவரே உயிரிழந்தவராவார்.

மேசன் வேலைசெய்யும் கணவன் சம்பவ தினமன்று இரவு வீடு திரும்பியபோது மனைவி நித்திரையாக இருந்துள்ளார். அவரை எழுப்பியபோது, அவர் எழும்பிய போது மேசையில் இருந்த குப்பி விளக்கு தவறுதலாகத் தட்டுப்பட்டு அவர் மீது விழுந்ததாகவும் அதனால் தீ பற்றியதாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல் முழுதும் எரிகாயங்களுக்கு உள்ளான அவர் சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனளிக்காது நேற்று அவர் உயிரிழந்தார். விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4)

# வாக்களிப்பில் தெளிவின்மையால் 25ஆயிரம் வாக்குகள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.20

தேர்தலில்வாக்களிப்புமுறையில்தெளிவின்மை காரணமாக யாழ். மாவட்டத்தில் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்ட தேர்தல் வாக்குச் சீட்டில் 13 அரசியல் கட்சிகளினதும் 6 சுயேச்சைக் குழுக்களினதும் சின்னங்களும் அவற்றின் கீழ் வேட்பாளர்களின் இலக்கங்களும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பல வாக்காளர்கள் சின்னத்திற்கு வாக்களித்துவிட்டு வேட்பாளர்களின் விருப்பு வாக்கு இலக்கங்களுக்கு மேலே காணப்பட்ட சுயேச்சைக் குழுக்களின் இலக்கங்களுக்கு நேரே புள்ளடியிட்டுள்ளனர். அவ்வாறான வாக்குச் சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக வாக்காளர்களிடம் கேட்டபோது வாக்களிப்பு முறை பற்றி தமக்கு ஒன்றும் சொல்லித் தராததால் அரசியல் கட்சிகளின் பெயர்களுக்கு கீழே காணப்பட்ட 1 தொடக்கம் 6 வரையான இலக்கங்களுக்கு புள்ளடியிட்டோம் எனத் தெரிவித்தனர். அதன் கீழ் பத்து இலக்கங்கள் காணப்பட்ட போதிலும் அதற்கு மேலே காணப்பட்ட 1தொடக்கம் 6 வரையான இலக்கங்களுக்கு அருகில் புள்ளடியிட்டோம் எனவும் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் 17 கட்சிகள் போட்டியிட்டபோதிலும் ஒரு கட்சி கூட மக்களுக்கு வாக்களிப்பு முறை தொடர்பாக விளக்கங்களை தெளிவாக வழங்காததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் நிராகரிக்கப்பட்டவாக்குகளாகமாறினஎன்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-9)



வரலாற்றுப் புகழ்மிக்க தெல்லிப்பழை சிறிதுர்க்கை அம்மன் ஆலய இரண்டாம் நாள் உற்சவத்தில் சுவாமி வெளி வீதியுலா வரும் காட்சி.(ற-86)

## முன்பள்ளி ஆசிரியருக்கு செயலமர்வு

தென்மராட்சி ஓக.20

தென்மராட்சி பிரதேச முன்பள்ளி ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார் அறிவித்துள்ளார். (ற-9)

## பொன்னாலை வரதராஜப் பெருமாளுக்கு கொடியேற்றம் இன்று

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கோயில் வருடாந்த ஆவணி மாத மகோற்சவம் இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 18 தினங்கள் இடம்பெறும் உற்சவத்தில் இம்மாதம் 28 ஆம் திகதி வரதலட்சு விரத பூசையும் அடுத்த மாதம் 5 ஆம் திகதி இரதோற்சவமும் தொடர்ந்து 06 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் 7 ஆம் திகதி திருக்கல்யாணமும் இடம்பெற்று நிறைவுறும். அடியார்களுக்கு வேண்டிய அருள் வழங்கும் நாராயணனின் அருள்வேண்டி வரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.





# நல்லூர் கந்தன் கொடியேற்றம்

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் நேற்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அதிகாலை 4.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி வசந்த மண்டபப் பூசை இடம்பெற்று சுவாமி கொடித் தம்பத்துக்கு வந்து சேர்ந்ததும் கொடியேற்ற வைபவம் இடம்பெற்றது.

உற்சவத்தில் பெருமளவு பக்தர்கள் கலந்து கொண்டனர். காலை 4.30 மணியில் இருந்து பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும் பொருட்டு அங்கப் பிரதட்சணம் செய்தனர். பக்தர்கள் பெருமளவில் கலந்து கொண்டபோதும் இந்த முறை ஆலய முன்வாயில் மண்டபத்தில் போடப்பட்டிருந்த தடைகள் வழமை போன்று அகற்றப்படாததால் பெருமளவு பக்தர்கள் ஆலயத்துக்கு வெளிப்புறம் நின்றபடியே கொடியேற்றத்தைப் பார்ப்பதற்காக முண்டியடித்த வண்ணம் நின்றனர்.

உற்சவத்தின் முதல் நாளான நேற்று குழுமியிருந்த பக்தர்கள் தமது கலாசார பாரம்பரியங்களைப் பேணும் வகையில் தமது உடைகளை அணிந்து வந்திருந்தனர். பக்தர்களின் வசதி கருதி வழமை போன்று யாழ். மாநகரசபை தனது நடவடிக்கைகளைச் சீராக மேற்கொண்டிருந்ததுடன் உணவகங்களில் சுகாதாரம் உரிய முறையில் பேணப்படுவதையும் அவதானித்தனர். நேற்றைய உற்சவத்தில் சுமார் நான்காயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர். (ற-17)









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்று செல்லும் தந்தைகளும், மகன்களும்

கொழும்பு, ஓக.20
குடும்ப அரசியல் என்பது இலங்கையில் மிகவும் பிரபலமான விடயமாகும். இலங்கை அரசியலில் சேனாநாயக்க, பண்டாரநாயக்க போன்ற அரசியல் குடும்பங்களை போல் பல அரசியல் குடும்பங்களின் உறுப்பினர்கள் நாட்டின் நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்துள்ளனர்.
ஆசியா நாடுகளின் அரசியலில் ஒரு அங்கமாக குடும்ப அரசியல் இருந்து வருகிறது. இதனால், இலங்கை அரசியலிலும் அது இன்றியமையாத ஒன்றாகி விட்டது.
இம்முறை நாடாளுமன்ற தேர்தலில் இரண்டு தந்தைகளும், இரண்டு புதல்வர்களும் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.
குருணாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட அவரது புதல்வர் நாமல் ராஜபக்ஷவும் நாடாளுமன்றத்துக்கு தெரிவாகியுள்ளனர்.
அதேபோல், ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட அமைச்சர் ராஜித சேனாரத்ன மற்றும் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்ட அவரது புதல்வர் சத்துர சேனாரத்ன ஆகியோரும் நாடாளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ளனர். (ற)

# நீதி, நியாயமான தேர்தலுக்கு அஸ்கிரிய பீடாதிபதி பாராட்டு

கொழும்பு, ஓக. 20
நியாயமான மற்றும் சமாதானமான தேர்தலை நடாத்தியமை தொடர்பில் அனைத்து தரப்பினருக்கும் தனது பாராட்டுக்களைத் தெரிவித்து கொள்வதாக அஸ்கிரிய பீடாதிபதி கலகம ஸ்ரீ அத்தாதஸ்ஸி தேரர் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்,
நாடாளுமன்றத்துக்கு தகுதியான நபர்களைத் தெரிவு செய்வதற்காக மக்கள் சரியான தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.
அதற்காக ஜனாதிபதி தலைமையிலான அரசு மற்றும் தேர்தல் ஆணையாளர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டமைக்கு மதிப்பளிக்க வேண்டும். இதுவரை செயற்பட்டதைப் போன்று தொடர்ந்தும் செயற்படுவது அனைவரதும் கடமையாகும்.
பொலிஸார் மற்றும் தேர்தல் அதிகாரிகள் சட்டத்தை சரியான முறையில் செயற்படுத்தினார்கள்.
அதனையும் அவ்வாறே தொடர்ந்து செயற்படுத்த வேண்டும் –என்றார். (த)

# மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கு செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர் நாடாளுமன்ற பிரதிநிதிகளுக்கான முழுநாள் செயலமர்வு நேற்று மூன்று பாடசாலைகளில் நடைபெற்றது.
சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகிய இடங்களில் நடைபெற்ற செயலமர்வுகளில் 300 மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.
வேள்ட் விஸன் நிறுவன அனுசரணையுடன் நடத்தப்பட்ட செயலமர்வுகளில் வலயத்தைச் சேர்ந்த 11 பாடசாலைகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் நாடாளுமன்றங்களின் பிரதமர் சபாநாயகர் அவைத் தலைவர் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர். (ற–9)

# 'ஷீரோ' ஆனாலும் 'ஹீரோ' ஆனார் மஹிந்த ராஜபக்ஷ

கொழும்பு, ஓக.20
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் குருநாகல் மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 4 லட்சத்து 23 ஆயிரத்து 529 வாக்குகளைப் பெற்று மீண்டும் மக்கள் மத்தியில் தமக்கு செல்வாக்கு இருக்கின்றது என்பதை நிரூபித்துள்ளார்.
ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்ட அவர் அக்கட்சியின் சார்பில் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றோர் வரிசையில் முதலிடத்தில் இருக்கின்றார்.
2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் போது மஹிந்தவின் சகோதரரான பசில் ராஜபக்ஷ கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டு 4 லட்சத்து 25 ஆயிரத்து 861 வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.
மஹிந்த குடும்பத்தினருக்கு இலங்கையில் செல்வாக்கு குறையவில்லை என்பதை இது எடுத்துக் காட்டுகின்றது என்று அரசியல் நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர். (ற)

# கூட்டமைப்பின் புதிய எம்.பிக்களுக்கு மட்டக்களப்பில் அமோக வரவேற்பு



மட்டக்களப்பு, ஓக. 20
நடந்துமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேற்று அமோக வரவேற்பளிக்கப்பட்டது.
சீனித்தம்பி யோகேஸ்வரன், சதாசிவம் வியாழேந்திரன், ஞானமுத்து சிறிநேசன் ஆகியோருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவாளர்கள் மாலை அணிவித்தும், பொன்னாடைபோர்த்தியும் அமோக வரவேற்பளித்தனர். (த)

# சீரான மின் விநியோகம் கோரி மன்னாரில் மக்கள் ஆர்ப்பாட்டம்



மன்னார், ஓக.20
மன்னார் மின்சாரசபையை முற்றுகையிட்டு மன்னார் நகர மக்கள் நேற்றுக் காலை போராட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.
மன்னார் மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக தொடர்ச்சியாக பகல் இரவு பாராது மின்சாரம் அடிக்கடி தடைப்பட்டு வருகின்றது என்றும் இது தொடர்பாக மன்னார் மக்கள் மன்னார் மின்சார சபையுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்ற போதும் அங்குள்ள அதிகாரிகள் உரிய பதிலை வழங்குவதில்லை என்றும் தெரிவித்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
பாடசாலை மாணவர்கள் பெற்றோர், வர்த்தகர்கள் என பலர் கலந்து கொண்டனர். குறிப்பாக இவ்வருடம் உயர் தரப்பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களும் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.
அதன்போது மன்னாரில் அடிக்கடி மின் தடை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதனை தெளிவு படுத்த வேண்டும் எனவும் அடிக்கடி தடைப்படுகின்ற மின்சாரத்தை சீரான முறையில் வழங்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.
மக்களுக்கு ஆதரவு தெரிவித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வட மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன், வட மாகாணசபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
அங்கு வருகை தந்த மன்னார் மாவட்ட மின் அத்தியட்சகருடன் மின்சார தடை சம்பந்தமாக கலந்துரையாடல் இடம் பெற்றது. மன்னாரில் மின் தடை தொடர்ச்சியாக ஏற்பட்டு வருவதாகவும் அதனை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் அவரிடம் மக்கள் அதிருப்தியை வெளியிட்டனர்.
அதற்குப் பதிலளித்த மன்னார் மின் அத்தியட்சகர் விரைவில் மின் தடை ஏற்படாது தடுப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதாக தெரிவித்ததோடு மன்னரில் உள்ள சில அதியுயர் மின் கோபுரங்களில் உள்ள மின் வயரில் உப்புக் கசிவு ஏற்படுவதன் காரணத்தாலேயே குறித்த மின் தடங்கல் ஏற்படுகின்றது என்றும் தெரிவித்தார். (ற–56)

**எனது பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்ட மக்களே!**

இரண்டு ஆண்டு காலத்திற்குள் எனக்கு மீண்டும் ஒரு பெரு வெற்றியைத் தந்திருக்கும் உங்கள் அனைவரது கரங்களையும் நான் நன்றியோடு பற்றிக் கொள்ளுகின்றேன்.

மாகாண சபை உறுப்புரிமையைப் போல அல்லாமல் - இப்போது, இது வேறு ஒரு பரிமாணத்திலான புதிய பணி.

நாடாளுமன்ற உறுப்புரிமை என்பது ஒரு மாறுபட்ட தளத்தில் உங்களுக்குச் சேவை ஆற்றுவதற்கான வாய்ப்பு. இது வேறு வகையான ஒரு பொறுப்பு.

மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதி என்பது மிகப் பெறுமதியானதோர் தகுதி. அந்த பொறுப்பினை என்னிடமும் வழங்குவதற்கு உங்களிடம் இருந்த நம்பிக்கைக்கும் மன உறுதிக்கும் எக்காலத்திலும் தளர்வு வராதவாறு நான் எனது கடமைகளைச் செய்ய முயற்சிப்பேன்.

எமது மக்களின் சமூக பொருளாதார வாழ்வின் மேம்பாட்டுக்காக உழைப்பதுவும், அவர்களது அரசியல் உரிமைகளை உறுதி செய்வதற்காகச் செயற்படுவதும் - ஒன்றைத் தவிர்த்து இன்னொன்று என்றில்லாமல் - சமாந்தரமாக முன்னெடுக்கப்பட வேண்டிய பணிகள்.

அவ்வாறு - இரண்டு தடங்களிலும் இரண்டு பணிகளையும் சம நேரத்தில் முன்னெடுத்துச் செல்வதற்கான அங்கீகாரமும் ஆணையுமே நாடாளுமன்ற உறுப்புரிமை என்பதனை நான் நன்கறிவேன்.

ஏற்கெனவே இரண்டு தடவைகள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய காலத்தில் நான் கற்றறிந்த விடயங்களையும், பட்டறிந்த பாடங்களையும் மனதில் வைத்து - யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களாகிய உங்களுக்குச் சிறந்த சேவையை ஆற்ற முயற்சிப்பேன் என்பதை உறுதி செய்கின்றேன்.

மிகவும் சிக்கலான - அதியுச்ச போட்டித்தன்மை கொண்ட - இன்றைய அரசியற் சூழ்நிலையில் - மாறுபட்ட கொள்கைகளுடன் உங்கள் வாசல் தேடி பல அரசியற் பணியாளர்கள் வந்தார்கள். இருந்த போதும் - எங்களுக்கே நீங்கள் கதவுகளைத் திறந்தீர்கள், அந்த மாபெரும் அங்கீகாரத்தை நான் ஒருபோதும் மறவேன்.



மனமார்ந்த நன்றியுடன்,

தர்மலிங்கம் சித்தார்த்தன்
தமிழ் தேசியக் கூட்டமைப்பு (TNA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர்க் கண்காணிப்பாளர்களை தேர்தல்களில் பயன்படுத்துங்கள்

## மாலைதீவுகளின் முன்னாள் தேர்தல் ஆணையாளர் அறிவுரை

கொழும்பு, ஓக.20
இலங்கையில் இடம்பெறும் தேர்தலுக்கு உள்ளூர் தேர்தல் கண்காணிப்பாளர்களை பயன்படுத்த வேண்டும் என்று ஆலோசனை வழங்குவதாக, தெற்காசியாவின் தேர்தல் முகாமைத்துவச் சபைகளின் மன்றத்தின் தலைவரும் மாலைதீவுகளின் முன்னாள் தேர்தல் ஆணையாளருமான இப்ராஹிம் வாஹீட் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பான கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்ட இவ்வமைப்பின் அவதானங்களை வெளிப்படுத்துவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

நடந்து முடிந்த இத்தேர்தலானது நீதியாகவும் நியாயமாகவும் நடைபெற்று முடிந்துள்ளதாகத் தெரிவித்த அவர், அதற்கான பாராட்டு தேர்தல்கள் பணிப்பாளருக்குச் செல்ல வேண்டுமெனக் கூறினார். அதைவிட, முக்கியமான பாராட்டு, இலங்கையின் மக்களுக்குச் செல்ல வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

நடந்து முடிந்த தேர்தலானது, சர்வதேச நியமங்களின் அடிப்படையின் படி நீதியானதாக இடம்பெற்று முடிந்ததாகக் கூறுவதாக அவர் குறிப்பிட்டார்.

அதிகாரிகள், பொலிஸார், அரசியல்வாதிகள், சமூக அமைப்புகள் மாத்திரமன்றி, மக்களும் தாங்கள் எவ்வாறு ஒழுக்கனமாவர்கள் என்பதை வெளிப்படுத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

முன்னேறக்கூடிய விடயங்கள் குறித்த கேள்விக்குப் பதிலளித்த அவர், மக்கள், அரசியல்வாதிகள் உட்பட அனைவரிடமும் சிறிது அதிகமான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என எண்ணுவதாகக் குறிப்பிட்டார். (ற)

### தீ அணைக்கும் பிரிவை உருவாக்க கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 20
முல்லை மாவட்டதில் தீ அணைக்கும் படைப்பிரிவுகளை ஏற்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். முல்லைமாவட்டத்தில் திடீரென தீப்பற்றிக் கொண்டால் தீயணைக்கும் படை இல்லை. அவர்கள் வருவதற்குள் எரிந்து சாம்பராகிவிடும். அதனால் முல்லை மாவட்டத்தில் தீ அணைக்கும் படை அலுவலகம் ஒன்று நிறுவ வேண்டும் என மாவட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-500)

### தங்க பிஸ்கட் வைத்திருந்த விமான பணியாளர்கள் கைது

கொழும்பு, ஓக.20
சட்டவிரோதமான முறையில் 75 தங்க பிஸ்கட்களை வைத்திருந்த இரண்டு விமான நிலைய பணியாளர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர் என்று சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரிலிருந்து நேற்று அதிகாலை 1.30 மணிக்கு வந்த விமானத்தில் வந்த இரு விமான நிலையப் பணியாளர்களிடம் இருந்து 7.5 கிலோ கிராமுடைய 75 தங்க பிஸ்கட்கள் இருந்தன என்றும் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பெறுமதி 37.5 மில்லியன் ரூபா எனவும் அவர்களிடம் தொடர்ந்து விசாரனை நடைபெற்று வருவதாகவும் சுங்கத் திணைக்கள ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி மேலும் தெரிவித்துள்ளார். (ற)



# தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவருக்குக் கௌரவிப்பு

நடைபெற்றுமுடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் மீண்டும் அதிகூடிய வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய தலைவருமான இரா. சம்பந்தனைப் பாராட்டி வரவேற்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திருகோணமலை மக்களால் நடத்தப்பட்டது.

திருகோணமலை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் ஆலய ஆதீன கர்த்தாவால் ஆலயத்தில் வைத்து மலர்மாலை அணிவித்து கிரீடம் சுட்டப்பட்டு பொன்னாடை சாற்றி இரா. சம்பந்தன் கௌரவிக்கப்பட்டார். அதன்பின்னர் திருகோணமலை வில்லூன்றி கந்தசாமி ஆலயத்தில் பிரதம குருவினால் காளாஞ்சி வழங்கப்பட்டது.

# நீதியான முறையில் தேர்தல் நடைபெற்றது

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

கொழும்பு, ஓக.20
நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலானது நியாயமானதும், அமைதியுமானதுமான முறையில் நடைபெற்று முடிந்துள்ளது என்று தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்ட பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் உடனான சந்திப்பின் போதே அந்த அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசியல் கட்சிகள், அவற்றின் ஆதரவாளர்கள் தேர்தல் ஆணையாளரினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்களுக்கு குறிப்பிடத்தக்களவு மதிப்பளித்து செயற்பட்டமை இங்கு விசேட அம்சமாகும்.

19ஆவது திருத்தச் சட்டத்திற்கு அமைய தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதிலும் அமைதியான தேர்தலை உறுதிப்படுத்தும் வகையில் சட்டங்களை உரிய முறையில் செயற்படுத்த தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுத்தமை பாராட்டப்பட வேண்டியது – என்றார். (ற)

# நகைகளுடன் கம்பி நீட்டிய ஓட்டோ சாரதி சிக்கினார்

## சிசிடீவி கமரா உதவியுடன் புறக்கோட்டைப் பொலிஸார் அதிரடி

கொழும்பு, ஓக.20
தமது சகோதரியின் மகளது திருமணத்துக்காக அமெரிக்காவில் இருந்து எடுத்து வந்திருந்த 30 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், வெளிநாட்டுப் பண நோட்டுக்கள் மற்றும் மூன்று செல்லிடத் தொலைபேசிகள் வைக்கப்பட்டிருந்த கைப்பையை புறக்கோட்டை செட்டித்தெருவில் ஓட்டோ ஒன்றில் ஞாபக மறதியாகக் கைவிட்டுச் சென்றிருந்த போது, அதை எடுத்துச் சென்ற ஓட்டோ சாரதியை சீ.சீ.ரீ.வி கமராக்களில் உள்ளடங்கியிருந்த காட்சிகளின் உதவியால் கைது செய்திருந்ததாக புறக்கோட்டைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் போது, தங்க நகைகள், பெறுமதிமிக்க மூன்று கைத்தொலைபேசிகள், வெளிநாட்டுப் பணநோட்டுக்களை மாற்றிப் பெறப்பட்டிருந்த ஒரு லட்சம் ரூபா பணத்தொகை ஒன்றும் பொலிஸாரால் ஓட்டோ சாரதியிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது–

தனது சகோதரியின் மகளது திருமண நிகழ்வுக்காக அண்மையில் அமெரிக்காவில் இருந்து வந்திருந்த பெண்மணி ஒருவர் ஐம்பது பவுண் வரையிலான தங்க நகைகள் மற்றும் சில பெறுமதியான உடைமைகளை தமது கைப்பையில் வைத்துக்கொண்டு கொட்டாஞ்சேனையில் வசிக்கும் அவரது சகோதரியின் இல்லத்துக்கு சென்றிருந்தார். பின்னர் அதை அடுத்த தினத்தில் தனது சகோதரியுடன் தங்க நகைகள், கைத்தொலைபேசிகள் உள்ளிட்ட உடைமைகள் வைக்கப்பட்டிருந்த கைப்பையுடன் ஓட்டோ ஒன்றில் செட்டியார் தெருவில் உள்ள நகைக் கடையொன்றுக்கு சென்றுள்ளார். அந்த நகைக்கடையில் அமெரிக்க மாதிரியிலான தங்க நகைகளை வழங்கி அவற்றுக்குப் பதிலாக இந்நாட்டு வடிவமைப்புடன் கூடிய தங்க ஆபரணங்களைப் பெற்றுக் கொள்வதே அவரது நோக்கமாக இருந்துள்ளது.

ஓட்டோவில் இருந்து இறங்கி நகைக் கடைக்குச் சென்றிருந்த சில நிமிடங்களில் மேற்படி பெண்மணி கைப்பையைத் தேடிய போதே கைப்பை ஞாபக மறதியாக முச்சக்கர வண்டியினுள் தவற விடப்பட்டிருந்தமை தெரியவந்திருந் தது. எனினும் குறித்த ஓட்டோ அங்கிருந்து புறப்பட்டுச் சென்றிருந்தது.

அதற்கமைய, அவர் புறக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் இது பற்றி முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளார். உடனடியாகச் செயற்பட்ட புறக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளில் இறங்கியுள்ளனர்.

அதையடுத்து வெளிநாட்டிலிருந்து வந்திருந்த பெண்மணியும் அவரது சகோதரியும் முச்சக்கர வண்டியில் ஏறியிருந்த கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் இருந்து அவர்கள் பயணித்து வந்திருந்த மார்க்கத்தின் இருபுறங்களிலுமுள்ள விற்பனை நிலைய்ங்கள் மற்றும் நிறுவனங்களில் பொருத்தப்பட்டிருந்த 25க்கும் மேற்பட்ட சீ.சீ.ரீ.வி. கமராக்களைப் பரிசோதிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர். அதன் பயனாக அந்த சீ.சீ.ரீ.வி. கமராக்களின் ஒன்றில் பதிவாகியிருந்த ஓட்டோ பயணிக்கும் காட்சி, மற்றும் அதில் பதிவாகியிருந்த ஓட்டோவின் இலக்கத்துக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டு சந்தேக நபரைக் கைது செய்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-22)

# கொள்ளன்கிறாய் மறவன்புலவு வீதிக்கு விமோசனம் கிட்டுமா?

## பொதுமக்கள் ஏக்கம்

யாழ்ப்பாணம், ஓக.20
சாவகச்சேரி நுணாவில் மேற்கில் அமைந்துள்ள மறவன்புலவு வீதி திருத்தி அமைக்கப்படாதா என்று அந்தப் பகுதி மக்கள் ஏக்கம் தெரிவித்துள்ளனர்.

தென்மராட்சி சாவகச்சேரி நுணாவில் மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள கிறிஸ்தவ தேவாலயத்தை அண்டி ஆரம்பமாகி கொள்ளன்கிறாய் பிள்ளையார் ஆலயத்தின் பின் வீதிவழியாகச் செல்லும் இந்த வீதி மறவன்புலவு பிரதேசத் தில் நாவற்குழி கேரதீவு பெருவீதியில் இணைகிறது.

இந்த வீதியின் இருபுறங்களிலும் பரந்து விரிந்த மிக விசாலமான வயற்பரப்பொன்று அமைந்துள்ளதோடு அந்தப் பிரதேச மக்களுக்கு உரிய இந்துமயானமும் கூட அந்த வீதியிலேயே அமைந்துள்ளது.

அதுமட்டுமல்லாது மறவன்புலவில் இருந்து நுணாவில் ஊடாகச் சாவகச்சேரி மற்றும் கைதடி வரையில் பயணிக்கக் கூடிய கிட்டிய குறுக்கு வழிப்பாதையொன்றாகவும் இந்த வீதியே அந்தப் பிரதேச மக்களால் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பிரதேசங்களின் விவசாயப் பெருமக்களின் வயற்செய்கையுடன் சம்பந்தப்பட்ட அனைத்துச் செயற்பாடுகளுக்கும் இந்த வீதியையே பயன்படுத்திவருவதால் தினமும் கணிசமான பொதுமக்களின் போக்குவரத்து வீதியொன்றாகவும் இது பிரபலமடைந்துள்ளது.

பல ஆண்டுகளாகவே மக்கள் பாவனைக்கு உதவாது அளவுக்குக் குண்டும் குழியுமாகக் காணப்படும் இந்தப் பாதையைச் செப்பனிட்டுத் தருமாறு அந்தப் பிரதேச மக்கள் சாவகச்சேரி நகர சபைக்கும் சாவகச்சேரி பிரதேச சபைக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மழை காலத்தில் வயல் நீர் இந்தப் பாதையை மேவிப் பாய்வதால் மக்கள் போக்குவரத்து மற்றும் வாகனப் போக்குவரத்து கேள்விக்குறியாகிவிடுகிறது.

அந்தப் பிரதேச மக்களின் பன்முகத் தேவைகளை நிறைவேற்றும் இந்தப் பாதையை செப்பனிட்டுத் தருவதற்கு சாவகச்சேரி நகரசபை மற்றும் பிரதேச சபை உடனடிக் கவனத்தைச் செலுத்தும் என அந்தப் பிரதேச மக்கள் எதிர்பார்க்கின்றனர். (ற-22)

# ஒருவரைக் கடத்திச் செல்லும் வழியில் பொலிஸாரிடம் சிக்கிய 9 பேர் கைது

கிளிநொச்சி, ஓக. 20
கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவரை கடத்திச் சென்ற குற்றச்சாட்டில் 9 சந்தேக நபர்களை முழங்காவில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஏ 32 பாதை வழியாக பூநகரியில் இருந்து மன்னார் நோக்கி சென்ற டிபென்டர் ரக வாகனம் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்ட போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடத்தபட்டவர், சந்தேக நபர்கள் பயணித்த வாகனத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக அவரிடம் வாக்கு மூலம் பதிவு செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. எவ்வாறாயினும் கடத்தப்பட்ட நபர், கேரளா கஞ்சா தருவதாக கூறி மூன்று லட்சம் ரூபாவை பெற்றுக்கொண்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் கஞ்சாவை வழங்காத காரணத்தினால், தாம் அவரை கடத்திச் சென்றதாக சந்தேக நபர்கள் 9 பேரும் பொலிஸாரிடம் கூறியுள்ளனர். சம்பவம் தொடர்பாக முழங்காவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் முடிவுகள் எமக்கு ஏமாற்றம்

## அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, ஓக.20
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளானது தமக்கு ஏமாற்றம் அளிப்பதாகவும், தாம் எதிர்பார்த்த முடிவு இந்தத் தேர்தலில் கிடைக்கப்பெறவில்லை எனவும் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க குறிப்பிடுகின்றார்.

நடைபெற்று முடிந்த தேர்தல் முடிவுகள் குறித்து தெளிவுபடுத்தும் செய்தியாளர் சந்திப்பு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மக்கள் விடுதலை முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் இதுவரையில் நடைபெற்ற தேர்தல்களில் மிகவும் அமைதியானதும், நீதியானதுமாக நடை பெற்ற தேர்தலாக இந்த தேர்தல் பதிவாகியுள்ளது.

இதன்போது தேர்தல் அத்துமீறல் சம்பவங்கள் நடைபெறாமல் இல்லை. ஆங்காங்கே சில சம்பவங்கள் நடைபெற்றுள்ளன. அதேபோல நடைபெறவிருந்த பல சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன.

நடைபெற்று முடிந்த இந்தத் தேர்தல் முடிவுகளுக்கு அப்பால், நாம் வேறு விதமான முடிவுகளை எதிர்ப்பார்த்திருந்தோம். நாம் மாத்திரம் அல்ல எம்மைப்போல் பலர் இவ்வாறு எதிர் பார்த்திருந்தனர்.

எனவே எமக்கு கிடைத்துள்ள இந்த தேர்தல் முடிவுகளும், வாக்குகளும் நாம் எதிர்பார்த்த முடிவு அல்ல. எனவே எதிர் வரும் காலத்தில் இந்தத் தேர்தல் முடிவுகளை நாம் எவ்வாறு அதிகரித்துக் கொள்வது, அதன் குறைபாடுகள் என்ன, எந்தத் திசையினை நோக்கி பயணிக்க வேண்டும், எதனை சரிசெய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டியுள்ளது.

எது எவ்வாறாயினும் இந்தத் தேர்தலில் எப்பொழுதும் இல்லாதவாறு மக்கள் எமக்கு முழுமையான ஆதரவை வழங்கினர்.–என்றார். (ற)

## சிவாஜிக்கு குருநாகலில் 91 வாக்குகள்

கொழும்பு, ஓக.20
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை எதிர்த்து குருநாகல் மாவட்டத்தில் சுயேச்சைக்குழு 14இல் களமிறங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எம்.கே.சிவாஜிலிங்கம் 91 வாக்குகள் பெற்றுக் கொண்டுள்ளார்.

தமிழர்களின் பிரச்சினைகளை சிங்கள மக்களும் உணரவேண்டும் என்ற அடிப்படையில் தான் குருநாகலில் களமிறங்குவதாக தெரிவித்தே சிவாஜிலிங்கம் அங்கு களமிறங்கியிருந்தார். அதேவேளை, விடுதலைப் புலிகளின் தலைவரின் உறவினர் ஒருவர் குருநாகலில் தனக்கு எதிராக களமிறங்கியுள்ளதாகக் கூறி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபஷ அங்கு பரப்புரைகளை மேற்கொண்டிருந்தார். (ற)

## தேர்தலுக்குப் பின் 11 பேர் கைது

கொழும்பு, ஓக.20
தேர்தலுக்குப் பின்னரான நாள்களில் இதுவரை 11 பேர் வரை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தலுக்குப் பின்னர் கிடைக்கப் பெற்ற 9 முறைப்பாடுகளில் குறித்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் விடுத்தமை மற்றும் தாக்குதல்களை மேற்கொண்டமை தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

தேர்தலில் வாக்களிப்பு நிறைவடைந்த 17ஆம் திகதி பிற்பகல் 4 மணி முதல் தொடர்ந்து 7 நாள்களுக்கு தேர்தல் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படும். இந்தக் காலத்திற்குள் சட்டவிரோத கூட்டங்கள், பேரணிகள் நடத்துவதைத் தவிர்த்து வெற்றி, தோல்வியை அனுபவிக்குமாறு பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ற)

## ஐரோப்பிய தேர்தல்கள் போன்று இம்முறை நடைபெற்றது தேர்தல்

### விக்கிரமபாகு கருணாரத்ன பாராட்டு



கொழும்பு, ஓக.20
நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் தேர்தல்களுக்கு ஒப்பானதாக அமைந்திருந்தது என்று பாராட்டியுள்ளார் புதிய இடசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன.

இலங்கை வரலாற்றில் நடைபெற்ற தேர்தல்களில் இம்முறை நடைபெற்ற தேர்தலே மிகவும் அமைதியாகவும், நீதியாகவும் நடைபெற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடைபெற்றுமுடிந்த தேர்தல் தொடர்பில் கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ற)

## இன்னமும் ஒரு வருடத்தில் ஆட்சி எமது கைகளில்

### மனுஷ நாணயக்கார கூறுகின்றார்



கொழும்பு, ஓக.20
இன்னமும் ஒருவருட காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும் என்று மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலி மாவட்டத்தில், ஐ.ம.சு.மு சார்பில் போட்டியிட்ட மனுஷ நாணயக்கார இம்முறை வெற்றிபெற்றுள்ளார். அதனையடுத்து ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே மனுஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

பெரும்பான்மை பலத்தை பெறக் கூடிய வல்லமை தமது கட்சிக்கு காணப் பட்ட போதும், இறுதி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட சில நடவடிக்கைகள் காரணமாக தேர்தல் நடவடிக்கைகள் குழப்பப்பட்டன.

குறிப்பாக ஐ.ம.சு.மு மற்றும் சு.க ஆகியவற்றின் பொதுச் செயலாளர்கள் நீக்கப்பட்டமை மற்றும் மத்திய செயற்குழுவிலிருந்து 13 பேர் நீக்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள், தாக்கத்தை ஏற்படுத்தின.

இன்னமும் ஒருவருட காலத்துக்கு மாத்திரமே நாம் எதிர்க்கட்சியில் இருப்போம். அதன்பின்னர் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவோம்.– என்றார்.(ற)



நல்லூர் முருகன் ஆலயத்தின் வருடாந்த பெருந் திருவிழாவின் கொடியேற்றம் நேற்று இடம் பெற்றது.

## 2 ஆம் திருவிழா

### நல்லைக் குமரனைப்பாடு

வாடி தோழி வந்தென் செவியில்
வள்ளி மணாளனைப்பாடு
நாடியே பக்தர்கள் நாளும் போற்றும்
நல்லைக் குமரனைப்பாடு

அழகன் முருகனின் எழிலை என்தன்
உள்ளம் குளிர நீ கூறு
பழம்தனை வேண்டி பழனிக் கேகிய
பாலனின் லீலையைக் கூறு

முல்லைக் கொடி போல் மெல்ல அசைந்து
மெல்லிடை நெளிய நீ ஆடு
வல்லசுரர் தன்னை சமரில் வென்ற
வேலவன் மயிலென ஆடு

*ஆனந்தன்,வண்ணார்பண்ணை.*

### "எல்லோமே உண்டு மனிதம் மட்டும் இல்லை"

படித்தால் மட்டும் போதுமா? தம்பி
பண்பாட்டுடன் வரவேண்டும், அதை மீறி
நடித்தால் நல்லூரான் திருந்த வைப்பான்
நாம் நாமாகவே வாழ்கின்றோம், திருந்தவில்லை.

காசுண்டு கடையுண்டு கனரக வாகனமுண்டு
கண்டபடி செலவழிக்க 'ஏரிஎம்' காட்டுண்டு
மோதுண்டு போக மோட்டார் சைக்கிளுண்டு
முருகா இங்கு எல்லாமேயுண்டு, மனிதம் இல்லை

குருவாக இருக்க விரும்புகிறார்களேயொழிய
கும்பிடும் சீடனாக இருக்க விரும்புகிறாரில்லை,
எருவாக இருப்பதனாலன்றோ இந்த உலகம்
எளியவர்தம் மேடையிலே நாடகமாடுகிறது

இலவசமாய் எல்லாம் கிடைப்பதனாலன்றோ அந்த
இறைவனும் இலவசமாய் அருள் பாலிக்கிறானோ?
நிலவு, பகல், காற்று, தண்ணீர், அன்னம் எல்லாமே
நீண்ட ஆயுள் தருவன, நினைத்து வழிபடுவோம்.

*கே.எஸ்.சிவஞானராஜா,கொக்குவில்.*

### காத்திடுவாய் வேலவனே!

உன் எழில் காணத் தேடி வரும் அடியார்க்கு
வாரி வழங்கிடுவாய் உன் அருளை –கந்தா!
அடியவர் தம் துயர் அத்தனையும்
உன் வேலால் வேரறுக்கும் கடம்பா!
காலம் காலமாய் உனைக் காண
காத்திருந்து தரிசிக்கும்
உன்னடியார் துயர் போக்கி
எப்போதுமெமைக் காத்திடுவாய் வேலவனே!

*எஸ்.நிலா, குப்பிளான்.*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். மனைவியின் எதிர்பார்ப்பை நிறைவேற்றி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் உயரும். பணியாளர்கள் வேலை விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**இடபம்:** ஆரோக்கிய விடயத்தில் அக்கறை உருவாகும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். அரச வகையில் எதிர்பார்ப்பு எளிதில் நிறைவேறும். மனைவி வழி உறவினர்களுடன் கருத்துவேறுபாடு உண்டாகும்.

**மிதுனம்:** இனிமையாகப் பேசி அனைவரையும் கவர் வீர்கள். சுப விடயம் குறித்த பேச்சில் நல்ல முடிவு கிடைக் கும். தொழில், வியாபாரத்தில் அதிர்ஷ்டவசமாக ஆதாயம் உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் சுதந்திரமாகப் பணியாற்றுவர்.

**கடகம்:** சாதுரியமாகச் செயல்பட்டு நற்பலன் காண் பீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். உறவினர் இல்ல சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்று மகிழ்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**சிங்கம்:** திடீர்ச் செலவால் சேமிப்புக் கரையும். மனைவியின் செயற்பாடு மகிழ்ச்சி அளிக்கும். தொழில், வியா பாரத்தில் முயற்சிக்கேற்ற வருமானம் கிட்டும் உறவினர்களின் ஆதரவுடன் சுப நிகழ்ச்சி நடந்தேறும்.

**கன்னி:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத் தத்தில் ஈடுபடுவீர்கள். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள்.

**துலாம்:** குடும்பத்தினரின் ஒத்துழைப்பு வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வீடு வந்து சேரும். அரச வகையில் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** தொழில், வியாபாரத்தில் புதிய மாறுதல் மூலம் நன்மை அடைவீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சி வெற்றி பெறும். பிள்ளைகளின் எதிர்கால நலன் குறித்து ஆலோசனை செய்வீர்கள்.

**தனுசு:** சமூகத்தில் நல்லவன் என பெயர் பெறுவீர்கள். கொடுக்கல், வாங்கல் சீராக இருக்கும். தொழில், வியா பாரத்தில் வருமானம் உயரும். உறவினர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.

**மகரம்:** சுதந்திர மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஒவ்வாத உணவுகளை உண்பதைத் தவிர்க்கவும். சுப விடயத்தில் எதிர்பார்த்த முடிவு கிடைக்கும்

**கும்பம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் ஆச்சரியப்படுவர். தொழில், வியாபாரத்தில் வருமானம் பெருகும். மனைவியின் விருப்பம் அறிந்து நிறைவேற்று வீர்கள். ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** சமயோசிதமாக செயல்பட்டு வெற்றி காண் பீர்கள். தொழில், வியாபாரத்தில் சாதனை புரிவீர்கள். விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.


# நாங்களும் யோகா செய்வோமில்ல..


## பேஸ் புக்கில் பிடித்தவை...













# ஏழையின் சிரிப்பில்...



இரு சிறுவர்கள், ஒரு ஏரி ஓரமாகச் சென்று கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன், பணக்கார வீட்டுப் பிள்ளை. மற்றவன் ஏழைச் சிறுவன். ஆற்றங்கரை ஓரத்தில், ஒரு சோடி செருப்புகள் இருப்பதை அவதானித்தனர். தூரத்தில் ஒரு விவசாயி கை,கால் அலம்பிக் கொண்டிருப்பதையும் பார்த்தனர். உடனே, இருவரும் ஒரு வேடிக்கை செய்வதற்கு தீர்மானித்தார்கள். பணக்காரச் சிறுவன் "இந்தச் செருப்பை வீசி யெறிந்து விடுவோம்.

விவசாயி வந்து பார்த்துவிட்டு, அங்கு மிங்கும் ஓடித் தேடுவான்.

மிரள மிரள விழிப்பான். நமக்கு அது நல்ல வேடிக்கையாக இருக்கும்... எனக் கூறி செருப்பைத் தூக்கி எறியப் போனான். ஏழைச் சிறுவன் தடுத்து, "உனக்கு இப்படி ஒரு செருப்புத் தொலைந்தால், உடனேயே வேறு செருப்பு வாங்கச் சக்தியுண்டு. அவனுக்கு இந்தச் செருப்பு தொலைந்து விட்டால், அவன் ஆயுள்காலம் முழுவதும் வெறும் காலுடன் தான் நடக்க வேண்டும்'' என்றான். இதில் வேடிக்கை. நான் சொல்கிறேன் பாரு! முதலாவது செருப்பைக் கீழே வைத்தாயா? உன்னிடம் உள்ள ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அதன் மேல் வை. நாமிருவரும் அந்த மரத்தில் ஒளிந்து கொள்வோம். பார், என்ன வேடிக்கை நடக்கிறதென்று..'' என்றான். இருவரும் ஒளிந்துகொள்ள,விவசாயிவந்துசெருப்பை மாட்டிக் கொள்ளப் போக, அதில் ஒரு ரூபாய் இருப்பதைப் பார்த்தான். எப்படி ரூபாய் வந்ததென்று திகைத்து, சுற்று முற்றும் பார்த்து, ஒருவரையும் காணாத படியால், ஆண்டவன் தான் கொடுத்தான் என்று பணத்தைக் கண்ணில் ஒத்திக் கொண்டு, கூப்பிய கரங்களுடன், "ஆண்டவனே, ஏழைக்கு இரங்கும் கருணாமூர்த்தி..." என்றான்.

ஏழைச் சிறுவன், பணக்காரச் சிறுவனை ஓர் இடி இடித்து, பார்த்தாயா? உன்னைக் கருணாமூர்த்தி என்கிறான். நீ செருப்பைத் தூக்கி எறிந்திருந்தால் அவன் என்ன பாடுபட்டிருப்பான். இப்போது பார்... அவனுக்கும் சந்தோஷம்; எமக்கும் ஆனந்தம். இப்படித்தான் வேடிக்கை செய்ய வேண்டும்... என்று" கூறி சிரித்துக் கொண்டே போனார்கள்.



# விஜய் சம்மதிப்பாரா?

இளைய தளபதி விஜய், அட்லீ படத்துக்குப் பின்னர் எந்த இயக்குனர் இயக்கத்தில் நடிப்பார் என ஆயிரம் கேள்விகள் சுற்றி வருகின்றன. இந்த நிலையில் அண்மையில் வாலு படத்தின் இயக்குநர் ஒரு பேட்டியில் விஜய் பற்றி மனம் திறந்துள்ளார். அதில், விஜய் வாலு படம் வெளிவருவதற்கு மிகவும் உதவினார், முதலில் அவருக்கு என்னுடைய நன்றிகள். மேலும், அவருக்காக ஒரு கதையைத் தயார் செய்து விட்டேன், அவர் சம்மதித்தால் உடனே படப்பிடிப்புத்தான் என்று அவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கு தேர்தல் முடிவுகள்

| கட்சிகள் | யாழ். | வன்னி | திருமலை | மட்டு | திகா. | ஆச. |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | 207, 577 | 89, 886 | 45, 894 | 127, 185 | 45, 421 | 14 |
| ஈழ மக்கள் ஜனநாயக் கட்சி | 30, 232 | 2, 120 | 581 | 311 | 237 | 01 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 20, 025 | 39, 513 | 83, 638 | 32, 359 | 151, 013 | 09 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 17, 309 | 20, 965 | 38, 463 | 32, 232 | 89, 334 | 04 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | 15, 022 | 1, 174 | 1, 144 | 1865 | 439 | - |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 1, 515 | 596 | 380 | 959 | - | - |
| ஈழவர் ஜனநாயகக் கட்சி | 1, 277 | 501 | - | 790 | - | - |
| அகில இலங்கை தமிழ் மகா சபை | 383 | 226 | 211 | 401 | - | - |
| ஐக்கிய சோஷலிசக் கட்சி | 303 | - | - | - | - | - |
| ஜன செத பெரமுன | 250 | 43 | 24 | 18 | 16 | - |
| மக்கள் விடுதலை முன்னணி | 247 | 876 | 2, 556 | 81 | 5, 391 | - |
| இலங்கை மக்கள் கட்சி | 246 | 99 | - | - | - | - |
| சோஷலிச சமத்துவக் கட்சி | 142 | - | - | - | - | - |
| முன்னிலை சோஷலிசக் கட்சி | 127 | 27 | 243 | 43 | 159 | - |
| நவ சிஹல உறுமய | 35 | - | 9 | 26 | 09 | - |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - | 5, 716 | - | 38, 477 | - | - |
| புரவசி பெர முன | - | 2, 022 | - | - | - | - |
| ஜனநாயக ஐக்கிய முன்னணி | - | 98 | - | - | - | - |
| மவ்பிம மக்கள் கட்சி | - | 42 | - | - | - | - |
| ஐக்கிய மக்கள் கட்சி | - | 13 | 88 | 46 | 157 | - |
| ஐக்கிய சமாதான முன்னணி | - | 9 | 17 | - | 136 | - |
| இலங்கை தேசிய படை | - | - | 18 | - | - | - |
| நமது தேசிய முன்னணி | - | - | - | 341 | - | - |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | - | - | - | - | 33, 102 | - |
| பொதுஜன பெரமுன | - | - | - | - | 64 | - |
| ஜனநாயகக் கட்சி | - | - | 279 | 424 | 231 | |
| சுயேச்சைக் குழு 01 | 67 | 53 | 44 | 177 | 17 | - |
| சுயேச்சைக் குழு 02 | 1, 706 | 26 | 80 | 16 | 13 | - |
| சுயேச்சைக் குழு 03 | 224 | 166 | 220 | 13 | 13 | - |
| சுயேச்சைக் குழு 04 | 1,979 | 188 | 12 | 12 | 17 | - |
| சுயேச்சைக் குழு 05 | 201 | 37 | 19 | 41 | 42 | - |
| சுயேச்சைக் குழு 06 | 1, 442 | 227 | 6, 476 | 30 | 13 | - |
| சுயேச்சைக் குழு 07 | - | 37 | - | 63 | 08 | - |
| சுயேச்சைக் குழு 08 | - | 41 | - | 61 | 92 | - |
| சுயேச்சைக் குழு 09 | - | 19 | - | 128 | 77 | - |
| சுயேச்சைக் குழு 10 | - | 55 | - | 30 | 18 | - |
| சுயேச்சைக் குழு 11 | - | - | - | 1, 135 | 07 | - |
| சுயேச்சைக் குழு 12 | - | - | - | 46 | 53 | - |
| சுயேச்சைக் குழு 13 | - | - | - | 25 | 14 | - |
| சுயேச்சைக் குழு 14 | - | - | - | 224 | 09 | - |
| சுயேச்சைக் குழு 15 | - | - | - | 1, 134 | 18 | - |
| சுயேச்சைக் குழு 16 | - | - | - | 38 | 30 | - |
| சுயேச்சைக் குழு 17 | - | - | - | 25 | 45 | - |
| சுயேச்சைக் குழு 18 | - | - | - | 16 | - | - |
| சுயேச்சைக் குழு 19 | - | - | - | 126 | - | - |
| சுயேச்சைக் குழு 20 | - | - | - | 19 | - | - |
| சுயேச்சைக் குழு 21 | - | - | - | 40 | - | - |
| சுயேச்சைக் குழு 22 | - | - | - | 13 | - | - |
| சுயேச்சைக் குழு 23 | - | - | - | 94 | - | - |
| சுயேச்சைக் குழு 24 | - | - | - | 84 | - | - |
| சுயேச்சைக் குழு 25 | - | - | - | 23 | - | - |
| சுயேச்சைக் குழு 26 | - | - | - | 580 | - | - |
| சுயேச்சைக் குழு 27 | - | - | - | 20 | - | - |
| சுயேச்சைக் குழு 28 | - | - | - | 22 | - | - |
| சுயேச்சைக் குழு 29 | - | - | - | 13 | - | - |
| சுயேச்சைக் குழு 30 | - | - | - | 40 | - | |
| செல்லுபடியான வாக்குகள் | 300, 309 | 164, 775 | 180, 396 | 238, 846 | 326, 195 | |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 25, 496 | 17, 155 | 10, 542 | 13, 538 | 18, 423 | |
| அளிக்கப்பட்ட வாக்குகள் | 325, 805 | 181, 930 | 190, 938 | 252, 384 | 344, 618 | |
| மொத்த வாக்களார் | 529, 239 | 253, 058 | 256, 852 | 365, 167 | 465, 757 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையகத்திலிருந்து 8 தமிழ்ப் பிரதிநிதிகள்

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரு பிரதான அரசியல் கட்சிகளிலிருந்தும் மலையகத்தில் 8 தமிழ்ப் பிரதிநிதிகள் இம்முறை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் 5 தமிழ்ப் பிரதிநிதிகளே சபைக்குச் சென்றிருந்தனர். அதிலும் நுவரெலியா மாவட்டத்திலிருந்தே இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

எனினும், இம்முறை கண்டி, பதுளை ஆகிய மாவட்டங்களிலும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் வென்றெடுக்கப்பட்டுள்ளது. 1994ஆம் ஆண்டுக்குப் பிறகு கண்டி மாவட்டத்திலிருந்து தமிழ்ப் பிரதிநிதியொருவர் இம்முறையே நாடாளுமன்றம் செல்கிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

கண்டி மாவட்டத்தில் தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்ட வேலுகுமார் என்பவர் வெற்றி பெற்றுள்ளார். கண்டி மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துக் களமிறங்கியிருந்தாலும் அதனால் வெற்றியை நோக்கி நகரமுடியாமல் போனது.

பதுளை மாவட்டத்திலும் தமிழ்ப் பிரதிநிதித்துவம் என்பது கேள்விக்குறியாகவே இருந்து வந்தது. கடந்தமுறை நடைபெற்ற தேர்தலில் ஒருவர்கூடத் தெரிவாகவில்லை. ஆனால், இம்முறைஇரண்டுபேர்வெற்றிபெற்றுள்ளனர். அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ் ஆகிய இருவருமே மக்களின் ஆணையைப் பெற்றுள்ளனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் களமிறங்கி வெற்றிபெற்ற வடிவேல் சுரேஷ், ஜனவரி 8ஆம் திகதி நடைபெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் தனது ஆதரவை ஐக்கிய தேசியக் கட்சிக்கு வழங்கியிருந்தார். அதன் பின்னர் மாகாண அமைச்சுப் பதவியையும் அவர் வகித்த நிலையிலேயே பொதுத் தேர்தலிலும் களமிறங்கினார்.

மலையக மக்கள் முன்னணியின் உறுப்பினரான அரவிந்தகுமார் கடந்த மாகாண சபைத் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். ஆனால், பொதுத் தேர்தலில் தற்போது வெற்றி பெற்றுள்ளார். ஊவா மாகாணசபைத் தேர்தலில் மலையக மக்கள் முன்னணி தனித்துக் களமிறங்கியிருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

அத்துடன், ஊவா மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ஹரின் பெர்னாண்டோ துறந்ததையடுத்து அந்த வெற்றிடத்துக்கு பதுளை மாவட்ட பட்டியலில் அடுத்த இடத்தில் இருந்த கே.வேலாயுதம் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

இம்முறைத் தேர்தலில் அவர் போட்டியிடவில்லை. அவருக்கு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. எனவே, மூன்று தமிழ் எம்பிக்கள் பதுளை மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் தனது சொந்தச் சின்னத்தில் களமிறங்கிய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 10 ஆயிரத்து 259 வாக்குகளைப் பெற்றிருந்தாலும் அக்கட்சியால் ஓர் ஆசனத்தையேனும் கைப்பற்ற முடியாமல் போனது.

நுவரெலியா மாவட்டத்திலிருந்து மாத்திரம் 6 தமிழ் வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர். தமிழ் முற்போக்குக் கூட்டணி சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியில் களமிறங்கிய பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், திலகராஜ் ஆகியோரும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம் ஆகியோரும், ஐ.தே.கவில் போட்டியிட்ட உதயகுமாரும் வெற்றி பெற்றுள்ளனர்.

2010ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஸ்ரீரங்கா இம்முறை தேர்தலில் போட்டியிடவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியலில் அவர் இடம்பிடித்துள்ளார்.


எனினும், தனது கட்சியான பிரஜைகள் முன்னணியின் சார்பில் அவர் 11 பெண் வேட்பாளர்களை களமிறக்கியிருந்தார். அவர்களால் 2 ஆயிரத்து 250 வாக்குகளை மாத்திரமே பெற முடிந்துள்ளது.

அதேவேளை, மலையகத்தின் இதர மாவட்டங்களான மாத்தளை, இரத்தினபுரி, கேகாலை, மொனறாகலை ஆகிய மாவட்டங்களிலிருந்து தமிழ்ப் பிரதிநிதிகள் எவரும் தெரிவாகவில்லை. கேகாலை மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தனித்துக் களமிறங்கியிருந்தாலும் அதனால் வெற்றிபெற முடியவில்லை. தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் வேட்பாளர் ஒருவரைக் களமிறக்கியிருந்தது.

அமையவுள்ள எட்டாவது நாடாளுமன்றத்தில் மலையகத் தமிழ் மக்களுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள பிரதிநிதிகள் அனைவரும் குரல் கொடுத்து அவர்களுக்கு விடியலைப் பெற்றுக் கொடுக்கவேண்டும் என புத்திஜீவிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (த)

# வட்டிவெளி அரச காணியில் திடீரென வந்தமர்ந்த புத்தரும், பிள்ளையாரும்

அம்பாறை, ஓக. 20
பொத்துவில் பிரதேச வட்டிவெளியில் அமைந்திருக்கும் அரச காணியில் பௌத்த மற்றும் இந்துமத தெய்வங்களின் சிலைகள் இனந்தெரியா தோரால் திடீரென வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சிலைகள் கடந்த திங்கட்கிழமை இரவே வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.



தேர்தல் முடிவுகளில் அனைவரும் ஆர்வமாக இருந்தவேளை இரவோடு இரவாக சிலை வைப்பதற்கான மேடை, கட்டப்பட்டே அங்கு சிலைகள் வைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகின்றது. குறித்த காணி உகந்தை முருகன் கோவிலுக்குச் சொந்தமானது என்று உரிமைகோரப்பட்டுள்ளது என்றும் கோவில் நிர்வாக சபை உறுப்பினர்களால் அக்காணியைச் சுற்றிக் கம்பி வேலியிடப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தவிடயம் பொத்துவில் பிரதேச செயலகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. அதனைத் தொடர்ந்து காணிக்கான உரிமைப்பத்திரத்தைச் சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர் முஸர்தால் அங்கு அறிவித்தல் ஒட்டப்பட்டது. இவ்வாறு இருமுறை அறிவித்தல் ஒட்டப்பட்டு சுமார் 6 மாதங்கள் கடந்த போதும் எவராலும் உறுதிப்பத்திரம் சமர்ப்பிக்கப்படாதிருந்த நிலையிலேயே அந்த அரச காணியில் அத்து மீறி தற்போது சிலை வைக்கப்பட்டுள்ளது.

மறைந்த முன்னாள் பொத்துவில் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.அஸீஸின் காலத்தில் இந்த அரச காணி பொது மைதானமாக்குவதற்காக மண் நிரப்பப்பட்ட தென்றும், பொத்துவில் பிரதேச செயலகத்தின் அறிவித்தலை அவமானப் படுத்தும் வகையில் அரச காணியில் புத்தர் சிலையும் பிள்ளையார் சிலையும் வைக்கப்பட்டுள்ளன என்றும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர். (ற-10)

# மின்னிணைப்பு வழங்குமாறு ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை

முல்லை மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் மின் இணைப்பு வழங்கல் முற்றுப் பெறாத நிலையில் உள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக பேராறு கிராமம் பின்தங்கிய கிராமம். அத்துடன் வசந்தபுரம், கெருடமடு மன்னாகண்டல் போன்ற கிராமங்களில் 75 வீதமான மக்கள் தோட்டத் தொழிலாளர்களாவர். திருகோணமலை மாவட்டத்திலிருந்து ஏதுமற்ற நிலையில் இடம்பெயர்ந்து வந்த மக்கள். இவர்களுக்கான மின் இணைப்பு இதுவரையில் வழங்கப்படவில்லை. அரசால் வழங்கப்பட்ட வீடுகளுக்கான பணம் போதாத நிலையிலும் கடன் பட்டு வீட்டைக்கட்டி முடித்து கடனோடு கடனாக மின்னிணைப்பு வேலைகள் செய்யப்பட்ட போதிலும் இன்றும் குப்பி விளக்கிலேயே காலத்தை ஓட்டுகின்றனர்.

இவர்களுக்கான மின் வழங்கலுக்கான இணைப்புக் கம்பங்கள் கூட நாட்டப்படவில்லை. அரசியல் தலைவர்கள் மேடையில் வார்த்தைகளை அள்ளி வீசுகின்றனர். ஆனால் எமது நிலையை கருத்தில் கொள்வதாயில்லை என மக்கள் தெரிவிக்கின்றனர். (ற-500)

# விபத்தில் ஒருவர் காயம்

தென்மராட்சி ஓக.20
வேகமாகப் பயணித்த ஓட்டோ கட்டுப்பாட்டை இழந்து அதே திசை யில் பயணிகளை இறக்கிக் கொண்டிருந்த மினி பஸ்ஸின்மீது மோதியது. அதில் ஓட்டோ சாரதி காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நண்பகல் நுணாவில் கிழக்கு ஏ-9 வீதியில் ஐயர் வீதிச் சந்தியில் நடந்துள்ளது.

கைதடியிலிருந்து பயணிகளை ஏற்றிவந்த ஓட்டோ சாவகச்சேரி யில் அவர்களை இறக்கித் திரும்பிச் செல்கையில் விபத்து இடம்பெற்றுள்ளது. ஓட்டோவுக்குள் சிக்கியசாரதியை மினிபஸ்ஸில் பயணத்தை மேற்கொண்டவர்கள் சிரமத்தின் மத்தியில் மீட்டு வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். கைதடி கிழக்கைச் சேர்ந்த நித்தியானந்தன் றஜீபன் (வயது-20) என்பவரே காயமடைந்தவராவார். (ற-9)


## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் சின்னத்தம்பி சிவமகாராஜா



(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், தலைவர் - தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம், நிர்வாக இயக்குநர் - நமது ஈழநாடு பத்திரிகை.)

தோற்றம் 28.06.1938 மறைவு 20.08.2006

அன்புச் சகோதரனே ஒன்பது ஆண்டுகள் கடந்தாலும் ஆறாது எம் துயரம் என்றும் எங்கள் நெஞ்சங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரர்கள், மருமக்கள், உறவினர்கள்.
மாத்தகம், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

## கலையாத நினைவுகளுடன் கலைந்த பதினான்காண்டுகள்



அன்னைமடியில் 07.09.1940 ஆண்டவன் அரவணைப்பில் 26.07.2001

அமரர்
வைரமுத்து வரப்பிரசிங்கம்
(ஓய்வுபெற்ற அஞ்சலக ஊழியர்- தெல்லிப்பழை, கொல்லங்கலட்டி)
திதி: பூர்வபக்க ஷஷ்டி 20.08.2015

எமது குடும்பத்தின் குலவிளக்காய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் திருவுருவாய், ஊருக்கோர் எடுத்துக்காட்டாய் எம்மை வளர்த்த அப்பாவே!

எமை தவிக்கவிட்டுச் சென்று பதினான்கு ஆண்டுகள் ஓடோடி மறைந்ததே அப்பா. எங்கள் உடலில் உயிர் இருக்கும் வரை உங்களை நம் உள்ளங்களில் நிறுத்தி வைத்திருப்போம். உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி: கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
தற்காலிக முகவரி: கலைவாணி ஒழுங்கை, அம்மன் கோவிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் முருகேசு சண்முகம்



திதி: பூர்வபக்க சஷ்டி

தோற்றம் 18.04.1926

மறைவு 15.08.2010

ஆண்டும் ஐந்து ஆனதையா - ஆனாலும்
அன்பு மட்டும் மாறவில்லை
மீண்டும் ஓர் உறவு என்றால் அது
மேன்மை தந்த உங்கள் நினைவுகளே
வேண்டும் வரங்கள் தந்து அருள்புரியும் எம்
வேலன் திருவடி நிழல் என்றும் காவலே.

இல.57, மருதடி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 12ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

செல்வி மங்கையர்க்கரசி (மங்கை) பொன்னம்பலம்



மலர்வு: குப்பிளானில் 23.08.1978

உதிர்வு: லண்டனில் 20.08.2003

அன்பின் திருவுருவாய்
அறிவுச்சுடர் விளக்காய்
பாசத்தைப் பொழிந்த
இனிய இளைய மகளே!
வசந்த காலத்தில் மின்னலை
மலர்ந்த மங்கையே!
மறக்காது அம்மா உன் நினைவு
உன் நினைவில் வாழும்

அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார்.
"பொன்மணி வாசா"
குப்பிளான் தெற்கு.
077 852 6152

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியையான
திருமதி சுமதி இளங்கோ ஞானியாரின்
அன்புத் தாயார்
திருமதி கனேசம்மா தங்கராசா
அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஆசிரியர் நலன்புரி கழகம்
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்

## கணினி தொழில்நுட்ப துறைசார் நிபுணரின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பம் கோரல்

யாழ். மாநகர சபையின் அனைத்துப் பிரிவுகளையும் கணினிமயப்படுத்துவற்குத் தேவையான வன்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும், மென்பொருள்களை உருவாக்குவதற்கும் ஏதுவாக கணினித் தொழில்நுட்பத்துறைசார் நிபுணரின் சேவையினைப் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் தகுதியான கேள்விதாரரிடமிருந்து கோரப்படுகின்றன.விண்ணப்பதாரி தகவல் தொழில்நுட்பத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவராகவும், கணினி தொழில்நுட்ப துறைசார் தொழிலில் அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமைகளை உடையவர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பத்தினை 26.08.2015 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, ஆணையாளர், யாழ். மாநகரசபை என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். மேலதிக விவரங்களுக்கு 0212228874 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.05.2014 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் - 23.08.2015 முதல் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். பிராந்திய தலைமையகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் |
| ஊர்காவற்றுறை | - |
| நெல்லியடி | - |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| | அளவெட்டி |
| சாவகச்சேரி | கொடிகாமம் |
| | கைதடி |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிராந்திய தலைமையகம்,
கன்னாதிட்டி வீதி,யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூரில் இசைச் சங்கமம்

யாழ்ப்பாணம்,ஓக.20

சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் ஆலயத்தின் பெருந்திரு விழாவை முன்னிட்டு தெய்வீக இசைச் சங்கமம் திருவிழாக் காலத்தில் தினமும் நடைபெறவுள்ளன.

இரண்டாம் திருவிழாவான இன்று வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு இராமநாதன் நுண்கலைத் துறை இரண்டாம் வருட மாணவி செல்வி. அனுஷா ரகுநாத சர்மாவின் இசைக் கச்சேரி இடம்பெறும். (ஐ)

## விளக்கமறியலில் இருக்கும் காலத்தை தண்டனையில் இருந்து நீக்கக் கோரிக்கை

கொழும்பு, ஓக.20

குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவருக்கு குற்றம் தொடர்பில் தண்டனைகள் விதிக்கப்படும் போது, அந்தச் சம்பவம் சம்பந்தமாக அவர் விளக்கமறியலில் இருந்துள்ள காலத்தை தண்டனைக் காலத்திலிருந்து குறைக்கும் சட்டங்கள் ஆக்கப்படுவது குறித்து கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதியான லலித் ஜயசூரிய சட்டமா அதிபரின் கவனத்துக்குச் சமர்ப்பித்துள்ளார்.

அது காலத்தின் அவசியமொன்று என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள மேல் நீதிமன்ற நீதிபதி அது சம்பந்தமாக சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளார்.

ஐந்து கிலோ வரையிலான ஹெரோயினை தம்வசத்தில் வைத்துக் கொண்டு விற்பனை செய்த குற்றமொன்றுக்குக் குற்றவாளியாகியிருந்த இராணுவ மேஜர் கமல் சாந்த காரியவசம் என்பவருக்கான தண்டனைகளைக் குறைக்குமாறு அவரது சட்டத்தரணியினால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்திலேயே மேல்நீதிமன்ற நீதிபதி இது சம்பந்தமாகச் சட்டமா அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தார்.

இந்தியச் சட்டத்துக்கு அமைய ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக கைது செய்யப்பட்ட ஒருவர் விளக்கமறியலில் கழித்திருந்த காலத்தை அவரது தண்டனைக் காலத்திலிருந்து குறைக்கும் முறைமையொன்று நடைமுறையில் இருந்தாலும் கூட, அது இலங்கையின் சட்டத்தில் இன்னமும் உள்ளீர்க்கப்பட்டிருக்கவில்லை எனவும் சுட்டிக் காட்டியிருந்த மேல்நீதிமன்ற நீதிபதி லலித் ஜயசூரிய அதை இலங்கையின் சட்டத்தில் உள்ளடக்குவது காலத்தின் தேவை எனவும் சுட்டிக் காட்டியிருந்தார். (ற-22)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்,ஓக.20

கோப்பாய் சமூக சேவா சங்க பாலர் பகல் விடுதி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. வே.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ரி.ஜெயசீலன் கலந்து கொள்வார். (ஐ)

## பஸ்களில் சமிக்ஞை வசதி இல்லாததால் சிரமம்

போக்குவரத்து சபை மற்றும் பஸ்களில் தனியார் இறங்குவதற்கான சமிக்ஞை பயணிகள் ஒலி எழுப்பும் வசதி இல்லாததால் மக்கள் உரிய இடத்தில் இறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று பயணிப் போர் தெரிவித்தனர்.

குறிப்பாகப் பஸ்ஸின் பின்புறமாக உள்ள பிரயாணிகள் சன நெருக்கடிக்கு மத்தியில் முன்னால் சென்று இறங்கமுடியாத நிலையில் நிறுத்துவதற்கான சமிக்ஞை (பெல்) இல்லாததால் பெரும் சிரமத்தை அடைகின்றனர்.

அவர்களில் பலர் பிள்ளைகளோடும் கொண்டு செல்லும் பொருள் களோடும் புயணிப்பதை அவதானிக்க முடி கிறது. எனவே பஸ்களில் நிறுத்த வேண்டிய இடத்தில் இறங்கக்கூடியதாக அத்தனை பேருந்துகளிலும் சமிக்ஞை ஒலியெழுப்பும் வசதியை ஏற்படுத்த பொருத்த கட்டாயப் படுத்துமாறு மக்கள் கேட்டுள்ளனர். (ற-500)

## நல்லூர் ஆலயச் சூழலில் ஒழுக்கத்தை கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 20

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தனின் வருடாந்த மகோற்சவ காலத்தில் ஆலய சுற்றாடலில் மாமிச உணவு, மதுபானம், புகைப் பிடித்தல் என்பன முற்றாக தவிர்க்கப்பட வேண்டும் என்றும் ஆலய திருவிழாவில் கலந்து கொள்ளும் பக்தர்கள் எமது கலை, கலாசார பண்புகளுக்கு அமைய உடையணிந்து வரவேண்டும் என்றும் யாழ். மாநகராட்சி மன்றம் கேட்டுள்ளது.

ஆலயத்தின் சுற்றாடல் தியான பூமியாகும். ஆகையால் பக்தர்கள் அமைதியையும் புனிதத்தையும் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஆலய சூழலில் பக்தர்கள் புனிதத்தைக் கண்டிப்பாக கடைப்பிடிப்பதோடு மாமிச உணவு விற்பனை, புகைப்பிடிப்பது, மதுபான பாவனை என்பன முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ற-17)


### வீடு வாடகைக்கு

கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு: 075 904 8775

### பணியாளர் தேவை

கொழும்பு, தெஹிவளையில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றுக்கு ஆளுமைமிக்க பெண் அலுவலர் வேலைக்குத் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.

(23.08.2015 ஞாயிற்றுக்கிழமைக்கு முன் தொடர்பு கொள்ளவும்)

தொடர்பு: 021 221 7990, 077 021 3712

### பராமரிப்பாளர் தேவை

வெளிநாட்டிலிருந்து இங்கு வந்து வசிக்கும் தமிழ் குடும்பம் ஒன்றின் சிறுபிள்ளையை தங்கியிருந்து பராமரிப்பதற்கு கல்வி அறிவுடைய பெண் பராமரிப்பாளர் தேவை.

தொடர்பு: 077 065 2097

### விற்பனைக்கு

LF - XXXX இசுசு (யப்பான்) Full Body 10½ அடி லொறி விற்பனைக்குண்டு.

தொடர்பு : 077 623 7956

### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை வீதி " சயன்ஸ் அக்கடமி" ரியூசன் சென்ரருக்கு அருகில் வீடு கிணற்றுடன் சேர்ந்த மூன்று பரப்பு ஆதனம் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு : 077 446 9371 நரேஷ்
சந்திரதாசன் 077 610 6760
சிவா (416)845 8509

### வீடு வாடகைக்கு

வட்டு இந்துக்கல்லூரிக்கு மிக அண்மையில் Carpet Main Road முகப்பு, சமையலறை, சாப்பாட்டறை அடங்கலான 6 அறைகள்,வசதியான வீடு தளபாடங்களுடன், உடன் குடிபுகலாம்.

தொடர்பு: 077 203 5419

### தவறவிடப்பட்டது

பிலேந்திரன் எமில்ராஜ் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் யாழ்ப்பாணத்திற்கும் தபால்கட்டைச் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது.

தொடர்பு: 077 600 0367, 077 309 7496

### விஜிதா ஓட்டோ சேவை

நல்லூர், சந்நிதி, தெல்லிப்பழை, பொன்னாலை ஆகிய கோயில் திருவிழாவை முன்னிட்டு குறைந்த கட்டணத்தில் விசேட ஓட்டோ சேவைகள் நடைபெறும்.

தொடர்பு: 077 211 9185

### இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார்.

ஓம் சக்தி அருள் வாக்குப்பெற்ற பரம்பரை ஜோதிடர்

S.N.குமாரசாமி

கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 5.00 மணிவரை.
இல.424/11,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சிவன்கோவிலடி ரிகால் ரான்ஸ்போட் எதிரில்)
தொ.பே. 072 681 6681, 072 681 6691

(62359) (45.5.7)



### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

### WALK -IN - INTERVIEW

Walk in interview for appointments to the following posts will be held at the Board Room of this University on the dates and the time indicated against the posts.

**Faculty of Science** — **27.08.2015**

Posts of Temporary Lecturer/Temporary Demonstrator in Fisheries — 11.00 a.m

**Faculty of Arts** — **31.08.2015**

Posts of Temporary Lecturer/Temporary Tutor in Home Economics / Media Studies/ Philosophy/ Planning — At 9.30 a.m

**01.09.2015**

Posts of Temporary Lecturer/Temporary Tutor in Sociology/Political Science/ History /Archaeology — At 9.30 a.m

Posts of Temporary Lecturer/Temporary Tutor in Psychology/ Hindu Civilization/ Hindu Philosophy /Drama & Theatre Arts/Fine Arts /Economics — At 1.30 p.m

**02.09.2015**

Posts of Temporary Lecturer/Temporary Tutor/Temporary Instructor in Linguistics/ English Literature/English Language Teaching/ /Tamil / Translation Studies — At 9.30 a.m

Posts of Temporary Lecturer/Temporary Tutor in Christian Civilization/ Geography — At 1.30 p.m

Candidates who have the required qualifications are invited for a Walk in Interview, with self prepared applications for the posts preferred.

**Candidates who are awaiting the results of the final degree examination are also called upon for the above Walk in Interview.**

Interested candidates with the required qualifications are expected to be present for the interview at time scheduled above with relevant certificates, NIC and self prepared application.

Registrar
University of Jaffna
19.08.2015



### ஜனநாயகப் போராளிகள் கட்சி

### பொதுத் தேர்தல் - 2015

இந்தப் பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட மக்கள் அளித்த தீர்ப்பை தலை வணங்கி ஏற்றுக் கொள்கின்றோம்.

மிகக் குறுகிய காலத்தில், போதிய பிரசார வசதிகளோ, பின்புல ஆதரவோ, நிதி ஆதாரங்களோ இன்றி தனித்து மிகுந்த இக்கட்டுக்கு மத்தியில் நாம் முன்னெடுத்த பரப்புரையை ஏற்றும் -

நாம் இராணுவப் புலனாய்வாளர்களினாலும், தென்னிலங்கை அரசியல் சக்திகளினாலும், அரசினாலும், வெளிநாட்டு உளவுப் படைகளினாலும் ஏவிவிடப்பட்ட கூலிப் பட்டாளங்கள் என்ற சாரப்பட பெரிய அளவில் தமிழ் மக்கள் மத்தியில் மிகவும் கனகச்சிதமாக முன்னெடுக்கப்பட்ட, திட்டமிடப்பட்ட, பொய்ப்பிரசாரத்துக்கு மத்தியிலும் எமக்கு வாக்களித்த அன்பு நெஞ்சங்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

நாம் இந்தத் தேர்தலில் குறிப்பிடத்தக்களவு வாக்குகளைப் பெற்று வெற்றி பெறாவிட்டாலும், இலங்கையில் அரசினால் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் "முன்னாள் போராளிகள் " என்ற அடையாளத்தோடும், வெளிப்படுத்தலோடும் தங்கள் ஆதரவாளர்களுடன் சேர்ந்து வெளிப்படையாகத் தோன்றி அரசியல் செய்யலாம் என்ற நம்பிக்கை உணர்வை இந்தத் தேர்தல் நடவடிக்கை மூலம் நிலைநாட்டுவதில் வெற்றியீட்டியிருக்கின்றோம்.

எமது தமிழ் மக்களின் வாக்குகள் மூலம் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை ஈட்டியிருக்கும் பிரதிநிதிகள், எம் மக்களின் எதிர்பார்ப்புகளை, அபிலாசைகளை, நிறைவு செய்யும் விதத்தில் செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கும் அதேவேளையில், அத்தகைய திசையிலான முயற்சிகளுக்கு எமது ஒத்துழைப்பையும் முழு அளவில் வழங்குவோம் என உறுதிப்படுத் துகின்றோம்.

எமது கட்சியை கட்டுறுதியான ஜனநாயக அமைப்பாகப் பலப்படுத்தும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதுடன் ஜனநாயகச் செயற்பாடுகள் ஊ டாக எமது மக்களுக்கு நியாயம் கிட்டுவதற்கான முயற்சிகளில் முழு முனைப்புடன் ஈடுபடுவோம் என்றும் உறுதி கூறுகின்றோம்.

இந்தத் தேர்தலில் எங்களு க்கும் பக்கபலமாக இருந்து ஆதரவளித்தோர், ஒத்துழைத்தோர், எமக்காக குரல் எழுப்பிய ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.

சிலந்திச் சின்னத்தில்
சுயேச்சைக் குழு - 4 இல் போட்டியிட்ட
ஜனநாயகப் போராளிகள் கட்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவர் இடிந்து விழுந்து குடும்பஸ்தர் சாவு

பளை, ஓக.20

ஷெல் வீச்சுக்களால் சேதமடைந்து காணப்பட்ட வீட்டுச் சுவர் சரிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உடல் நசியுண்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுமுன் தினம் மாலை 5.30 மணியளவில் பளை, மாசார் பாட சாலைக்கு அருகில் நடந்துள்ளது.

திருகோணமலையில் குடும்பத்தினருடன் தங்கியுள்ள இவர் தேர்தலில் வாக்களிப்பதற்காக சொந்த இடத்துக்கு வந்திருந்தார் எனவும் நேற்றுமுன்தினம் மாலை சேதமடைந்து காணப்பட்ட தனது வீட்டை உடைக்கும் வேலையில் ஈடுபட்ட வேளையில் எதிர்பாராத விதமாக சுவர் சரிந்து அவர் மீது வீழ்ந்ததில் உடல் நசிந்து சாவடைந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதே இடத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை மகேந்திரன் ( வயது 48 ) என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பாக பளை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (ற-9)

# தற்போது கிடைத்த வெற்றியை அர்த்தமுள்ளதாக்க வேண்டும்

## மு.கா.செயலாளர் ஹஸனலி தெரிவிப்பு

அம்பாறை, ஓக.20

தற்போது கிடைத்துள்ள வெற்றியை சிறுபான்மைச் சமூகங் கள் அர்த்தமுள்ளதாக்க வேண்டும். பெரும்பான்மை சமூகத்தை விடவும் இது எமது கைகளிலேயே தங்கியுள்ளது. – இவ்வாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகமும், சுகாதார இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹஸனலி தெரிவித்துள்ளார்.

தேர்தல் வெற்றி தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நீண்ட காலத்துக்குப் பின்னர் மித வாதபோக்குள்ள பெரும்பான்மை சமூகத்தினரும், சிறுபான்மை சமூகங்களும் இன்றைய வெற்றி யைக் கொண்டு வந்துள்ளனர். ஜனவரி 8 இல் ஏற்பட்ட நல்லாட்சியை நீடித்து நிலைக்கவிடாது இனவாத சக்திகள் பல்வேறு முட்டுக்கட்டைகளையும் நெருக்கடிகளையும் கொடுத்து வந்தனர்.

எனினும்நடைபெற்றுமுடிந்தபொதுத் தேர்தல் மூலம் அந்த நல்லாட்சி மீண்டும் தொடர்ந்து நீடித்து நிலைப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது. இதற்கு ஏதுவாக தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒருங்கிணைந்து தமது பேரம் பேசும் சக்தியை வலுவூட்டும் சந்தர்ப்பமும் கிடைத்துள்ளது.

**தீர்வு**

கிடைத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள இனப்பிரச்சினைக்கு நாம் தீர்வைப்பெற்றே ஆக வேண்டும். இந்த விடயத்தில் பிடிவாதங்களைத் தளர்த்தி நாம் பெற்ற வெற்றியை அர்த்தமுள்ளதாக்க வேண்டும். இதற்கான வழிவகை பெரும்பான்மை சமூகத்தை விடவும் எமது கைகளிலேயே உள்ளது.

**கட்டுப்பாடு**

திகாமடுல்ல மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் இம்முறை முஸ்லிம் காங்கிரஸுக்கு எதிராக மக்களைத் திசை திருப்பவென மிகமோசமான போலிப் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பணமும் வாரி இறைக்கப்பட்டது. ஆனால் எமது வேட்பாளர்கள் தலைமைத்துவக் கட்டுப்பாட்டுடன் செயற்பட்டதோடு, மக்களும் போலி மாயைகளில் மயங்காது எமக்கு வெற்றியைத் தந்துள்ளனர்.

ஏன்சிலர் ஹெலிகொப்டர் சாகஸங்கள் காட்டிக்கூட எமது மக்களின் வாக்குகளைச் சூறையாட முயன்றும் அது பயனளிக்கவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் மீது அசையாத பற்றுக் கொண்டு எமது மக்கள் தந்துள்ள ஆணையை நாம் மதித்து நன்றி பகர்வதுடன், எம்மக்களின் எதிர்பார்ப்பையும், நம்பிக்கையையும் நாம் நிறைவேற்றுவோம் – என்றார். (ற-30)

# மரண அறிவித்தல்கள்

## நவரத்தினம் பாலச்சந்திரன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பாலச் சந்திரன் 19.08.2015 புதன் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் (ஆசிரியர்) - தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் இலட்சுமிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் அற்புததேவியின் அன்புக் கணவரும் சுரேந் திரன் (லண்டன்), ரவீந்திரன், டாக்டர் குமரேந்திரன் (விரிவுரையாளர் - களனிப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசரஸ்வதி, ஜெயச்சந்திரன் ஆகியோரின் சகோதரனும் சாமினி, கிருசாந் தினி ஆகியோரின் மாமனாரும் பேராளன், வாகினி, றோசினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2015) வியாழக்கிழமை ஊரெழுவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 4.00 மணியளவில் பொக்கணை மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அற்புததேவி - மனைவி
குடும்பத்தினர்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

## சின்னத்தம்பி இரவீந்திரன் (ரவி)

(உரிமையாளர்
R.S பல்பொருள் வாணிபம் ஆனைக்கோட்டை)



அம்பனை, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் வீதி, 3ஆம் கட்டையடி, ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இரவீந்திரன் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (இருபாலை), மற்றும் பசுபதி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்துரை - மற்றும் மகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் சத்தியானந்தா தேவி (சத்தியா - ஆசிரியை யா/ மானிப்பாய் சென் ஆன்ஸ் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும் மேனகா, மகேந்திரன் (ரோசா - சுவிஸ்), பாலேந்திரன் (கிளி), அமுதா (கனடா), காலஞ்சென்ற கருணாநிதி (பவா) மற்றும் சியாமளா (சுவிஸ்), ரேணுகா (லண்டன்), இரகுலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ரேவதி, சுதேந்திரன் (சுவிஸ்), சாந்தா (லண்டன்), குணேந்திரன் (லண்டன்), தர்மகுலசிங்கம் (ஓய்வூதியர்), சாந்தி (சுவிஸ்), பவானி, ரவீந்திரன் (கனடா), பாலச்சந்திரன் (சுவிஸ்), ஜெயசுதன் (லண்டன்), கலாவதி (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் சிறீதரன் (உரிமையாளர், ஸ்ரீ அம்பாள் வெல்டிங்), சுகிர்த ரஞ்சன் (லண்டன்), ரஜீதா தேவி (சுவிஸ்), ஜெனற் (லண்டன்) ஆகியோரின் சகலனும் டாக்டர் செருஜனன் (களுபோவல வைத்தியசாலை), யதுர்சன் (ஊவா வெல்லச பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்பு மாமனும் பர்மிலா (தாதியர் பயிற்சிக் கல்லூரி இறுதி வருட மாணவி), சுஜிந்தன் (யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட 2 ஆம் வருட மாணவன்), பிருந்தா, சுகிந்தா ஆகியோரின் பெரிய தந்தையும், குணரட்ணத்தின் (அன்ரி) பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.08.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக காக்கை தீவு எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டையடி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல்:
சத்தியானந்தா தேவி
மனைவி.

# மரண அறிவித்தல்கள்

## பூங்காவனம் (பூங்காச்சி)



மலர்வு 12.09.1927 உதிர்வு 17.08.2015

உடுவிலைப் பிறப்பிடமாகவும் 29, அரச வீதி, நல்லூரரை வசிப்பிடமாகவும் கொண்ட பூங்காவனம் (பூங்காச்சி) 17.08.2015 திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் இரண்டாவது புதல்வியும் காலஞ்சென்ற சின்னத்தம்பிரட்ணத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற ராஜரட்ணம் (UK) மற்றும் பரமேஸ்வரி, விஜயரட்ணம் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற விசாலாட்சியின் பாசமிகு சகோதரியும் பாக்கியலட்சுமி, தம்பித்துரை, திருப்பாவை ஆகியோரின் மாமியாரும் லம்போதரன், வித்தகன், விபூஷணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மு.ப 10.00 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் - மருமகன்
தம்பிப்பிள்ளை
தம்பித்துரை.

T.P - 0212229176
00442089301690

## விஜயமலர் - சிறீஸ்கந்தவேள்



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம், மயிலங்காட்டைப் புகுந்த இடமாகவும் தற்போது சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயமலர் - சிறீஸ்கந்தவேள் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னராசா - கனகம்மா தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான மயிலங்காடு செல்லப்பா - பார்வதி தம்பதிகளின் மருமகளும், சிறீஸ்கந்தவேளின் அன்பு மனைவியும், வேதிகா(சுவிஸ்), கார்த்திகா(சுவிஸ்), கீர்த்திகா(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஜீவமலர், சிறீதரன்(உரிமையாளர் - ஸ்ரீ அம்பாள் வெல்டிங்), உமாராணி, ரவிகுமார்(ரவி - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரேவதி, ரவீந்திரன்(கிளி), தயாசக்தி(விதினி - சுவிஸ்), காலஞ்சென்ற சண்முகவேல் மற்றும் நவரத்தினம், சற்குணேஸ்வரி, நாகேஸ்வரி, ஞானேஸ்வரி(ஜேர்மனி), பாலகுணேந்திரன்(லண்டன்), சுகிர்தரஞ்சன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், ஜெகன்(சுவிஸ்), மதன்(சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும், வைஷ்ணவி (சுவிஸ்),சுவாகா(சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கௌதமன் (லண்டன்), இராகுலன், ஆரூரன்(சுவிஸ்) ஆகியோரின் பெரியதாயாரும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் மகேஸ்வரியின் மருமகளும் குணரத்தினத்தின் (அன்ரி) பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.08.2015) வியாழக்கிழமை பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

3ஆம் கட்டையடி,
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

தகவல் :
சி.சிறீதரன் (சகோதரன்)

# இரத்தம் சுத்திகரிக்கும் சிகிச்சை நொதேர்ண் சென்றலில்

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள நொதேர்ண் சென்றல் வைத்தியசாலையில் தற்போது சிறு நீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரத்த சுத்திகரிப்பு சிகிச்சை நடைபெற்று வருகின்றது. இந்த சிகிச்சை முறை ஜுலை மாதம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இன்று வரை சுமார் நூறு நோயாளிகளுக்கு வெற்றிகரமாக சிகிச்சையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார் வைத்தியசாலையின் முகாமைத்துவப் பணிப்பாளர். (ற-10)

# வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ். குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென அதிகரித்துள்ளது. குடாநாட்டின் முக்கிய ஆலயங்களின் மகோற்சவங்கள் ஆரம்பமாகி இடம் பெற்று வரும்நிலையில் வாழைப்பழத்தின் விலையும் மறுபுறத்தில் அதிகரித்துள்ளது. குறிப்பாக கதலிப் பழத்தின் விலையே இவ்வாறு அதிகரித்துள்ளது.

திருநெல்வேலி சந்தையில் நேற்று ஒரு கிலோ கதலிப்பழம் 65 ரூபாவாக விற்கப்பட்டது. அதனை விட இதரைப் பழம் கிலோ 55 ரூபாவாகவும் விற்கப்பட்டது. (ற-17)

# இசையரங்கம்

யாழ்ப்பாணம், ஓக.20

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த பெரும் திருவிழாவை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் இளங் கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6.45 மணிக்கு எஸ்.சுபாகரன் – பாட்டு , அ.ஜெயராம் – வயலின் , க.கண்ணதாஸ் – மிருதங்கம் , என்.சதீஸ்குமார் – முகர்சிங் ஆகியோரின் இசையரங்கம் இடம்பெறவுள்ளது . (ற-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பேஸ்புக் பக்கத்தை பார்ப்பவர்கள் யார்?

உங்கள் பேஸ்புக் பக்கத்தை எவரெவர் பார்க்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்கு எளிமையான ஒரு வழி உள்ளது. இதன் மூலம் உங்களுக்கு தெரியாமல் உங்கள் முகநூல் கணக்கை நோட்டமிடுபவர்களை எளிதில் கண்டுபிடித்து விடலாம். இதை எப்படிச் செய்வது என்பதை அறிய கீழே உள்ள முறையைப் பின்பற்றவும்.



முதலில் உங்களுடைய Facebook account n login செய்யவும். பின்னர் உங்களுடைய profile page க்குச் செல்லுங்கள். அதன் பிறகு righ click செய்யுங்கள். view page source என்ற opti on ஐக் கிளிக் செய்யுங்கள்.

தற்பொழுது ஒரு Window ஓபன் ஆகியிருக்கும் ctrl + f பட்டனை சேர்த்து அழுத்தவும். இப்போது ஒரு மூலையில் Search Bar என்ற சிறிய box, Open ஆகியிருக்கும். அந்த Search Bar இல் list அல்லது friends list என்று Type செய்து Enter செய்யவும். நீங்கள் கொடுத்த எழுத்துக்கள் எங்கெல்லாம் உள்ளதோ அவற்றைக் கோடிட்டு காட்டும். இது மாதிரி list1000011 345400d23, 10000043254566 d33 என்று இருக்கும் ஒரு பெரிய listயே காட்டும். அதாவது இதில் 1000011345400 என்பது அவர்களுடைய facebook account number. ஒவ்வொருவருக்கும் இது போன்று தனித்தனியாக id உண்டு. மேலும் அதன் அருகில் உள்ள –2 அல்லது –3 என்பது உங்கள் FB Profile அவர்கள் எத்தனை முறை பார்த் துள்ளனர் என்ற எண்ணிக்கையாகும். இப்பொழுது new tabd_ www.facebook.com/ என்று type செய்து அதன் அருகில் facebook account number ஐ copy செய்து paste செய்யவும். இப்பொழுது Enter கொடுக்கவும். உங்களின் profile ஐ நோட்டமிட்டவரின் profile ஓபின் ஆகும்..!

# தமிழில் டுவிற்றர் வந்தாச்சு!

72 வார்த்தைக்குள் குறுகிய செய்தியாக கருத்துப் பரிமாற்றத்தை உருவாக்கி பிரபலமடைந்த சமூக வலைத்தளம் ரூவிற்றர். தற்போது இந்த வலைத்தளத்தில் நேரடியாக தகவல்களை போஸ்ட் செய்யும்போது 10 ஆயிரம் வார்த்தைகள்வரை பயன்படுத்தலாம். அதற்குப் பதிலாக டுவிட் செய்யும்போது 72 வார்த்தைகளையே பயன்படுத்த முடியும்.



இதுவரை டுவிற்றர் தளம் ஆங்கிலத்தில் மட்டுமே செயற்பட்டு வந்தது. ஆனால் டுவிற்றர்களைத் த்மிழில் வெளியிடலாம். சமீப காலமாக மண்டல மொழிகளில் செயல்படும் வகையில் டுவிற்றர் தளம் மேம்படுத்தப்பட்டு வந்தது. அதன்படி முதலில் இந்திய மொழிகளில் இந்தி மற்றும் வங்காள மொழிகளில் டுவிற்றர் அப்ளிகேசன் வந்தது. தற்போது மேலும் 4 இந்திய மொழிகளில் இது செயல்பாட்டுக்கு கொண்டுவரப்பட்டு உள்ளது. இதில் தமிழும் அடக்கம். இனி தமிழில் டுவிற்றர் ஒப்ஷன்களை இயக்கலாம். இதுதவிர கன்னடம், குஜராத்தி, மராத்தி ஆகிய மொழிகளிலும் டுவிற்றரை இயக்கலாம். ஆண்ட்ராய்டு இயங்குதளத்தில் இது செயல்படும். ஐ.ஓ.எஸ். இயங்குதளத்தில் செயல்படும் வகையிலும் சமீபத்தில் டுவிற்றர் அறிமுகமானது. புதிதாக அறிமுகமாகி உள்ள விண்டோஸ்10 இயங்குதளத்தில் செயற்படும் வகையிலும் டுவிற்றர் மேம்படுத்தப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது.



# தண்ணீரில் எரியும் விளக்கு

சுடர் விடும் விளக்கை தண்ணீர் அணைத்துவிடும் என்னும் நிலை மாறி, தண்ணீரில் தெருவிளக்கை எரிய வைத்து சாதித்துள்ளார்கள் பிலிப்பைன்ஸ் விஞ்ஞானிகள். சால்ட் எனும் நிறுவனத்தினர் இந்த விளக்கை உருவாக்கி இருக்கிறார்கள். இவர்கள் உப்பு நீரில் இருந்து மின் அயனிகளைப் பெற்றுக் கொண்டு ஒளிரும் தெரு விளக்குகளை வடிவமைத்துள்ளனர். ஒரு லீற்றர் கடல் நீரில் இந்த விளக்கு 8 மணி நேரம் ஒளிரும். 6 மாதங்களுக்கு ஒரு முறை இதில் உள்ள மின்கடத்தியை பராமரிப்பு செய்து பயன்படுத்தலாம்.

பிலிப்பைன்ஸ் நாட்டுக்குச் சொந்தமான 7 ஆயிரம் தீவுகளில் பெரும்பாலான தீவுகளில் மின்வசதி இல்லை. அங்கு வசிப்பவர்கள் மண்ணெண்ணெய், மெழுகுவர்த்தி மற்றும் பற்றரி விளக்குகளை கொண்டே வெளிச்சம் பெறுகின்றனர். கடல்நீரைப் பயன்படுத்தி எரியும் விளக்குகள் அவர்களின் வாழ்க்கையை ஒளிபெறச் செய்யும் என்று அந்த நிறுவனம் கூறி உள்ளது.

# மஹிந்தவுக்குள் சிறப்புரிமைகள் அனைத்தும் பறிக்கப்பட வேண்டும்

## அசாத் சாலி தெரிவிப்பு

கொழும்பு, ஓக.20

மஹிந்த ராஜபஷவுக்கு இதுவரையில் வழங்கப்பட்டு வந்த முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கான பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகள் உடனடியாக நீக்கப்படவேண்டும் என அசாத் சாலி தெரிவித்துள்ளார். அவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்டும பாதுகாப்புக்கள் மாத்திரமே வழங்கப்படவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றதன் மூலம் மஹிந்த ராஜபக்ஷ



முன்னாள் ஜனாதிபதி என்ற அந்தஸ்தை இழந்து, தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக மாறியுள்ளார்.

எனவே அவருக்கு வழங்கப்பட்டு வந்த முன்னாள் ஜனாதிபதி ஒருவருக்கான பாதுகாப்பு மற்றும் சிறப்புரிமைகள் நீக்கப்பட்டு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கான சலுகைகள் வழங்கப்படவேண்டும்.

மஹிந்த மக்களுக்கு செய்த துரோகங்கள், அநீதிகளுக்காகவே அவருக்கு இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது.– என்றார்.(ற)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழகத்தில், தமிழக காங்கிரஸ் தலைவர் எஸ்.இளங்கோவனுக்கு எதிராக அ.தி.மு.கவினர் போராட்டம் நடத்திவருகின்றனர். சென்னை நந்தம்பாக்கத்தில் அ.தி.மு.க. தொண்டர்கள் செல்போன் கோபுரத்தில் ஏறி நேற்றுப் போராட்டம் நடத்தினர். தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைத் தரக்குறைவான வார்த்தைகளால் விமர்சனம் செய்ததாகக் கூறி, அ.தி.மு.க.வினர் இந்தப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். அதன் போது ஆர்ப்பாட்டக்காரர்கள் இளங்கோவனின் உருவ பொம்மையை செருப்பால் அடித்து, எரித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர். (ஐ)

# ஐ.எஸ். இன் அடுத்த போர்க்களம் இந்தியா

## பாகிஸ்தானில் கைப்பற்றப்பட்டுள்ள புத்தகத்தால் பரபரப்பு

இஸ்லாமாபாத்,ஓக.20

ஐ.எஸ். அமைப்பினர் ஐரோப்பாவை விட இந்தியா மீது தாக்குதல் நடத்தவே அதிக ஆர்வமாக இருப்பதாக பாகிஸ்தானில் கைப்பற்றப்பட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாகிஸ்தானின் மேற்கு பகுதியில் உள்ள பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதியில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆவணப் புத்தகம் ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

"இஸ்லாமிய அரச கலிபாவின் சுருக்கமான வரலாறு" எனப் பெயர் கொண்ட அந்தப் புத்தகம் ஜேர்மனியின் அடால்ப் ஹிட்லர் எழுதிய மெயின் காம்ப் புத்தகத்துக்கு நிகரானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தப் புத்தகம் உருது மொழியில் எழுதப்பட்டுள்ளது. அதில் ஐ.எஸ். அமைப்பின் ஆறு நிலைகள் குறித்தான சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. மேலும் 2017ஆம் ஆண்டு வெளிப்படையான போரைத் தொடங்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமெரிக்கவைச் சேர்ந்த உளவுத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது, உலகமே ஈராக் மற்றும் சிரியாவில் நடைபெற்றுகொண்டிருக்கும் படுகொலைகள் தொடர்பான வீடியோவை பார்த்துகொண்டிருக்கும் போது அவர்கள் வட ஆப்பிரிக்காவை நோக்கி நகர்ந்து சென்று கொண்டிருக்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.



மேலும் ஐ.எஸ். அமைப்பினர் ஐரோப்பாவை விட இந்தியாவைப் போர்க்களமாக மாற்றவே அதிகம் விரும்புகின்றனர் என்றும் அந்தப் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## பங்களாதேஷில் வலைத்தள எழுத்தாளர்கள் கொலை வழக்கு

### பிரிட்டன் நாட்டவர் கைது

டாக்கா,ஓக.20

பங்களாதேஷில் இரண்டு முக்கிய வலைத்தள எழுத்தாளர்கள் கொலை வழக்குத் தொடர்பாக பிரிட்டன் நாட்டவர் உள்ளிட்ட 3 பேரைச் சிறப்புப் பாதுகாப்புப் படையினர் கைது செய்துள்ளனர்.

பங்களாதேஷில் நாத்திகம் மற்றும் மதச்சார்பின்மை குறித்துப் பரவலாக வலைத்தளத்தில் பதிவு செய்யும் எழுத்தாளர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுகின்றனர். இதையடுத்து, அன்சருல்லா பங்களா டீம் என்ற அமைப்பின் மீது சந்தேகம் எழுந்ததைத் தொடர்ந்து கடந்த மே மாதம் அந்த அமைப்புக்கு அரசு தடை விதித்தது. இந்த நிலையில் அமெரிக்க வலைத்தள எழுத்தாளர் அவிஜித் ராய் மற்றும் ஆனந்த பிஜோய் தாஸ் கொலை வழக்குத் தொடர்பாக தீவிர விசாரணை நடத்தி வந்த அதிரடிப்படைப் பொலிஸார், முக்கிய குற்றவாளி உள்ளிட்ட 3 பேரை அதிரடியாகக் கைது செய்துள்ளனர். கைதானவர்களில் ஒருவர் பிரிட்டனைச் சேர்ந்த டோகியூர் ரஹ்மான், எழுத்தாளர்களைக் கொலை செய்யத் திட்டம் தீட்டியவர் இவரே என்றும், எஞ்சிய இருவரும் அன்சருல்லா பங்களா டீமின் தீவிர உறுப்பினர் கள் என்றும் அதிரடிப்படை அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர். மேலும் இவர்களது கைது இந்த வருடம் இது வரை நடந்த 4 வலைத்தள எழுத்தாளர்களின் படுகொலையில் முக்கிய திருப்பமாக அமையும் என அதிரடிப்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பங்களாதேஷ் அதிகாரபூர்வமாக மதச்சார்பற்ற நாடானாலும், இது போன்ற தாக்குதல்களைத் தடுத்து நிறுத்தும் வகையில் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனப் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். முன்னதாக இந்தத் தொடர் படுகொலைகளைக் கண்டித்து பொது மக்கள் வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பாங்கொங் குண்டுவெடிப்பில் திடீர் திருப்பம்

பாங்கொங்,ஓக.20

பாங்கொங் குண்டுவெடிப்பில் திடீர் திருப்பமாக இளைஞர் ஒருவர் கோயிலில் "பை" ஒன்றை மறைத்து வைத்துவிட்டு செல்லும் காட்சி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கில் உள்ள எராவன் புனிதத்தலத்தின் அருகில் நேற்று முன்தினம் வெடிகுண்டு ஒன்று வெடித்தது.

அந்தத் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர்.

மேலும் ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். இந்தக் குண்டுவெடிப்பு காரணமாக அந்த இடமே உருக்குலைந்து உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் திடீர் திருப்பமாக இளைஞர் ஒருவர் கோயிலின் அருகே ஒரு பையை வைத்துவிட்டு நிதானமாக செல்லும் வீடியோக் காட்சிகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மஞ்சள் நிற ஆடை மற்றும் கண்ணாடி அணிந்திருந்த அந்த இளைஞரை முதலில் சந்தேகத்



துக்குரிய நபர் எனக் கூறிய பொலிஸ் அதிகாரிகள் தற்போது அவர் தான் குற்றவாளி எனக் தெரிவிக்கவுள்ளனர்.(ஐ)

## பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தியாவிடம் பாக். வலியுறுத்தல்

இஸ்லாமாபாத், ஓக.20

பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வெளியுறவு துறை செயலாளர்கள் மட்டத்திலான கூட்டத்தை நடத்த வேண்டும் என இந்தியாவிடம் பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது.

ரஷ்யாவில் கடந்த மாதம் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் நரேந்திரமோடியும், பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் செரீப்பும் சந்தித்து பேச்சு நடத்தினர். அதன் போது தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டத்தை டில்லியில் நடத்த முடிவு செய்யப்பட்டது. அதற்கமைவாக எதிர்வரும் 23 ஆம் திகதி டில்லியில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக அரசின் உயர் மட்டக் குழுக் கூட்டத்தை பாகிஸ்தான் பிரதமர் நவாஷ்செரீப் நேற்று முன்தினம் கூட்டினார். அதில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டத்தில் பேசுவதற்குரிய விடயங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. மேலும் [illegible] திலான கூட்டத்தைக் கூட்டி ஆலோ [illegible] சிக்கப்பட்டது.

காஷ்மீர் பிரிவினைவாதத் தலைவர்களை இந்தியாவுக்கான பாகிஸ்தான் தூதர் சந்தித்து பேசினார். அதை தொடர்ந்து ஏற்கனவே கடந்த



வருடம் நடைபெறவிருந்த வெளியுறவுத் துறைச் செயலாளர்கள் கூட்டத்தை இந்தியா ரத்துச் செய்தது.

பிரச்சினைகளைத் தீர்க்க மீண்டும் இரு நாட்டு வெளியுறவுத் துறைச் செயலாளர்கள் மட்டத்திலான கூட்டத்தை கூட்டும்படி இந்தியாவை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

டில்லியில் நடைபெறும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டத்தில் பங்கேற்க பாகிஸ்தானின் சர்தாஜ் ஆசிஷ் தயாராகவுள்ளார். அதற்கு முன்னதாக அவரைப் பிரதமர் நவாஷ் செரீப் சந்திக்கவுள்ளார்.(ஐ)

## 25 நாடுகளுக்கு பயணித்துள்ளார் பிரதமர் மோடி

புதுடில்லி,ஓக.20

இந்தியப் பிரதமராக பதவியேற்ற நரேந்திர மோடி, தமது 15 மாத கால ஆட்சியில் இதுவரை 25 நாடுகளுக்கு அரசுமுறைப் பயணமாக சென்றுள்ளார். 2014 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலில் பா.ஜ. வெற்றி பெற்றது. பிரதமராக நரேந்திர மோடி 2014 ஆம் ஆண்டு மே மாதம் பதவியேற்றார். இந்த மாதத்துடன், மோடி பிரதமராக பதவியேற்று 15 மாதங்கள் ஆகின்றன. இந்தக் காலகட்டத்தில் பூட்டான், பிரேஸில்,நேபாளம், ஜப்பான், அமெரிக்கா, மியன்மார், ஆஸ்திரேலியா, பிஜி, நேபாளம், செஷல்ஸ் தீவுகள், மொரீஷியஸ், இலங்கை, பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, சீனா, மங்கோலியா, தென் கொரியா, பங்களாதேஷ், உஸ்பெகிஸ் தான், கஜகஸ்தான், ரஷ்யா, துர்க் மெனிஸ் தான், தஜிகிஸ்தான், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடுகளுக்கு அவர் பயணித்துள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இங்கிலாந்து ராணி எலிசபெத் சாதனை



லண்டன்,ஓக.20
இங்கிலாந்து ராணியாக இரண்டாம் எலிசபெத் தற்போது பதவி வகிக்கிறார். அவரது தந்தை சாவடைந்த பின்னர் 1952 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அரசியாகப் பதவி ஏற்றார் எலிசபெத் ராணி. அப்போது அவரது வயது 25. தற்போது அவருக்கு 89 வயது ஆகிறது. எனவே கடந்த 63 வருடங்களாக அவர் ராணியாகப் பதவி வகித்து வருகிறார். மூன்று தலைமுறைக்கு முந்தைய அவரது முப்பாட்டி விக்டோரியா மகாராணி 63 வருடங்கள் அரசியாக இருந்துள்ளார். அவரைப் போன்று தற்போது இரண்டாம் எலிசபெத்தும் 63 வருடங்கள் ராணியாக இருந்து வருகிறார். ஏதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் அவர் இங்கிலாந்தில் நீண்ட நாள் ராணியாகப் பதவி வகித்தவர் என்ற பெருமையை பெறவுள்ளார். (ஐ)

## இந்தோனேஷிய விமான விபத்து; கறுப்புப்பெட்டி மீட்பு



ஜகார்த்தா,ஓக.20
இந்தோனேஷிய விமான விபத்தில் உயிரிழந்தவர்களின் உடல்களுடன், விமானத்தின் கறுப்புப் பெட்டியும் மீட்கப்பட்டுள்ளது. இந்தோனேஷியாவில் கடந்த 16 ஆம் திகதி விபத்துக்குள்ளான ஏ.டி.ஆர். 42-300 விமானத்தில் பயணித்த 54 பேரினது சடலங்களை மீட்புப் பணியாளர்கள் கண்டெடுத்துள்ளனர். இந்த விமானத்தின் கருப்புப் பெட்டியும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்தில் விமானம் முழுமையாக நொறுங்கியுள்ளது. விமான விபத்துக்குள்ளான பப்புவா மாகாணத்தில் நிலவும் மோசமான காலநிலையாலும், தொலைதூர மலைப் பகுதியில் விபத்து ஏற்பட்டதாலும் மீட்புப் பணிகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. இந்த விமானம் விபத்துக்குள்ளான போது அதில் ஐந்து சிறுவர்கள், ஐந்து விமான ஊழியர்கள் உட்பட 54 பேர் பயணம் செய்தனர். அவர்கள் அனைவரும் இந்த விபத்தில் உயிரிழந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காணப்படுவதற்காக அந்த மாகாணத்தின் தலைநகருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக இந்தோனேஷியாவின் போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ)



பொது பொலிஸ் பாதுகாப்புப் படையை உருவாக்கி 70 ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வு அண்மையில் வியட்நாமின் தேசிய மாநாட்டு மையத்தில் நடைபெற்றது. (ஐ)

# நைஜீரியாவில் தாக்குதல்: பொதுமக்கள் 150 பேர் சாவு



அபுஜா,ஓக.20
நைஜீரியா நாட்டின் வடகிழக்கு மாநிலமான யோபியில் உள்ள கிராமமொன்றுக்குள் மோட்டார் சைக் கிள்களில் சென்ற போகோ ஹறம் தீவிரவாதிகள், திடீரென அந்தக் கிராம மக்கள்மீது கண்மூடித் தனமான தாக்குதல்களை நேற்று நடத்தியுள்ளனர். இந்தத் தாக்குதலின் போது அப்பாவிப் பொது மக்கள் 150 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது போகோஹறம் தீவிர வாதிகளின் துப்பாக்கிச் சூட்டினால் அரைவாசிப் பேர் உயிரிழந்த நிலையில், மீதி பேர் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள தப்பி ஓடியுள்ள னர். அதன் போது அருகில் இருந்த ஆற்றில் மூழ்கி பலர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன.


இந்தக் கொடூரத் தாக் குதலில் மொத்தமாக 150 பேருக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந் திருக் கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தைப் போலவே தனி நாட்டை உரு வாக்குவதற்காக போகோஹறம் தீவிர வாதிகள் போராடி வருவது குறிப்பிடத்தக்கது. நைஜீரியாவில் பின் தங்கிய கிராமங்களை இலக்கு வைத்து அங்குள்ள பொதுமக்களை போகோஹறம் தீவிரவாதிகள் தொடர்ந்து கொன்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனத் துறைமுக விபத்து விசாரணை ஆரம்பம்

பீஜிங்,ஓக.20
சீனாவிலுள்ள துறைமுகக் கிடங்கில் கடந்த புதன்கிழமை ஏற்பட்ட வெடி விபத்துக் குறித்து விசாரணை நடத்த அந்த நாட்டின் அமைச்சரவை உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து அந்த நாட்டின் அமைச்சரவை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: தியான்ஜின் நகரில் ஏற்பட்ட வெடி விபத்துக் குறித்து விசாரணை நடத்தி, அது குறித்த முழு உண்மையை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியிடமும், மக்களிடமும் தெரிவிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த விபத்துக்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. சீனாவின் துறைமுக நகரான தியான்ஜினில் அபாயகரமான பொருள்களைக் கையாளும் தனியார் நிறுவனத்தின் கிடங்கு பயங்கரமாக வெடித்துச் சிதறியது.
அதில் 114 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொடிய விஷப்பாம்பு மூலம் "வைன்" தயாரிக்கும் சீனர்



பீஜிங்,ஓக.20
சீனா நாட்டில் கொடிய விஷமுள்ள பாம்புகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்படும் வைன் மது வகைகள் மக்களிடம் அமோக வரவேற்பைப் பெற்று வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தென் சீன நகரத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்று, பாம்பு வைன் எனப்படும் ஒருவகை மதுவகையைத் தயாரிக்கும் வழிமுறையை வீடியோவாகப் பதிவு செய்துள்ளது. சுமார் 1.09 நிமிடம் பதிவு செய்யப்பட்டுள்ள அந்த வீடியோவில், அரிசியால் தயாரிக்கப்பட்ட ஒயின் திரவப் போத்தல்களில் விஷத்தன்மை உடைய ஒரு நீளமான பாம்பை அதற்குள் திணிக்கின்றனர்.

சுமார் 10 அடி நீளமுள்ள அந்தப் பாம்பு முழுவதும் போத்தலுக்குள் திணிக்கப்பட்டவுடன், அதன் மேல் பாகத்தை மூடிவிடுகின்றனர். போத்தலில் இருக்கும் பாம்பு, அதிலிருந்து தப்பித்து வெளியே வருவதற்கு பலவாறு முயற்சிக்கிறது. ஆனால், இறுதி மூச்சு வரை பாம்பு உள்ளேயே சுற்றிக் கொண்டு வருகிறது. ஆனால், பாம்பு இறக்கும்வரை போத்தலுக்குள்ளேயே வைக்கப்பட்டிருக்குமா? என்பது அந்த வீடியோவில் தெளிவுப்படுத்தப்படவில்லை. இவ்வாறு பாம்பைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் அந்த ஒயின் பானத்தை சீன மக்கள் விரும்பி அருந்துவதாக அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள் ளது.

இந்தப் பாம்பு வைனை அருந்துவதனால், மனிதர்களுக்கு ஏற்படும் முதுகு வலி, இடுப்பு வலி, வாத நோய், உள்ளிட்டவைகளைக் குணப்படுத்துவதுடன் ஆண்களின் ஆண்மையை அதிகரிக்கும் எனச் சீன மக்கள் நம்புவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இணையத்தளத்தில் வெளியாகியுள்ள இந்த வீடியோவை இதுவரை சுமார் 340 மில்லியன் மக்கள் பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

## அமெரிக்க இராணுவத்தில் கடுமையான பயிற்சிகள்



வொஷிங்டன்,ஓக.20
போர்க்களத்தில் முன்னணியில் நின்று போர் புரிவதில் ஆண்களுக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கி வந்த நிலையில், கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பாக பெண்களுக்கும் சம வாய்ப்பு வழங்க அமெரிக்க இராணுவம் முடிவு செய்தது.

இதையடுத்து, கடந்த ஏப்ரல் மாதம் 381 ஆண்கள் மற்றும் 19 பெண்களுடன், இராணுவத்தினர்களுக்கான தலைமைப் பயிற்சி புளோரிடா மாகாணத்தில் ஆரம்பமானது. இந்தப் பயிற்சி தற்போது இறுதி நிலையை எட்டியுள்ளது. இந்தப் பயிற்சியின்போது, வன விலங்குகள் மற்றும் அதிக நச்சுத் தன்மையுள்ள பாம்புகளை அடித்துக் கொல்வது, பேரிடரில் சிக்கித் தவிக்கும் இராணுவ வீரர்களுக்கு முதலுதவிச் சிகிச்சை அளிப்பது, காடுகளில் மறைந்திருந்தபடி பல நாள்கள் உயிர் வாழ்வது எப்படி? என்பன உள்ளிட்ட பல்வேறு போர்ப் பயிற்சி முறைகள் பயிற்றுவிக்கப்பட்டன. இந்தப் பயிற்சியின் ஒரு கட்டமாக மிகக் கடுமையான நச்சுத் தன்மையுள்ள கருநாகங்களை வேட்டையாடும் கலை பற்றி கற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், உணவு ஏதும் கிடைக்காத நிலையில், ஒரு கருநாகத்தின் குருதியைக் குடித்து, உயிரைக் காத்துக் கொள்வது எப்படி என்பது குறித்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் பயிற்சியின் ஒருபகுதியாக பிடிபட்ட கருநாகத்தின் குருதியைக் குடிக்க வேண்டும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். வீரர்கள் பலர் அதற்கு மறுப்பு தெரிவித்த நிலையில் ஒரு வீராங்கனை மட்டும் துணிச்சலுடன் கருநாகத்தைக் கொன்று வெட்டப்பட்ட பாம்பின் தலைப்பகுதியை வாய்க்குள் வைத்து குருதியை உறிஞ்சிக் குடித்தார். இதைக் கண்டு அனைவரும் வியந்தனர். இந்தக் கடும் பயிற்சியில் 2 பெண்கள் உட்பட 94 பேர் தேர்ச்சியடைந்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனின் அருளால் அனைத்தும் கைகூடட்டும்

*நல்லூரில் புனிதம் பேணுவோம்*
*கந்தன் எழுந்தருளினால் அருள் நாதம் கேட்கும்....*
*அந்தணர்கள் திருவாய் மொழிந்த வேதங்கள்*
*எங்கும் ஒலிக்கும்...*
*பக்தர்களின் மனதில் பண்பும், பக்தியும் நிறைந்துசெழிக்கும்....*
*அவன் நாமம் என்றும் தமிழர் வாழ்வைக் காக்கும்....*
*துன்பம் போக்கும் என்றென்றும் அவன் அருள் சிறக்கும்....*
*விடிவு பிறக்கும்......*

செ. உமாசுதன்

ஈழமணித்திருநாடு ஒரு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. சிவனுக்குரிய ஆலயங்களும் முருகனுக்குரிய ஆலயங்களும் நிறைந்த நாடு. அந்த வகையிலே யாழ். மண்ணில் பிறந்தவர்களும், வாழ்ந்தவர்களும், இப்போது வாழ்பவர்களும் புண்ணியம் செய்த பெருமக்கள் என்றே கூறவேண்டும். இவற்றுக்கு மேலாக கலியுக வரதனாம் கந்தப்பெருமானும் யாழ்.நகரின் மத்தியிலே கோயில் கொண்டருளி அருளாட்சி புரிவதும் தமிழகத்தில் இருந்து இங்கு வந்த கடையிற் சுவாமிகளுடைய மற்றும் அருளாளர்களுடைய பாதங்களும் இம்மண்ணில் பதிந்ததால் சைவமும் தமிழும் அழியாமல் வாழ்கின்றன.

சித்தர்கள் நடமாடிய நல்லைக் கந்தன் தேரடி தெய்வீகம் நிறைந்த அருள் பரப்புகின்ற இடம். தவத்திரு சிவயோக சுவாமிகள் அருள் இன்பம் தரும் நற்சிந்தனை வாசகங்கள் தந்துள்ளார். அவற்றைச் சிந்தித்தால் நல்லை வீதியின் அருள் வெளிப்பாட்டை நாங்கள் உணரலாம்.

எந்நாளும் நல்லூரை வலம் வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே. அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம் அதுவாதலாலே அதிசயம் மெத்த உண்டு என்றும் நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி கிளியே! இரவு பகல் காணேனடி. பஞ்சம் படை வந்தாலும் பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சுவதோ நாங்களெடி கிளியே ஆறுமுகன் தஞ்சமடி என்றும் வறுமைப் பிணிக்கு மருந்தொன்று இருக்குது வந்து பாருங்கள் நல்லூரில், வந்து மருந்தை அருந்திய மாதவர் வாழ்ந்தவர் வாழ்ந்தாரே என்றும் நல்லூரான் கிருபை வேண்டும் வேறென்ன வேண்டும். நமைப் பிரியான் என நம்பிட வேண்டும் என்றும் நல்லூரைக் கும்பிட்டு நீபாடு அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும் என்றும், செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு தேங்காயுடன் பழங்கொண்டு நீ செல்லு என்றும் நல்லூரான் வீதியிற் போய்க் கூவுகுயிலே நல்ல தொண்டர் நாமென்று கூவுகுயிலே; என்றும் சொல்லப்பட்டுள்ளது.

இந்த மகா மந்திர வாசகங்கள் காலத்தால் அழிக்கப்பட முடியாதவை, உலகம் உள்ளவரை நிலைத்திருக்கும். இதை மனதிருத்தி அடியவர்கள் செயற்பட வேண்டும். தங்களைச் சீர்மைப்படுத்த வேண்டும்.

மனநிலையை ஒடுக்கி வணங்குதற்குரிய இடம் ஆலயம். அந்த வகையிலே நல்லூர்க்கந்தன் ஆலயத்திலே 25 தினங்கள் திருவிழா இடம்பெறுகின்றது. இந்த இருபத்தைந்து தினங்களிலும் காலை மாலை என 55 திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன. மெய்யடியார்களுக்கு தரிசனம் கொடுப்பதற்காகவே இந்த திருவிழாக்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. இவை பகட்டுத் திருவிழாக்கள் அல்ல, பக்தித் திருவிழாக்கள். கந்தன் எழுந்தருளினால் அருள் நாதம் கேட்கும். பக்தர்களின் மனதில் பண்பும், பக்தியும் நிறைந்து செழிக்கும். இத்தகைய சிறப்புக் கொண்ட நல்லைக் கந்தன் ஆலயம் மிகப் பழைமை வாய்ந்தது. ஒரு வருடம் கூட மஹோற்சவம் இடம்பெறாமல் இருந்த தில்லை. போர்க் காலங்களில்கூட இங்கு அருள் செழித்தது. போர்க் காலங்களில் மக்களை காத்த ஆலயம்.

முருகனை வார்த்தைகளால் வர்ணித்துவிட முடியாது. அவனை பக்தியுணர்வோடு வணங்கி அனுபவிக்க வேண்டும். அதனை நல்லூரில் கண்டு உணர்ந்து அனுபவிக்க முடியும். அந்தணர்கள், பணியாட்கள், அடியவர்களின் ஒத்துழைப்பினால் ஆலயம் சிறந்து விளங்குகிறது. இதில் பக்தர்களின் பங்கு மேலானது.

இசையை முதன்மைப்படுத்துகின்ற ஓர் ஆலயம். கந்தப் பெருமான் இசையால்அர்ச்சிக்கப்படுகின்றான். ஒரு திருவிழா திருப்புகழ் இசையோடும், இன்னோர் திருவிழா தேவார இசையுடனும், மற்றைய திருவிழா மிருதங்க இசையோடும், இதேபோன்று புல்லாங்குழல், தவில் இசைகளோடும் சிறப்பாக இடம்பெறுகின்றன.

நல்ல விடயங்களை பின்பற்றுவதில் தப்பில்லை. ஒப்புரவுதல் ஓங்கும் கந்தனின் முன்னால் யாவரும் சமம். இம்முறை உற்சவத்திலே ஆலய வெளிப்புறச்சூழலை அலங்கரிக்கு வகையிலே வெள்ளை சிவப்பு வர்ணங்கள் தீட்டப்பட்ட துணிகள் எல்லையிட்டு நிற்கின்றன. இவை சிவம் மற்றும் சக்தியை குறிக்கின்றன. அர்த்தநாரீஸ்வரர் போன்று ஆணும் பெண்ணும் சரிபாதி, சமம் என்பதை சுட்டி நிற்கின்றன. இது திரைக்குள்ளே பக்தி அதாவது சிவமும் சக்தியும் இருக்கின்ற எல்லைக்குள்ளே அடியவர்கள் பக்தியோடு இருக்கவேண்டும் என்பதைக் கூறி நிற்கின்றது.

வெளி வீதியை புனித இடமாக மாற்ற வேண்டும். அடியவர்களின் பஜனைகளும், அங்கப் பிரதட்சணங்களும் இடம்பெறுகின்ற புனித பூமியை களங்கப்படுத்தக்கூடாது. விளம்பரங்களை ஆலய எல்லையைத் தாண்டி காட்சிப்படுத்த வேண்டும். உற்சவ காலங்களில் அடியவர்கள் ஆசார சீலர்களாக ஆலயம் வருகை தரவேண்டும். உள்வீதியிலே அடியவர்கள் தமிழர் இந்து மதப் பாரம்பரியங்களைப் பின்பற்றும் வகையிலே குறிப்பாக ஆண்கள் வேட்டி சால்வைகளை அணிந்தும், பெண்கள் சமய ஆசாரமான உடைகளை அணிந்தும் செல்வது சாலச்சிறந்தது. இதேபோன்று வெளிவீதியிலும் ஆண்கள் பாதணிகள் அணிந்து செல்வதனையும், காற்சட்டைகளை அணிந்து வருவதையும் தவிர்த்து இந்து சமய ஆசாரத்தைப் பின்பற்ற வேண்டும். வெளி மாவட்டங்களில் இருந்து ஆலயத்திற்கு வருகைதருவோரும் வெளிவீதியை பக்தி மயமாக வைத்திருப்பதற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும். முருகனின் அருளால் இவைகள் அனைத்தும் கைகூட வேண்டும்.

அறம், அன்பு, தூய்மை, சமத்துவம், ஆன்மநேயம், சூழலை மாசுபடுத்தாமை என்பன மனித விழுமியங்கள். இவை அனைவருக்கும் பொதுவானவையாகவும், நிரந்தரமாக உள்ளவையாகவும் உள்ளன. மனித நாகரிகம் என்பது வெறுமனே செங்கற்களாலும் சாந்தினாலும், இரும்பினாலும் இயந்திரங்களாலும் கட்டியெழுப்பப்படுவதன்று. மனிதர்களாலும் அவர்களின் நற்குணப்பண்புகளாலும் நல்லொழுக்கத்தினாலும் உருவாக்கப்படுவது மனித நாகரிகம். நாம் அனைவரும் மனித விழுமியங்களை எமது அன்றாட வாழ்க்கையுடனும், செயற்பாடுகளுடனும் இணைத்துக்கொள்ளுதல் இன்றியமையாததாகும். இவை எம்மை ஆன்மிகப்படுத்தவும், கலாசாரங்களை நன்முறையிலே கட்டியெழுப் பவும் உதவும்.

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே. ஆகையால் நாம் அவருடைய உடமை, அவருடைய அடிமை, நம்முடைய ஆசையெல்லாம் அவருடைய அசைவே. நாம் ஒரு போதும் அவரை மறந்திருக்க முடியாது. நமக்கு ஒரு குறையுமில்லை. நாம் என்றும் உள்ளோம். எங்கும் இருக்கிறோம். எல்லாம் அறிவோம். இப்படியே நாம் இடையறாது சிந்தித்து மேலான தத்துவத்தை அடைவோமாக.

எல்லாம் அற, என்னை இழந்த நலம் சொல்லாய் முருக சுரபூபதியே என்ற அருணகிரியார் வாசகத்துக்கிணங்க புலன் ஒன்றினால் தான் இறை நாமத்தை இசையோடு மனம் ஒன்றிப்பாட முடியும். நல்லூரை நோக்கி வாய்பாட, கைகள் தாளம் போட, கால்கள் நடையால் உந்த, புலப்படாத உந்துசக்தி உந்தித் தள்ளும். முருகன் அருள் தெரிகின்றது. எமை நோக்கி பரவுகின்றது. அங்கே செல்வோம் வாரீர்.

உலகத்தின் அனைத்து விடயங்களும் சிறப்புக்களேயன்றி வேறல்ல. சமயங்களும் அப்படியே. ஒரு பிதா தனது குழந்தையின மழலை மொழியைக் கேட்டு மகிழ்வானன்றிச் சிறிதும் இகழமாட்டான். அவ்வண்ணமே தேவரீர் அடியேனின் விண்ணப்பத்தை கேட்டருள்வீராக. இது எனது வேண்டுகோளல்ல. நல்லூர் தேரடிச் சித்தர் சிவயோக சுவாமிகளின் அழைப்பே.......

## மூன்று வெண்கல விருதுகளை தனதாக்கிய களனி கேபிள்ஸ்

பத்தரமுல்ல வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்ற சிலிம் 2015 விருதுகள் வழங்கலில், பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை விநியோகிக்கும் களனி கேபிள்ஸ் மூன்று வெண்கல விருதுகளை வென்றிருந்தது.

துறைசார் மற்றும் விவசாய பொருட்கள் மற்றும் சேவைகள் பிரிவில் ஆண்டின் சிறந்த விற்பனை பிரதிகளுக்கான விருதை களனி கேபிள்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் திலீப மதுசங்க மற்றும் வேல்ரட்னம் அரவிந்தநாதன் ஆகியோர் சுவீகரித்திருந்தனர். முன்னிலையாளருக்கான வெள்ளி விருதை சாமிகா சிரிசேன வென்றிருந்தார்.

முற்றிலும் இலங்கையைச் சேர்ந்த நிறுவனம் என்பதால், சிலிம் விருதுகள் வழங்கலில் விருதுகளை வென்றமை என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. இலங்கையில் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்கான தேசிய அமைப்பாக சிலிம் திகழ்கிறது. சந்தைப்படுத்தல் என்பது வளர்ந்து வரும் துறையாக அமைந்துள்ளதுடன், இந்தத் துறையில் சிறப்பாக தமது திறமைகளை வெளிப்படுத்துவோரை கௌரவிக்கும் வகையில் சிலிம் விருதுகள் வழங்கல் ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்த விருதுகளை பெற்றுக் கொண்டமை தொடர்பில் களனி கேபிள்ஸ் பிஎல்சியின் சந்தைப்படுத்தல் பிரிவின் பதில் பொது முகாமையாளர் அனில் முனசிங்க கருத்துத் தெரிவிக்கையில், 'ஊழியர்களின் அர்ப்பணிப்பான செயற்பாட்டின் காரணமாக கம்பனிக்கு கௌரவம் கிடைத்துள்ளது. பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்கள் உற்பத்தியில் களனி கேபிள்ஸ் சந்தை முன்னோடியாக திகழ்கிறது. எப்போதும் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவைகளை வழங்குவது பற்றி கவனம் செலுத்தி வருகிறது. கம்பனியின் சிறந்த பின்புலமாக எமது ஊழியர் குழாம் அமைந்துள்ளது. இந்த சிலிம் விருதுகள் அவர்களின் அர்ப்பணிப்பான செயற்பாடுகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. கம்பனியின் சார்பாக இந்த ஊழியர்களுக்கு நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்றார்.

2008 இல் களனி கேபிள்ஸ் பிஎல்சி சுப்பர் பிராண்ட் நிலையை எய்தியிருந்தது. குறிப்பாக நிபுணத்துவம் வாய்ந்த சிறப்பாண்மைச் செயற்பாடுகளுக்காக கம்பனி இந்த நிலையை எய்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. களனி கேபிள்ஸ் என்பது 100 வீதம் இலங்கையை சேர்ந்த கம்பனியாகும். சுமார் 44 வருடகாலமாக இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை உற்பத்தி செய்வதில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

சிலிம் வர்த்தக நாம சிறப்பு விருதுகள் 2012 இல், களனி கேபிள்ஸ் பிஎல்சி நிறுவனத்துக்கு சிறந்த வர்த்தக நாமத்துக்கான வெண்கல விருது வழங்கப்பட்டிருந்தது. 2013இல் இடம்பெற்ற சிலிம் வர்த்தக நாமச் சிறப்பு விருதுகள் வழங்கலிலும் தங்க விருதை இந்நிறுவனம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

களனி கேபிள்ஸ் நிறுவனத்துக்கு தரச்சிறப்புக்கான ஐ.எஸ்.ஓ 9000:2008 சான்று, சிறந்த சூழல் முகாமைத்துவத்துக்கான ஐ.எஸ்.ஓ 14001:2004 தரச் சான்றும் வழங்கப்பட்டுள்ளன. [illegible] களின் தங்க விருது [illegible] களனி கேபிள்ஸ் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (த)

## குறைந்த காப்புறுதித் திட்டத்தை அறிமுகமாக்கிய கொமர்ஷல் வங்கி

நுண் கடன் பெறுவோரை பாதுகாக்கும் வகையிலான புதிய செலவு குறைந்த காப்புறுதித் திட்டம் ஒன்றை கொமர்ஷல் வங்கி அறிமுகம் செய்துள்ளது. செலிங்கோ காப்புறுதி மற்றும் மெல்விக் லங்கா என்பனவற்றுடன் இணைந்து இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

விபத்து மூலமான மரணம் அல்லது நிரந்தர அங்கவீனம், வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெறுவதால் வருமான இழப்பு, மற்றும் மரணச் செலவு என்பனவற்றுக்குரிய காப்புறுதிகளை வழங்கும் வகையில் இந்தப் புதிய திட்டம் அமைந்துள்ளது.

மாதாந்த சந்தாவாக 150ரூபா, 300ரூபா மற்றும் 600ரூபாவை செலுத்தி முறையே வெள்ளி தங்கம் மற்றும் பிளாடினம் வகை காப்புறுதிகளைப் பெற்று இந்தத் திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும். இவற்றுக்கான காப்புறுதித் தொகை முறையே 1மில்லியன், 2மில்லியன் மற்றும் 4மில்லியன் ரூபாய்களாக இருக்கும். ஆயுள் காப்பாக முறையே 50ஆயிரம், ஒரு லட்சம் மற்றும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா அமைந்திருக்கும் என்றும் வங்கி அறிவித்துள்ளது.

'நுண் தொழில்முயற்சிப் பிரிவில் உள்ள எமது வாடிக்கையாளர்களை பாதுகாப்பதிலும் அவர்களது நலன்களிலும் நாம் எந்தளவு அர்ப்பணத்துடன் பணியாற்றுகின்றோம் என்பதற்கு மற்றுமோர் உதாரணமாகும்' என்று கூறினார் கொமர்ஷல் வங்கியின் பிரதி பொது முகாமையாளர் (தனியார் வங்கி பிரிவு) சந்தன குணசேகர. 'இன்று நுண் கடன் பெறுபவர்கள் இன்னும் சில வருடங்களில் சரியான ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் சிறிய அல்லது நடுத்தர தொழில் முயற்சியாளர்களாக வளரலாம். கொமர்ஷல் வங்கி அந்த ஆதரவை வழங்க திடசங்கற்பம் பூண்டுள்ளது' என்று அவர் மேலும் கூறினார்.

காப்புறுதிகளை செலிங்கோ காப்புறுதி நிறுவனம் வழங்கும். மெல்விக் லங்கா நிறுவனம் விற்பனை பிரிவை கையாளும். இந்த நிறுவனம் நடமாடும் காப்புறுதிகளை வழங்கும் ஒன்றாகும். தொழில்நுட்ப அமுலாக்கம் மற்றும் உரிமை கோரல் நிர்வாகம் என்பனவற்றையும் இந்த நிறுவனமே கையாளும். இந்த காப்புறுதிக்கான அதிகரிக்கும் தேவையை அடிப்படையாகக் கொண்டு தேவைப்படும் இடங்களில் இதன் அதிகாரிகள் வங்கிக் கிளையில் நிலை நிறுத்தப்படுவர் என்றும் வங்கி அறிவித்துள்ளது.

இந்த காப்புறுதியை பெற்றுக் கொள்ளும் ஒருவர் விபத்தில் சிக்கியோ அல்லது நோய் வாய்ப்பட்டோ ஆஸ்பத்திரியில் இருந்து தங்கியிருந்து சிகிச்சைப் பெறுகின்ற போது நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா முதல் மூவாயிரம் ரூபா வரை செலவுக்காக வழங்கப்படும். ஆகக் கூடிய பட்சம் இருபது தினங்களுக்கு வழங்கப்படும்.

காப்புறுதியைப் பெறும் ஒருவர் விபத்தின் மூலம் மரணிக்க நேர்ந்தால் மரண செலவுக்காக 25 ஆயிரம் ரூபா முதல் ஒரு லட்சம் ரூபா வரை வழங்கப்படும். மேலும் அவருடைய காப்புறுதியில் எஞ்சியுள்ள பணத்தைக் கொண்டு கடன் மீதியும் அறவிடப்படும்.

கொமர்ஷல் வங்கியில் நுண் சேமிப்பு அல்லது கடன் பெறும் நிறைய வாடிக்கையாளர்கள் உள்ளனர். வங்கியின் பேங்கா எசூரன்ஸ் திட்டத்தின் மூலம் இவர்கள் பாதுகாக்கப்படுகின்றனர். இந்த சேவைகளின் ஒரு விரிவாக்கமாகே புதிய அறிமுகம் அமைந்துள்ளது

கொமர்ஷல் வங்கி நாடு முழுவதும் 243 கிளைகளுடனும், 613 ஏரிஎம் வலையமைப்புகளுடனும் செயற்படுகின்றது. இதுவே நாட்டின் மிகப் பெரிய தனியார் வங்கியாகும். 2014ஆம் ஆண்டில் மிகச் சிறந்த தனியார் வர்த்தக முத்திரையாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவர்களைத் தண்டிப்பது யார்?

இந்தமுறை அரசியல் தேவை கருதி இரண்டு கட்டங்களாக நடைபெறும் உயர்தரப் பரீட்சையின் முதற் கட்டம் நிறைவடைந்திருக்கிறது. இவ்வாறான நிலையில் உயர்தரப் பரீட்சையில் இடம்பெறுகின்ற முறைகேடுகளை தவிர்ப்பதற்கு பரீட்சைகள் திணைக் களம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்ற போதிலும் அவை எல்லாச் சந்தர்ப்பங் களிலும் சாத்தியப்படுவதில்லை. ஆகவே அந்த முறைகேடுகள் பல்வேறு வடிவில் நடந்தேறிய வண் ணமே உள்ளன. அந்த வகையில் இந்தமுறை (2015 ஆம் ஆண்டு) உயர்தரப் பாடங்களுள் புதிதாக உட்சேர்க்கப்பட்ட தொழில்நுட்பக் கற்கை நெறி வினாத்தாள்கள் பற்றிய போதிய விளக்கம் மாணவர்களிடமும் பரீட்சை மேற்பார்வையாளர்களிடமும் இல்லை என்பதை அண்மையில் நடந்த விபரீத சம்பவம் புலப்படுத்துகிறது. வடமராட்சியில் உள்ள பரீட்சை நிலையங்களில் ஒன்றான நெல்லியடி மத்திய கல்லூரியின் 2 ஆம் இலக்க பரீட்சை அறையில் நடந்த முறைகேடு அது. அன்று நடந்த தொழில்நுட்ப பாடத்துக்கான வினாத்தாள் அமைப்புக்கட்டுரை வினா, கட்டுரை வினாக்கள் என 2 பகுதிகளைக் கொண்ட 3 மணித்தியால வினாத்தாள் ஆகும். ஆனால் அந்த இரண்டு பகுதி வினாத்தாள்களையும் இணைத்தே பரீட்சார்த்திகளிடம் வழங்கவேண்டும் என்பதே நியதி. ஆனால் மேற்சொன்ன நிலையத்தில் அங்கு (2 ஆம் அறையில்) மேற்பார்வைக்காக நின்ற ஆசிரியர்களுக்கு இதுபற்றிய அறிவுறுத்தல் தெரிந்திருக்கவில்லை. (மாணவர்களுக்கு தெரிந்திருப்பினும் அவர்கள் பரீட்சை பற்றிய பதற்றம், பயம் போன்ற காரணங்களால் தெரிவிக்காமல் இருந்திருக்கலாம். தெரிவிக்க வேண்டிய அவசியமும் இல்லை.) இதனால் மேற்பார்வையாளர்களால் அமைப்புக் கட்டுரை வினாத்தாள் மட்டுமே வழங்கப்பட்டு ஏறக்குறைய 2 ½ மணித்தியாலங்களின் பின்னரே கட்டுரை வினாத்தாளை வழங்கியிருந்தார்கள்.

மேற்படி காரணத்தினால் மாணவர்களுக்கு விடையளிப்பதற்கான நேர அவகாசம் போதாமலிருந்தது. நேரத்தை அவர்களால் சரியாகத் திட்டமிட்டுக் கொள்ளவும் முடியவில்லை. ஆனால் 3 மணித்தியாலங்களின் பின்னர் சரியான நேரத்துக்கே இரண்டு பகுதி விடைத்தாள்களும் சேர்த்துப் பெற்றுக் கொள்ளப்பட்டன. விடைத்தாள்களைக் கையளித்த பின்னர் பாதிக்கப்பட்ட மாணவர்கள் கண்ணீருடன் இதுபற்றி மேற்பார்வை உயரதிகாரியிடம் வினாவியபோது அவர், இன்றும் செய்முறைப் பரீட்சை இருக்கிறதுதானே அதில் பார்த்துக் கொள்ளலாம் என்பதாக தனது பிழையை நிவர்த்தி செய்யும் விதத்திலும் மாணவர்களைச் சமாதானம் செய்யும் நோக்கிலும் பதில் சொன்னார்.

எனவே மாணவர்களின் எதிர்காலத்தைப் பெரிதும் தீர்மானிக்கின்ற உயர்தரப் பரீட்சை போன்ற பரீட்சைகளில் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்ளும் இவர்களைப் போன்ற மேற்பார்வையாளர்களுக்கு தண்டனையைப் பெற்று கொடுப்பதால் மட்டும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தீர்வு கிடைத்து விடுமா.....?

அவர்களின் எதிர்காலம் என்னாவது......?

**மாணவர்களின் தோழன்**
யாழ்ப்பாணன்
தம்பாலை, அச்சுவேலி.

# அஞ்சல் அலுவலரின் அர்ப்பணிப்பு




அரச சேவை என்பது அர்ப்பணிப்புடன் பணியாற்றும் சேவை என்பதற்கு எடுத்துக்காட்டாக வாழும் அரச ஊழியர்கள் பலர் இருக்கின்றார்கள் என்பதையும், இளைப்பாற்று நிலையில் இருக்கும் யான் கூறவிரும்புகின்றேன். எம்முடன் வாழும் உறவினர் ஒருவரின் வாக்காளர் அடையாள அட்டை கிடைக்கப்பெறவில்லை என்ற அங்கலாய்ப்பில், ஊர்காவற்றுறை அஞ்சல் நிலையத்தைத் தொடர்பு கொண்டேன். அங்கு பணியாற்றும் அஞ்சல் அதிபர் தொலைபேசியில் மிகவும் பண்பான முறையில் என்னுடைய குறையைக்கேட்டு உரியவர் தபால் நிலையத்துக்கு வரவேண்டும் என்று கூறினார். நான் எமது வீதியில் உள்ள என்னுடைய உறவினருக்கு மட்டும் ஏன் இந்த அட்டை கிடைக்கப்பெறவில்லை என்ற காரணம் தெரியவில்லை எனக்கூறிய பொழுது, அவரது பெயரைத் தெரியப்படுத்துமாறு கேட்க, நான் அவரது பெயரைக்கூறி மீண்டும் அஞ்சல் நிலையத் தைத் தொடர்பு கொண்டேன். அதற்கு அவர் அவ்வாக் காளர் அடையாள அட்டை இங்கு காணப்படுகின்றது. அந்த வீதியில் தபால் விநியோகம் செய்யும் சேவையாளரிடம் கொடுத்தனுப்புகிறேன் என்று கூறிக் குறையை நிவர்த்தி செய்தமை அர்ப்பணிப்பு என்பதற்கு ஊர்காவற்றுறை அஞ்சல் அலுவலர்கள் எடுத்துக்காட்டாக வாழ்வதை உணர்ந்து மனம் நெகிழ அவர்கட்கு நன்றி நன்றி நன்றி என்று கூறிநிற்கின்றேன்.

**வின்சென்ட் டலிமா**
ஊர்காவற்றுறை.

## கேலிச் சித்திரம்



நன்றி: மவ்பிம

# என்ன செய்வார் மஹிந்தர்?

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாம் எதிர்பார்த்த வகையில் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமராவதற்குத் தேவையான ஆசனங்களைப் பெறத் தவறியுள்ள நிலையில் அடுத்ததாக என்னசெய்யப்போகின்றார் என்ற கேள்வி அனைத்து தரப்பினரிடமும் எழுவது இயல்பானது.

ஜனாதிபதி பதவிக்காலத்தை நிறைவு செய்வதற்கு இரண்டு ஆண்டுகள் முழுமையாக இருந்த நிலையில் தொடர்ந்தும் பதவியில் இருக்கவேண்டும் என்ற அதிகார வெறியில் முன்கூட்டியே ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்று ஜனவரியில் தோல்வியைத் தழுவியிருந்த மஹிந்த வெறுமனே நாடாளு மன்ற உறுப்பினர் பதவியைப் பெறுவதற்காக இம்முறை தேர்தலில் களமிறங்கியிருக்கவில்லை .

மாறாக 19ஆவது திருத்தத்தின் மூலமாக அதிகாரம் வலுப் படுத்தப்பட்ட பிரதமர் பதவியைப் பெற்று மீண்டும் அதிகாரத்துக்கு வந்துவிட வேண்டும் என்பதே அவரது எதிர் பார்ப்பாக இருந்தது.

ஜனவரித் தேர்தலின்போது அதி உச்சபட்ச அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி அரச வளங்களை முன்னெப்போதுமில்லாத வகையில் பிரயோகித்த போதும் கிடைத்திடாத வெற்றி, எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு அரசியல் செய்யும்போது கிடைக்கப்போவதில்லை என்பதை பழுத்த அரசியல்வாதியான மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்துகொள்ளத் தவறினாரா? அன்றேல் பதவிமோகம் அவர் கண்ணை மறைத்ததா என்ற கேள்விகள் எழுகின்றன.

நேற்றையதினம் விடுத்துள்ள அறிக்கையொன்றில்,

"2015 பொதுத் தேர்தலில் பல சவால்களுக்கு மத்தியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்ற பெறுபேறுகளை நான் நேர்த் தியாக ஏற்றுக்கொள்கிறேன். இந்தத் தேர்தலில் எமது கூட்ட மைப்புக்கு வாக்களித்த அனைத்து அன்பான வாக்காளர்க ளுக்கும் - இரவு பகல் பாராது பாடுபட்ட எமது "கட்சியாளர்க ளுக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கி றேன். கிடைத்துள்ள மக்கள் ஆணையின்படி நான் தொடர்ந்து அரசியலில் ஈடுபடுவேன் என்றும் நாடாளு மன்றில் ஆசனம் ஏற்று இதுவரை நாட்டுக்கு - மக்களுக்கு செய்த சேவையைத் தொடர்ந்து செய்வேன் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் விருப் பத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்." - என தொடர்ந்தும் நாடாளுமன்றில் மக்கள் சேவையாற்றும் தமது விருப்பை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வெளியாகிக்கொண்டிருந்த நிலையில், இராணுவத்தினரைப் பயன்படுத்தி பலாத்காரமாக பதவியில் நீடிப்பதற்கு சூழ்ச்சிகளை முன்னெடுத்தார் என்ற குற்றச்சாட்டுகள் மஹிந்தவுக்கு எதிராக முன்வைக்கப்பட்டி ருந்தன.

ஆனால், ஊடகங்களில் வழங்கிய பேட்டிகளிலும், மக்கள் சந்திப்புகளிலும், கூட்டங்களிலும் தாம் மக்கள் ஆணைக்குத் தலைவணங்கி ஒட்டுமொத்த உத்தியோக முடிவுகள் முழுமை யாக வெளியாகுமுன்னரே அலரிமாளிகையில் இருந்து வெளியேறியதாக மஹிந்த திரும்பத் திரும் பக் கூறிவந்தார். தேர்தல் பிரசாரங்களின்போதும், அண்மையில் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தின் போதும் இவ்வாறே தெரிவித்திருந்தார்.

தாம் அதிகாரத்தைத் துறப்பதற்கு ஒருபோதுமே பின்வாங்கியதில்லை, எந்தத் தியாகத்திற்கும் தயாரானவர் என்று மஹிந்த காண்பிக்க முற்பட்டாலும், அவரது ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் அரங்கேற்றிய அரசியல் முன்னெடுப்புகள் குறிப்பாக, 18ஆவது திருத்த நிறைவேற்றம் அதிகாரத்தை ஒட்டுமொத்தமாக அனுபவிக்கும் அவரது நோக்கத்தை துலாம்பரமாகக் காண்பித்தது. அதன் தொடர்ச்சியே நாடாளுமன்றத்தேர்தலில் பிரதமர் பதவிக்கான நப்பாசை.

தற்போது அதுவும் எட்டாக்கனியாகிவிட்டுள்ள நிலையில் மக்கள் ஆணையை மதிப்பதாக மீண்டும் மஹிந்த பிதற்றத் தொடங்கியிருக்கின்றார்.

தோல்வியை ஏற்றுக்கொள்ளும் கனவான்தன்மை மஹிந்த விடம் கிடையாது என்பதற்கு ஜனாதிபதித்தேர்தலில் அடைந்த தோல்விக்குப் பின்னர் அவர் தெரிவித்த கருத்துகளே சான்று பகர்கின்றன. சிறுபான்மையினராலும் சில வெளிநாட்டுச் சக்திகளின் சதியாலுமே தாம் தோற்கடிக்கப்பட்டதாகக் காரணம் கூறிய மஹிந்த, தோல்விக்கான காரணங்களை நேர்மையுடன் ஆராயத் தவறியமை மேலும் அவரைத் தோல்வியில் தள்ளி விட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க எத்தனை தடவைகள் தோற்றபோதும் கனவான் தன்மையுடன் அந்தத் தோல்விகளை ஏற்றுக்கொண்டு பொறுமையாக அரசியல் காய்களை நகர்த்தியதன் விளைவாக வரலாறு காணத அளவில் வாக்குகளைப் பெற்று மீண்டும் பிரதமராகின்றார்.

பொறுமையைக் கடைப்பிடித்து அக்காலப்பகுதியில் இனவாதிகளின் பிடியில் இருந்து விடுபட்டு, அனைத்து மக்களையும் உள்வாங்கி நடப்பாராக இருந்தால் திரும்பவும் அதிகாரத்திற்கு வருகின்ற வாய்ப்பு மஹிந்தவுக்கு கிடைக்கும் என்ற சாத்தியப்பாடுகளை நிராகரித்துவிட முடியாது. தற்போது எந்தக் கட்சிக்கும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலையில், எதிர்பார்ப்பதை விடவும் விரைவாகவே அதிகாரத்திற்கு அவரால் வரமுடியும். ஆனால் அதற்கு முன்பாக தனது இனவாதப் பிடியிலிருந்து விடுபட்டு, தெளிந்த அரசியல்வாதியாக அவர் தன்னை நிரூபிப்பது அவசியமாகும்.

தோல்விகளைப் போன்று மனிதர்களுக்குப் பாடங்களை எதுவுமே கற்றுத் தருவதில்லை. அதிலும் முக்கியமானது தோல்வி நிரந்தமானதல்ல என்பதாகும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## உருப்படியான உரிமைகளே தமிழர்களின் உடனடித் தேவை

இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் கடந்த பதினேழாம் திகதி நடைபெற்று, அதன் முடிவு நேற்றுமுன்தினம் இரவு அறிவிக்கப்பட்டது.

நாட்டின் முந்திய தேர்தல்களுடன் ஒப்பிடுகையில் இந்தத் தடவை மிகக் குறைந்த அளவு வன்செயல்களே மேலெழுந்து இருந்தன.

தமக்குரிய வாழ்வியல் தேவைகளும், அரசியல் உரிமைகளும் கணிசமான அளவேனும் கிடைக்க, புதிய தேர்தல் வெற்றி வழி செய்ய வேண்டும் என்பதே தமிழ் பேசும் மக்கள் குழுமங்களின் அபிலாசை என்பதை அறுத்து உறுத்துக் கூற இயலும்.

தமிழ் மக்களை -- வாக்காளர்களை -- பொறுத்தவரையில், தமக்கான அரசியல் உரிமைகளும், வாழ்வியல் தேவைகளும் பிசிறின்றி, குறைவின்றிக் கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் நீண்ட கால அபிலாசையும் கோரிக்கையும் ஆகும்.

ஆனால் கடந்த பல ஆண்டுகளாக, அவற்றை வழங்குவதற்கான மனவிருப்பம் கொழும்பு அரசுகளுக்கு முகிழ்ப்பதாகத் தானும் காணோம்.

தமக்குரிய அரசியல், வாழ்வியல் உரிமைகள், உரிய அளவில் தமக்குக் கிடைக்க வேண்டும் என்பதே அவர்களின் இலக்கு என்பதை சிங்கள அரசுகள், அரசியல் தலைவர்கள் உய்த்து உணர்வதாக இல்லை. அதனை நாடிய எந்த அறிகுறியும் கடந்த முப்பது ஆண்டு காலத்தில் சாடைமாடையாகத்தானும் தென்படவில்லை.

எவ்வாறோ, இனிமேலாவது பதினேழாம் திகதிய பொதுத்தேர்தலின் பின்னராவது, தமிழ் மக்கள் தமது வாக்குகள் ஊடாக வெளிப்படுத்திய அரசியல் மற்றும் வாழ்வியல் வேட்கைகளை, தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் -- ஆட்சித் தலைவர்கள் -- உள்வாங்குவதில் அக்கறை கொள்வார்கள் என நம்ப வைக்கும் சமிக்ஞை எதுவும் தென்படவில்லை. அவ்வாறெனின் தமிழ் மக்களின் உரிமைகளை அவர்கள் பகுத்து உணரும் போக்கு மேலெழும் என்று கொள்ள இயலாது!

ஆனால், இனிவரும் காலத்தில் தமது விருப்பத்தின் பிரகாரம் தமிழ் மக்களை ஏய்க்காட்டவும், இழுத்துச் செல்லவும் இய லாது என்பதைத் திங்கட்கிழமைப் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

மேலும், ஓகஸ்ட் பதினேழாம் திகதிய தேர்தல் முடிவுகள் -- வடக்கு, கிழக்குத் தமிழ் வாக்காளர்களின் புள்ளடிகள் -- பிரதிமைப்படுத்திய உள்ளார்ந்த அர்த்தத்தையும் அதனூடான அரசியல் அபிலாசையையும், சிங்களத் தலைவர்களும் அவர்கள் அமைக்கும் அரசும் உள்ளூர்ந்து ஆராய்ந்து செயற்பட வேண்டும்.

இலங்கையின், இந்த நாட்டின் புதிய அரசு தமிழ் மக்களின் உள்ளார்ந்த விருப்பத்தை ஆழமாக ஆய்ந்து, அவர்களுக்கு உரித்தான உரிமைகளை வழங்குவதற்கு மாசுமறுவற்ற மனத்துடன் கையுயர்த்த வேண்டும்.

தமிழ் மக்களுக்கு, அரசியல் உரிமைகளாயினும் சரி, வாழ்நிலை சார்ந்த உரிமைகளாயினும் சரி, வெறும் பேச்சுக்காகவோ, போக்குக் காட்டுதலுக்காகவோ அன்றி -- உருப்படியான உள்ளீடுகள் கொண்ட அரசியல்பொதி ஒன்று உள்ளடங்கிய தீர்வை, புதிய அரசு பதவியேற்கும் வேளை முன்வைக்க வேண்டும்.


நாடாளுமன்றில் அதனைச் சமர்ப்பிப்பதும் அவசியம். அது குறித்து அங்கு விவாதம் நடத்தி வாக்களிப்புக்கு விட வேண்டும்.

ஆளும் தரப்புத் தனித்து வழங்கும்போது, எதிர்க்கட்சியினர் பின்னடித்து அல்லது பிழை திருத்தி சகுனப் பிழையாக்கி விடுவர். இலங்கை நாடாளுமன்றுகளுக்கு அது புதிய வியாதியும் அன்று!

ஆகையால், உண்மையான ஜனநாயக நீதி செயலாக்கப்பட வேண்டும். அதனை புதிய அரசிடம் எதிர்பார்க்கலாமா......!!

# கூட்டமைப்புக்கு மீண்டுமொரு அக்கினிப் பிரவேசம்

சேரலாதன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டுமொரு தடவை அக்கினிப் பிரவேசம் செய்து தனது செல்வாக்கை நிரூபித்துக் காட்டிவிட்டது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அதிக நெருக்கடிகளைக் கூட்டமைப்பு எதிர்கொண்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இம்முறை கூட்டமைப்பை எவ்வாறாவது வீழ்த்தி விட வேண்டுமென்றுவியூகங்கள் வகுக்கப்பட்டு அதன் பிரகாரம் தேர்தல் பரப்புரைகளும் இடம்பெற்றன.

தேசியக் கட்சிகள் இரண்டின் சார்பில்போட்டியிட்டவர்கள்ஒருதொகுதி மக்களின் பலவீனத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வாக்குகளைச் சுரண்டும் முயற்சிகளில் ஈடுபட்டனர். இவர்கள் வாக்குறுதிகளை வழங்குவதில் தாராளமாக நடந்து கொண்டனர். ஜனாதிபதியின் விசுவாசத்துக்குத் தம்மை நெருக்கமானவராகச் சித்திரித்த வேட்பாளரொருவர் சற்றுத் தாராளமாகவே நடந்து கொண்டார். தாம் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டால்வடபகுதியில் தேனும் பாலும் ஓடுமென்றும், வேலையில்லாத அனைவருக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படுமெனவும், அபிவிருத்தித் திட்டங்கள் முழுவீச்சில் இடம்பெற்று வடபகுதி சொர்க்கலோகமாக மாறிவிடுமெனவும் அவர் தமது மனதில் தோன்றியதையெல்லாம் கொட்டித் தீர்த்தார். மேலும் தாம் நாடாளுமன்றம் சென்றால் முக்கிய அமைச்சுப்பொறுப்பொன்று வழங்கப்படுமெனவும், அதன் மூலமாக ஏராளமாகச் சாதிக்க முடியுமெனவும் கதையளப்பதற்கும் அவர் தயங்கவில்லை. தேர்தல் பரப்புரைகளுக்குச் சற்றுத் தாராளமாகவே அவர் பணம் செலவழித்ததையும் அவதானிக்க முடிந்தது. தொலைக் காட்சியொன்றில் அவரது பரப்புரைக் கூட்டங்கள் முக்கியத்துவம் பெற்றன. இசைக் கச்சேரிகளுக்கும் குறைவில்லை. அந்த இளம் வேட்பாளர் எப்படியாவது வெற்றிபெற்றேதீருவாரென்றமாயத்தோற்ற மொன்றும் உருவாக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை மோசமாக விமர்சிக்கும் செயற்பாடுகளும் இடம் பெறத் தவறவில்லை. ஆனால் தேர்தல் முடிவுகள் அவருக்குத் தகுந்த பாடத்தைப் புகட்டியுள்ளன.

வேறொரு சாரார் தாமே உண்மையான தமிழ் உணர்வாளர்கள் எனக் காட்டிக்கொண்டனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடுமையாக விமர்சிப்பதே அவர்களின் முக்கிய வேலையாகவும் காணப்பட்டது. தம்மை இந்த ஒரேயொரு தடவை நாடாளுமன்றத்துக்கு அனுப்பி வைக்குமாறும், தம்மால் மட்டுமே தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியுமெனவும் தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் முழங்கித் தள்ளினார்கள். இவர்களின் வேகத்தைக் கண்ட சிலர் கூட்டமைப்பின் அத்தியாயம் முடிவடையப் போகின்றது, புதிய அத்தியாயத்தை இவர்கள் எழுதப் போகின்றனர் என்று கூடக் கூற ஆரம்பித்தனர். ஆனால் தேர்தல் முடிவுகள் வெளிவந்தபோதுதான் காற்று இல்லாத சக்கரங்களைக் கொண்ட வண்டியில் இவர்கள் பயணித்ததைத் தொடர்ந்தமை தெரிய வந்தது.

இன்னொரு சாரார் போராளி களைக் காட்டியாவது நாடாளுமன்றம் செல்லத் துடித்தனர். இதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடுமையாக விமர்சிப்பதே சரியானதென இவர்கள் உணர்ந்து கொண்டனர். அதன் பிரகாரமே செயற்படவும் தலைப்பட்டனர். இறுதியில் சில நூற்றுக்கணக்கான வாக்குகளையே அவர்களால் பெறமுடிந்தது.

இவ்வாறுதான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் விதத்திலான நடவடிக்கைகள் பல்வேறு தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் தமிழ் மக்கள் கூட்டமைப்பின் மீது வெறுப்பில் உள்ளனர், இந்தமுறை கூட்டமைப்பு பெரும் தோல்வியைச் சந்திக்கப் போகின்றது என்றவாறான பரப்புரைகளும் இடம்பெற்றன.

ஆனால் இவற்றுக்கெல்லாம் மக்கள் சரியான பதிலைத் தமது வாக்குகளின் மூலமாக அளித்துவிட்டனர். கூட்டமைப்பும் மீண்டுமொரு தடவை அக்கினிப் பிரவேசம் செய்து தமது தூய்மையை நிரூபித்து விட்டது.

மேலும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 16 நாடாளுமன்ற ஆசனங்களைப்பெற்று அரசியல் சக்தியாகவும் உருவெடுத்துவிட்டது. இதன் மூலமாக தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசவல்ல சக்தியையும் பெற்றுள்ளது. இந்த வெற்றி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா கூறிய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை. பொய்யுரைத்தவர்களையும், அர்ப்பணமற்றவர்களையும் தெளிவாக அறிந்து முற்று முழுதாக இந்தத் தேர்தலில் மக்கள் தோற்கடித்து அரசியல் அரங்கிலிருந்து அகற்றியுள்ளனரென அவர் கூறியுள்ளார்.

> வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மொத்தமாக 16 நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்று அரசியல் சக்தியாகவும் உருவெடுத்துவிட்டது. இதன் மூலமாக தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகப் பேசவல்ல சக்தியையும் பெற்றுள்ளது. இந்த வெற்றி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராஜா கூறிய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை

நாடாளுமன்றம் செல்ல வேண்டுமென்ற பேராசையை உள்மனதில் வைத்துக்கொண்டு இன உணர்வு, தமிழ்த் தேசியம் என வெளியில் கூறிக்கொள்ளும் நேர்மையற்றவர்கள் மக்கள் முன் தோன்றித் தமது சித்து விளையாட்டுக்களைக் காட்டுவார்களென்பதை எதிர் காலத்தில் எதிர்பார்க்க முடியாது என்பது தேர்தல் முடிவுகள் மூலமாகத் தெளிவாகியுள்ளது. தமிழ் மக்கள் தாம் ஏமார்ந்தவர்கள் அல்ல என்பதையும்,சோரம் போகும் இனம் தாமல்ல என்பதையும் நிரூபித்து விட்டனர்.

இந்த நிலையில் கூட்டமைப்பும் தன்மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்புக்களை உணர்ந்து செயற்படவேண்டிய தருணமும் இதுவேயாகும். மக்கள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கையை அவர்கள் இனியும் தட்டிக் கழிக்கமாட்டார்களெனநம்பலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற வேண்டும்

மு.ஈழத்தமிழ்மணி

இலங்கையின் பொதுத் தேர்தல் நடைபெற்று முடிந்து தேர்தல் முடிவுகளும் வெளியாகிவிட்டன. பெரிய தேர்தல் வன்முறைகள் இல்லாத பொதுத்தேர்தலாகவும் இது அமைந்து விட்டது.


வடக்கு – கிழக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசிய முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி. உட்பட பல சுயேச்சைக் குழுக்களும் போட்டியிட்டன. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றிருக்கின்றது.

பொதுத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்துக்கு தமிழ் மக்கள் உறுதியான அங்கீகாரத்தை வழங்கிவிட்டனர். ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு கிழக்கில் உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கம் கொண்ட கோரிக்கையை தமிழ் மக்கள் தங்கள் வாக்குகள் மூலம் சிங்கள தேசத்துக்குத் தெரிவித்துவிட்டனர். இனிமேல் பதவியேற்கப்போகின்ற புதிய அரசும் காலம் கடத்தாது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும். ஜனாதிபதி மைத்திரியும் புதிய அரசும் தமிழ் மக்களின் தீர்ப்புக்கும், கொள்கைக்கும் மதிப்பும், கௌரவமும் கொடுக்க வேண்டும். தமிழ் மக்கள் சொந்தம், பந்தங்களுக்கு அப்பால் தமிழ்த் தேசிய உணர்வுகளையும், ஒற்றுமையையும் மதித்து கொள்கைகளுக்கே வாக்களித்துள்ளனர்.

சுயேச்சைக் குழுக்கள் தோல்விகளோடு மூக்குடைபட்டுள்ளனர். போர் முடிந்தபின்னர் 2010 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் வாக்களிக்கின்ற மனோநிலையில் இருக்கவில்லை. துயரங்களும், வேதனைகளும், விரக்தியும் கொண்டவாறு தேர்தலில் அக்கறையற்று இருந்தனர். இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் அளித்த வாக்கு வீதம் குறைவாக இருந்தது. வடக்கு – கிழக்கு மாகாணத்தில் 14 ஆசனங்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொண்டது.


தமிழ் மக்கள் கேட்பதெல்லாம் உரிமையோடு வாழ வேண்டும். எந்தவிதமான இராணுவ நெருக்குவாரங்களோ, கட்டுப்பாடுகளோ இல்லாத இயல்பான ஒரு வாழ்க்கை வாழத்தக்கதான வகையிலான ஓர் அரசியல் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்பதேயாகும். இவற்றை முன்வைத்தே பொதுத்தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர். அதே நேரம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மீது தாங்கள் வைத்துள்ள நம்பிக்கை, எதிர்பார்ப்பு, அபிமானம், ஆதரவு, பற்று ஆகியவற்றையும் ஒன்று சேர்த்து தங்களது புள்ளடிகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பானது ஐந்து ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது. வன்னி மாவட்ட தேர்தல் தொகுதிகளில் நான்கு ஆசனங்களைப் பெற்றுள்ளது. அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தலா ஒவ்வொரு ஆசனத்தைத் தக்கவைத்துள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று ஆசனங்களைப் பெற்றுள்ளது. மேலும் தேசியப் பட்டியல் ஆசனங்களையும் சேர்த்து 16 ஆசனங்களைப் பெற்றுள்ளது.



வடக்கில் போட்டியிட்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய முன்னணிக்கு தமிழ் வாக்காளர்கள் ஓர் ஆசனத்தைக்கூட வழங்காது நிராகரித்துள்ளனர். ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியையும், ஜனநாயக போராளிகள் கட்சியையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்பது தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஒரு மந்திரம் போன்றது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கொள்கை, பற்று, விலைபோகாத் தன்மை, தேசிய உணர்வு இவை யாவையும் கொண்டவர்களையும் உள்ளவர்களையும் மட்டுமே தமிழ் மக்கள் கணக்கெடுத்துப்பார்த்து சரியானவர்களைத் தங்களது விருப்பம்போல் தெரிவு செய்துகொள்கின்றனர்.



இதனை வைத்தே மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான தங்கேஸ்வரி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு தும்புத்தடியை நிறுத்தினாலும் கூட மக்கள் அதற்கு வாக்களிப்பார்கள் என்று கூறியிருந்தார். நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொண்ட வெற்றியானது, தமிழ் மக்களினது எதிர்காலம் தொடர்பில் மீண்டும் நம்பிக்கை கொள்வதற்கான வாய்ப்பாக உள்ளது.

2010 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐந்து ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. இந்த முறையும் ஐந்து ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு இலட்சத்து ஏழாயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தது. இன்று ஒன்பது ஆசனங்களில் இருந்து ஏழாகக் குறைக்கப்பட்டிருந்தது.

தமிழரசுக்கட்சியின் பரிணாமம் காலத்துக்குக் காலம் வேறுபட்டு நின்று தமிழரசுக்கட்சி, சமஷ்டிக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என மாற்றங்கள் பெற்ற போதும் அதன் தாய்க்கட்சியாக இருந்தது அகில இலங்கை தமிழரசுக்கட்சியாகும். வீடு, உதயசூரியன் என அடையாளங்களால் இந்தக் கட்சியானது தன்னை வடக்கு கிழக்கில் செல்வாக்குக்குட்படுத்திக் கொண்டதுண்டு. 1989 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட விகிதாசார பிரநிதித்துவத்தின் கீழ் ஈரோஸ் அமைப்பினர் வெளிச்ச வீட்டுச் சின்னத்தின் கீழ் சுயேச்சைக் குழுவாகப் போட்டியிட்டு ஒரு தேசியப் பட்டியல் ஆசனம் உட்பட 13 ஆசனங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் 10 ஆசனங்களையும் பெற்றிருந்ததை அறிந்து கொள்ளலாம்.

தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதியாக விளங்கி வந்தது தமிழரசுக்கட்சியேயாகும். காலத்துக்குக் காலம் நடைபெற்ற பொதுத் தேர்தல்களில் தமிழ் மக்கள் இந்தக் கட்சிக்கு வாக்களித்து அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

புதிய அரசானது தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கான ஆணையாகவே இந்தத் தேர்தலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மைத்திரியும் புதிய அரசும் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடக்கம் சமஷ்டித் தீர்வு வரைக்கும் பயணிக்க வேண்டியது கடப்பாட்டில் உள்ளது. மூன்றாவது சக்தியாக உருவாகியிருக்கின்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழினத்தின் சார்பில் வலுவான பேரம் பேசுகின்ற கட்சியாக தமிழ் மக்களின் பலத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. தென்னிலங்கையில் உள்ள சிங்கள இனவாதிகளின் எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் கரி பூசப்பட்டுள்ளது.



> புதிய அரசானது தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை வழங்குவதற்கான ஆணையா கவே இந்தத் தேர்தலைப் பயன் படுத்திக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி மைத்திரியும் புதிய அரசும் தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகள் தொடக்கம் சமஷ் டித் தீர்வு வரைக்கும் பயணிக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. மூன்றாவது சக்தியாக உருவாகி யிருக்கின்ற தமிழ்த்தேசியக் கூட் டமைப்பு தமிழினத்தின் சார்பில் வலுவான பேரம் பேசுகின்ற கட்சி யாக தமிழ் மக்களின் பலத்தையும் அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது.

இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குத்தான் பெரிய பொறுப்பும், கடமையும் அதிகமுள்ளது. தமிழ் மக்கள் தொடர்ந்தும் வாக்களித்து வருகின்றனர் என்ற காரணத்துக்காக வெறுமனே மக்களிடம் வாக்குகளைப் பெற்றுக் கொண்டு பின்னர் அமைதியாக இருந்து விடுவதல்ல. இது தமிழினத்தின் எதிர்காலத்துக்கு ஆரோக்கியமானதொன்றல்ல. மீண்டும் ஐக்கிய தேசியக்கட்சித் தலைவர் ரணில் பிரதமராகின்றார். தேசிய அரசே அமையப்போகின்றது. தமிழினத்தின் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய வல்லமை மைத்திரிக்கு உண்டு என்று அதீத நம்பிக்கையை வைக்காது புதிய நல்லிணக்க அரசுக்கு ஏற்றவாறு தாளம் போடாமல் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைத்தல், மீள்குடியேற்றங்கள், காணாமற்போனோர் விவகாரம், நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தல் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரங்களை வலுப்படுத்துதல் போன்றவற்றுக்கான முயற்சி தொடர்ந்தும் முன்னெடுக் கப்படல் வேண்டும். தமிழரசுக்கட்சிக்கு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் கிடைத்த வெற்றியானது இன்றைய ஆட்சியாளர்களுக்கு பலவித நெருக்கடிகளைக் கொடுக்கும். தமிழரசுக்கட்சிக்கு அளிக்கப்பட்ட வாக்குகள் யாவும் சமஷ்டிக் கொள்கையின் உறுதியான தளத்துக்கு விழுந்தவைகளாகும் என்பதுதான் உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கு வழிகாட்டும் தெய்வங்கள்

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம் எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒருபோதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மனநிலைக்கு, இதயம் ஒருவனை அழைத்துக்கொண்டு போகிறது.

தாழ்ந்த உண்மையிலிருந்து உயர்ந்த உண்மைக்கு மனித குலம் செல்கிறது. தவறிலிருந்து உண்மைக்குச் செல்கிறோம் என்று நினைப்பது பொருந்தாது.

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



நீ செய்த தவறுகளை வாழ்த்து. அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல் வாழ்த்துக்கள்! இன்பங்களுக்கும் நல் வாழ்த்துக்கள்!

## மனிதன் எண்ணுவது போலாகின்றான்


நாம் இந்த உலகை எமது வர்ணக் கண்ணாடி கொண்டு பார்க்கிறோம். அதனால் உலகம் அந்த வர்ணமுடையது என உலகுக்கு அவ்வர்ணத்தைப் பிழையாகவே நாம் ஊட்டுகிறோம். எமது பிழையான பார்வையே இத்தகைய குறைபாடுகளைக் காண வைக்கிறது. ஆனால் அவை உண்மையில் சிருஷ்டியில் இருக்கவில்லை.

நாம் எமது புலன்களைச் சரியான முறையில் உபயோகித்தால் அவை எமக்கு சரியான எண்ணப் பதிவுகளைத் தரும். எமது சுய எண்ண ஓட்டங்கள், உணர்வுகளிலுள்ள பிழைகளை நாம் தப்பிதமாக எமது புலன்களுக்குச் சாட்டி விடுகிறோம்.



### சாயி சிந்தனை

## ஆரோக்கியம் தரும் சூப்!



மூலிகைகள், காய்கறி கள், கீரை வகைகள் என்பவற்றைக் கொண்டு விதவிதமான சூப்கள் தயாரிக்கலாம். பொதுவாக, சூப் பசியைத் தூண்டக்கூடியது. ஒரு வேளைக்கான உணவின் தேவையை ஒரு கப் சூப் அருந்துவதன் மூலம் பெற முடியும். ஆரோக்கியத்தை விரும்புபவர்களுக்கு மூலிகை சூப், குழந்தைகளுக்குப் பிடித்த சத்தான சூப் வகைகள் என அனைவரும் விரும்பி அருந்தக் கூடியசூப் வகைகளைச் செய்து கொடுக்கலாம். இதனை உணவு உண்பதற்கு அரை மணி நேரம் முன்பு அருந்த வேண்டும். தேநீருக்குப் பதிலாக தானிய சூப் வகை களைக் குடிக்கலாம். மூலப் பிரச்சினை இருப்பவர்கள், இதய நோயாளிகள், உடல் நிறை குறைக்க நினைப்பவர்கள், சர்க்கரை நோயாளிகள் சூப் வகைகளை தாராளமாக எடுத்துக் கொள்ளலாம். ஆனால், உப்பு, வெண்ணெய் போன் றவற்றை மிகவும் குறைவாகச் சேர்த்துக்கொள்ள வேண்டும். நிறையைஅதிகரிக்கநினைப்பவர்கள் மட்டும் சூப் வகைகளைக் குறைவாகச் சாப் பிடலாம். சிறுநீரகக் கோளாறு, அல்சர் பிரச்சினைஉள்ளவர்கள்மசாலா சேர்ந்த சூப்களை அருந்த வேண்டாம்.

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | கன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 80 | 60 | 60 | 35 |
| கத்தரி | 80 | 100 | 80 | 80 | 100–120 | 60 | 80 | 40 |
| கரட் | 140 | 120 | 100 | 100 | 100–180 | 160 | 140 | 140 |
| மரவள்ளி | 70 | 50 | 60 | 40 | 60 | 40 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 80 | 60 | 100 | 60 | 40 | 140 | 100 |
| பாகல் | 160 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 80 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 90 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 60 | 80 | 80 | 80 | 70 |
| பூசணி | 40 | 30 | 50 | 40 | 30–35 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 200 | 100 | 80 | 80 | 120 | 100 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 30 | 30 | 30 | 20 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 250 | 150 | 250 | 150 | 160 | 400 | 120 | 150 |
| புடோல் | 50 | 40 | 50 | 40 | 60 | 40 | 80 | 50 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 60 | 80 | 100 | 70 |
| வெண்டி | 60 | 20 | 50 | 40 | 80 | 80 | 80 | 25 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 180 | 140 | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 160 | 80 | 80–100 | 80 | 120 | 80 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 60 | 40–60 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 100 | 90 | 80–90 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 50 | 60 | 60 | 150 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 160 | 100 | 140 | 120 | 160 | 160 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | 100 | 160 | 180 | 140 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 30 | 100 | 90 | 120 | 100 |

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 700 | 500 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 350 | 150 | 400 |
| கணவாய் | 650 | 600 | 700 | 600 | 600 | – |
| பாரை | 650 | 700 | 600 | 450 | 500 | 400 |
| சுறா | 600 | 600 | 500 | 600 | 600 | – |
| சீலா | 250 | 500 | 400 | 450 | 450 | 350 |
| விளை | 600 | 450 | 450 | 500 | 450 | 350 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 150 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 500 | 800 | 700 | 500 | 400 | – |
| ஓரா | 400 | 350 | 300 | 450 | 300 | – |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 100 | – |
| நகரை | 200 | 300 | 300 | 300 | 100 | 300 |
| சூடை | 150 | 200 | 130 | 120 | 150 | 70 |
| ஒட்டி | 200 | 250 | 300 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 250 | 200 | 130 |
| பாலை | 400 | 350 | 400 | 400 | – | 300 |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 150 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 280 | 300 | – |

## நாளை

ஆவணி–04
வெள்ளிக்கிழமை
21.08.2015

திதி: ஷஷ்டி மு.ப.7.35 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப.04.46 வரை
சுபநேரம்: 06.05–07.35 வரை
இராகுகாலம்: 10.35–12.05 வரை

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 4 | 6 | 7 | | | |
| | | 3 | | | | | | |
| | | 8 | | | | | 1 | |
| | 7 | | 9 | | | | | 8 |
| 6 | | | | | | | | 2 |
| 1 | | | | | 5 | | 3 | |
| | 4 | | | | | 5 | | |
| | | | | | | 7 | | |
| | | | 8 | 2 | 4 | 3 | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 1 | 9 | 6 | 5 | 4 | 7 | 2 |
| 4 | 2 | 7 | 1 | 8 | 3 | 9 | 5 | 6 |
| 9 | 5 | 6 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 1 | 7 | 9 | 6 | 2 | 4 | 5 | 8 | 3 |
| 8 | 3 | 4 | 7 | 5 | 1 | 2 | 6 | 9 |
| 2 | 6 | 5 | 8 | 3 | 9 | 1 | 4 | 7 |
| 5 | 4 | 2 | 3 | 1 | 7 | 6 | 9 | 8 |
| 7 | 9 | 8 | 2 | 4 | 6 | 3 | 1 | 5 |
| 6 | 1 | 3 | 5 | 9 | 8 | 7 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்



## மேடம்

கிடைக்கும் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்தி சாதிப்பதில் வல்லவர்களான நீங்கள், மற்றவர்களை உற்சாகப்படுத்தி மகிழ்பவர்கள். உங்கள் பூர்வ புண்யாதிபதி சூரியன் 5 ஆம் வீட்டில் ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால் மனக் குழப்பம் நீங்கும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளும் இனிப் பொறுப்பாக நடந்து கொள்வார்கள். குரு 5 ஆம் வீட்டில் வலுவாக நிற்பதால் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால் பிள்ளைகளால் மகிழ்ச்சி, கல்யாணம், காது குத்து, கிரகப் பிரவேசங்களில் முதல் மரியாதை கிடைக்கும். வாகனவசதி பெருகும். புதிய சிந்தனைகள் தோன்றும். கல்வியாளர்களின் நட்பு கிடைக்கும். இளைய சகோதர, சகோதரிகள் ஆதரவாக இருப்பார்கள். சின்னச் சின்ன எதிர்ப்புகள், நரம்புக் கோளாறு என்பன வந்து நீங்கும். தாய்வழிச் சொந்த பந்தங்களின் ஆதரவு பெருகும். புது வேலை அமையும். உடல் நலத்தில் கவனம் செலுத்தப் பாருங்கள். அரசியல்வாதிகளுக்கு சகாக்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கன்னிப் பெண்களுக்கு முகப்பரு, தேமல் நீங்கி முகம் ஜொலிக்கும். கெட்ட நண்பர்களை ஒதுக்குவீர்கள். மாணவர்களுக்கு நினைவாற்றல் கூடும். மதிப்பெண் உயரும். வியாபாரத்தில் இலாபம் குறைவாக வருவதற்கான காரணத்தை கண்டறிந்து நீக்குவீர்கள். வாடிக்கையாளர்களின் கருத்தைக் கேட்டு கடையை இடமாற்றம் செய்வீர்கள். வேலையாள்கள், பங்குதாரர்களின் குறை நிறைகளைச் சுட்டிக் காட்டுவீர்கள். பிரபலமானவர்களைப் பயன்படுத்தி விளம்பரம் செய்து கூடுதல் இலாபமடைவீர்கள். கூட்டுத் தொழில் வளர்ச்சி அடையும். உத்தியோகத்தில் அலுவலகச் சூழ்நிலை அமைதி தரும். சக ஊழியர்களுக்காக மேலதிகாரிகளிடம் பரிந்து பேசுவீர்கள். மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும்.

கலைத்துறையினர்கள் சிலர் உங்களின் மூளையைப் பயன்படுத்தி முன்னேறுவார்கள். விவசாயிகள் அரச சலுகைகளைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வீர்கள். கிரக மாற்றம், சேர்க்கை, யோகம் சாதகமாக இருப்பதால் மனதுக்கு இனிய சம்பவங்கள் நிகழும். செல்வாக்கு, சொல்வாக்கு உயரும். கன்னிப் பெண்களின் கனவு நனவாகும். பஞ்சமாதிபதியின் பலம் காரணமாக திடீர் யோகம், அதிர்ஷ்டம் உண்டு. திருமணத் தடை நீங்கும். மாமன் வகை உறவுகளால் மகிழ்ச்சி, ஆதாயம் உண்டு. தாத்தாபாட்டியிடம் இருந்து மகிழ்ச்சியான தகவல் வரும். வீடு, கடையில் பராமரிப்பு செலவு ஏற்படும். சமையல் அறைக்குத் தேவையான சாதனங்கள் வாங்குவீர்கள். கொடுக்கல், வாங்கலில் நிதானத்தைக் கடைப் பிடிக்கவும். உத்தியோகத்தில் பயணங்கள், அலைச்சல்கள் இருக்கும். பயணத்தால் ஆதாயம் உண்டு. வியாபாரம் செழிக்கும்.



பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**பரிகாரம்:**

தினமும் கந்த சஷ்டி கவசம் படிக்கலாம். முருகன் கோயிலுக்கு விளக்கேற்ற எண்ணெய் வாங்கிக் கொடுக்கலாம். நோயாளிகளுக்கு உதவலாம்.



## இடபம்

பாடசாலைப் பருவத்திலேயே எதையும் வைராக்கியத்துடன் செய்து முடிக்கும் நீங்கள் மனதில் பட்டதை பளிச்சென பேசும் பழக்கம் உடையவர்கள். உங்களின் பிரபல யோகாதிபதியும், பூர்வ புண்யாதிபதியுமான புதன் சாதகமான வீடுகளில் இந்த மாதம் முழுக்க சென்று கொண்டிருப்பதால் கொஞ்சம் உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். ராசிநாதன் சுக்கிரன் வலுவாக இருப்பதால் சோர்வு, களைப்பு நீங்கும். பழைய கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள். பூர்வீகச் சொத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி பாகப்பிரிவினை சுமுகமாக முடியும். நட்பு வட்டம் விரியும். சூரியன் 4 ஆம் வீட்டில் ஆட்சி பெற்று அமர்ந்திருப்பதால் பாதிப் பணம் கொடுத்து முடிக்கப் படாமல் இருந்த வீட்டை மீதிப்பணம் தந்து பத்திரப் பதிவு செய்வீர்கள். வங்கிக் கடன் கிடைக்கும். தாயாரின் உடல் நலன் சீராகும். தாய் வழியில் இருந்து வந்த பிணக்குகள் நீங்கும். வக்கிரச்சனி 5 ஆம் வீட்டில் ராகு தொடர்வதால் பிள்ளைகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். அவர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்காமல் பிடிவாதமாக இருப்பார்கள். தாயார் கோபமாகப் பேசினாலும் நீங்கள் பொறுத்துப் போவது நல்லது. சுக்கிரன் சாதகமான வீடுகளில் செல்வதால் பழைய வீட்டை, மனையை விற்றுப் புதியதாக வாங்குவீர்கள். கல்யாணம் கூடி வரும். கிரகப் பிரவேசம், திருமணத்தை முன்னின்று நடத்துவீர்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். அநாவசியச் செலவுகளைக் கட்டுப்படுத்துவீர்கள். அரசியல்வாதிகளது தலைமை உங்களை நம்பி முக்கிய பொறுப்பை ஒப்படைப்பர். கன்னிப் பெண்களுக்கு, உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பார்கள். மாணவர்களுக்கு அவ்வப்போது மந்தம், மறதி வந்து நீங்கும். வியாபாரத்தில் அதிரடியாக முதலீடு செய்யாமல் அமைதியாக செயற்படப் பாருங்கள். இலாபம் கணிசமாக உயரும். பழைய வாடிக்கையாளர்களை தக்க வைத்துக் கொள்ளுங்கள். பங்குதாரர்களால் தர்மசங்கடமான சூழல்களுக்கு ஆளாவீர்கள். கண்ணாடி, ஆடை, பெற்றோல், டீசல் வகைகளால் இலாபமடைவீர்கள். உத்தியோகத்தில் நீங்கள் பொறுப்பாக நடந்து கொண்டாலும், மேலதிகாரி குறை கூறத்தான் செய்வார். அநாவசிய விடுப்புகளைத் தவிர்க்கவும். சக ஊழியர்களுடன் மோதல்கள் வரக்கூடும். கலைத் துறையினர்களுக்கு ஒப்பந்தங்கள் தள்ளிப் போகும். சம்பள விடயத்தில் கவனமாக இருங்கள். விவசாயிகள் குறுகிய காலப் பயிர்களைத் தவிர்த்து விடுங்கள். அனுபவ அறிவாலும், ஆன்மிக பலத்தாலும் முன்னேறும் மாதமிது. சாதக, பாதகங்கள் இணைந்த மாதம். சொந்த வேலைகளுடன் மற்றவர் வேலையையும் பார்க்க வேண்டி வரும். பெண்களுக்கு சோர்வு, மனசஞ்சலம் ஏற்பட்டு விலகும். தேவையற்ற விடயங்களில் கருத்துக் கூறுவதைத் தவிர்க்கவும். வெளிநாட்டில் இருந்து சாதகமான செய்தி வரும். மாதக் கடைசியில் திடீர் செலவு ஏற்பட வாய்ப்புள்ளது. தாய் உடல்நலனில் அக்கறை கொள்வது நலம். மாமன் வகை உறவுகளால் ஆதாயம் உண்டு. புதுமணத் தம்பதிகள் குழந்தைப் பாக்கியத்தை எதிர் பார்க்கலாம். வேலை தேடுபவர்களுக்கு நல்ல செய்தி வரும். வீடு மாறும் முயற்சி சற்றுத் தாமதம் ஆகலாம். உத்தியோகத்தில் சாதகமான நிலை உருவாகும். உயர் அதிகாரியின் ஆதரவு உண்டு. வியாபாரம் இலாபகரமாக இருக்கும். புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**பரிகாரம்:**

தினமும் அஷ்டலட்சுமி ஸ்தோத்திரம் படிக்கலாம். விநாயகருக்கு கரும்புச்சாறு அபிஷேகம் செய்யலாம். ஏழைகளின் மருத்துவத்துக்கு உதவலாம்.

# திருமணமும் விவாகரத்தும்

ஒரு ஆணுக்கும், பெண்ணுக்குமான உறவு அவ்வளவு சுலபமானது அல்ல. அது ஒரு சிக்கலான உறவே. இந்த உறவு நீடித்துச் செல்வதற்கு, இருவருமே மனமார்ந்த முயற்சியை மேற்கொள்ள வேண்டும். அதிலும் காதல் ரசத்துடன் ஆரம்பிக்கும் இந்த உறவு, திருமண வாழ்வில் நாள்கள் ஓட ஓட பல தருணங்களை எதிர்கொள்ள பொறுமையும், தன்னடக்கமும் தேவை. குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பினாலும், வீட்டு வேலைகளுக்காக அங்கும் இங்கும் ஓடுவதாலும் குழப்பம் ஏற்படுவதுண்டு. இதனால் தம்பதியினருக்கு இடையே பிரச்சினைகள் எழலாம். ஆனால் எவரால் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் சமாளித்து தடைகளை கடந்து போக முடிகிறதோ, அவர்களால் தான் வெற்றிகரமான குடும்ப வாழ்க்கையை வாழ முடியும். அதிலும் குழந்தைகளுக்காகப் பெண்கள் தங்கள் திருமண வாழ்வு வெற்றி பெற வேண்டும் என்று எண்ணுவார்கள். தங்களின் பாதுகாப்புத் தேவையை மனதில் வைத்துக் கொண்டே, கணவனுடன் திருமண பந்தத்தில் ஈடுபடுகின்றனர். சில நேரங்களில் நிதிக்காகவும், பெண்கள் தங்கள் கணவனைச் சார்ந்தே வாழ்கின்றனர். இருப்பினும் ஒரு கட்டத்தில் தனது கணவனை விட்டுப் பிரிய வேண்டிய சூழ் நிலை பெண்களுக்கு ஏற்படும். உயிரே இல்லாத ஒரு உறவோடு வாழ்வதற்குப் பதிலாக, விவாகரத்து பெறுவதே சிறந்த வழி என்று எண்ணுவார்கள். அதிலும் இந்தக் காலத்தில் பெண்களை ஆண்கள் தனது மனம் போன போக்கில் ஆட்டி வைக்க முடியாது. பெண்களும் விவாகரத்துக் கோரி நீதிமன்றப் படியேறும் காலம் வந்துவிட்டது. கணவன்மார்கள் தங்கள் மனைவிகளுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்தால், பெண்கள் விவாகரத்தைத் தேர்ந்தெடுக்கிறார்கள். திருமண மான போதிலும் கூட, ஆண்களுக்கு சபல புத்தி இருக்கக்கூடும். பிற பெண்களின் வலையில் எளிதில் விழுந்து விடுவார்கள். இதனை, படித்த பெண்களால் சகித்துக் கொள்ள முடியாமல் தான் விவாகரத்தை விரும்புகிறார்கள். சுயமாகச் சம்பாதிக்கும் பெண்ணாக இருந்தாலும், அவர்கள் விவாகரத்து கோருவதற்கு வாய்ப்புகள் அதிகம். குறிப்பாக கணவன்மார்கள் முரட்டுத்தனமாக நடந்து கொண்டாலோ அல்லது தாங்க முடியாத குணாதிசயத்தோடு நடந்தாலோ, பெண்கள் இந்த முடிவை எடுப்பார்கள்.

ஏனெனில் நிதி விடயத்தில் எவரையும் சாராமல் சுயமாக சம்பாதிப்பதால், பெண்களுக்கு இந்தத் தைரியம் வருகிறது. திருமணமான பெண்ணுக்கு மற்ற ஆணுடன் சாய்வு அல்லது தொடர்பு இருந்தாலும், அது அந்தப் பெண்ணை



விவாகரத்து கேட்கத் தூண்டும். இன்றைய காலக்கட்டத்தில் பல பெண்களுக்கு பிற ஆண்களின் மேல் காதல் ஏற்படுவதால், அவரை மணந்து கொள்ள தற்போதைய கணவனை விவாகரத்து செய்ய விரும்புவார்கள். குடும்பச் சுமைகள் மற்றும் பிரச்சினைகளும் கூட ஒரு பெண் விவாகரத்துக் கோர ஒரு காரணமாகும்.

சில சமயம் பெண்களுக்கு மாமியாரின் தொந்தரவு அதிகரிக்கலாம். மாமியார் எல்லா விடயத்திலும் மூக்கை நுழைக்கலாம். இது பெண்களுக்குப் பிடிக்காமல் போகலாம். பெரும்பாலும் குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் ஆதரவு இல்லாததாலும், பிரச்சினைகள் மூண்டு விவாகரத்தில் போய் நிற்கிறது. மேலும் இந்தக் காலத்துப் பெண்கள் வீட்டில் உள்ள மற்ற உறுப்பினர்கள் தன்னுடைய திருமண வாழ்வில் தலையிடுவதை விரும்புவதில்லை. ஆனால் சிலநேரம் கணவன் தனது தாயின் மீது அதிக பற்றுதலைக் காட்டும் போதும், மனைவியுடன் பிரச்சினை ஏற்பட்டு விவாகரத்தில் போய் முடியும். சலிப்புத்தன்மையும், பெண்கள் விவாகரத்துக் கோருவதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. அதிலும் பெண்களுக்கு தங்களுடைய திருமண வாழ்க்கை ஒரே மாதிரியாகப் போய்க் கொண்டிருந்தால், அது அலுப்புத் தட்டிவிடுவதோடு, விவாகரத்தையும் கேட்க வைக்கும். மனைவியை அடிப்பதனால் கூட ஒரு பெண் தனது கணவனை விட்டு விலக விவாகரத்தை எதிர்பார்க்கும் நிலை ஏற்படலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# முல்லைத்தீவு

இது இலங்கையின் வட மாகாணத்தின் 5 மாவட்டங்களில் ஒன்றாகும். இதன் தலைநகரம் முல்லைத்தீவு நகரமாகும். இது தேர்தல் நோக்கங்களுக்காக வன்னி தேர்தல் மாவட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது வவுனியா மாவட்டத்தில் பெரும்பகுதியையும், மன்னார், யாழ்ப்பாண மாவட்டங்களின் சிறு பகுதிகளையும் கொண்டு 1978 இல் உருவாக்கப்பட்ட புது மாவட்டமாகும். வன்னி இராச்சியம் என்று அழைக்கப்பட்ட பெரும்பகுதி முல்லைத்தீவு மாவட்டத்திலேயே அமைந்துள்ளது. வட மாகா ணத்தில் உள்ள மாவட்டங்களில் நிலப்பரப்பு அளவில் முதலிடம் வகிப்பது முல்லைத்தீவு மாவட்ட மாகும். இது வடக்கே கிளிநொச்சியையும் கிழக்கே இந்து சமுத்திரத்தையும், மேற்கே மன்னாரையும், தெற்கே திருகோணமலை மற்றும் வவுனியாவை யும் எல்லைகளாகக் கொண்ட ஒரு மாவட்டமா கும். இங்குள்ள காடுகளில், வைரமரங்களான, முதிரை, பாலை, வீரை, காட்டாமணக்கு, ஒதி முதலிய மரங்கள் இயற்கையாகக் காணப்படுகின்றன. அவற்றை விட பனைகளும், தென்னைகளும் கொண்ட தோப்புக்கள் நிறைய உள்ளன. தேக்கு மரங்கள் நாட்டப் பட்ட செயற்கை காடுகளை இங்கு நிறையக் காணலாம்.



# நண்பனுடையது

ஹரீஷ் பாடசாலை மாணவர்களுடன் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டு இருந்தான். அப்போது ஹரீஷின் விலை உயர்ந்த பேனா தவறுதலாக, அந்த விளையாட்டு மைதானத்தில் விழுந்து விட்டது. அந்தப் பேனாவை ஹரீஷின் பிறந்தநாள் பரிசாக அவனுடைய மாமா சிங்கப்பூரிலிருந்து கொண்டுவந்து, அவனுக்கு வழங்கியிருந்தார். ஹரீஷ் வீட்டுக்கு வந்த பின்புதான், அவனுடைய பேனா தொலைந்து போனது அவனுக்குத் தெரிய வந்தது. அவன் மிகவும் மன வேதனை அடைந்தான். அது பெரிய பெறுமதியான பொருளாக இருந்தபோதும், அதன் பின்னணியில் இருந்த அவனுடைய மாமாவின் அன்பு அவனுக்குப் பெரிதாகத் தெரிந்தது. ஹரீஷின் பாடசாலை நண்பன் குமார், அந்த விலை மதிக்க முடியாத பேனாவை அந்த விளையாட்டு மைதானத்திலிருந்து கண்டெடுத்தான். ஹரீஷ் அந்தப் பேனாவை வைத்திருந்தபோது குமாருக்கு அதன்மேல் ஆசை இருந்து வந்தது.

அதை எப்படியாவது தான் திருடி விட வேண்டும் என எண்ணியிருந்தான். ஆனால், இப்போது அதுவே அவனுடைய கையில் அகப்பட்டுக் கொண்டது. அதை எடுத்துத் தனது வீட்டிலிருந்த ஒரு பெட்டியில் பத்திரமாக வைத்திருந்தான். ஹரீஷ் விரைந்து சென்று தான் விளையாடிய இடங்களிலெல்லாம் தனது பேனாவைத் தேடினான். அது அங்கு இருந்தால்தானே அது அவனுக்குக் கிடைப்பதற்கு? அதைத் தான் குமார் எடுத்து ஒளித்து வைத்து விட்டானே? அவனுக்கு எப்படி அது தெரியப் போகிறது.

பேனா கிடைக்காத வேதனையில் ஹரீஷ் மனவருத்தத் துடன் மீண்டும் வீடு வந்து சேர்ந்தான். பேனாவைத் தனது வீட்டில் ஒளித்து வைத்திருந்த குமாருக்கு மனச்சாட்சி உறுத்தியது. திருடுவது என்பது இயல்புக்கு மாறான செயல். அதைச் செய்யக் கூடாது. தான் ஹரீஷ் இனுடைய பையிலிருந்து பேனாவை எடுக்கவில்லையென்றாலும் கூட, தான் கீழே கண்டெடுத்த பேனா ஹரீஷ் இனுடைய பேனா என்பதை அவன் நன்றாகவே அறிவான்.

அவ்வாறு இருக்கும் போது அதனை ஹரீஷிடம் ஒப்படைப்பதுதான் முறை. அதனைத் தானே வைத்திருப்பது கூடத் திருட்டுத்தான். இதை அவனுடைய மனச்சாட்சித் தெளிவாக அவனுக்கு உரைத்தது. அவனது மனம், மறுநாள் காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது அந்தப் பேனாவை அவனிடம் ஒப்படைத்துவிடு என்று அறிவுரை கூறியது. மறுநாள் பாடசாலைக்குச் சென்றதும் ஹரீஷிடம் சென்றான் குமார். ஹரீஷ் உன்னுடைய மாமா உனக்கு அன்பாகப் பரிசளித்த விலை உயர்ந்த பேனாவை நான் விளையாட்டு மைதானத்தில் கண்டெடுத்தேன். அதை உடனே உன்னிடம் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், அதன் மீது இருந்த ஆசையால் அதை நான் உன்னிடம் ஒப்படைக்கவில்லை. உரிய பொருளை உரியவரிடம் ஒப்படைக்காமல் இருப்பது கூடத் திருட்டுத்தான் என எனது மனச்சாட்சி உறுத்தியது. அதனால்தான் இதை உன்னிடம் ஒப்படைக்க வந்தேன் என்று கூறி, அந்தப் பேனாவைக் கொடுத்தான். தனது பேனா கிடைத்த மகிழ்ச்சியில் ஹரீஷ் அப்படியே குமாரைத் தன்னுடன் அணைத்துக் கொண்டான். நீ தானடா என்னுடைய உண்மையான நண்பன் என்று அவனைப் பாராட்டினான். தவறான செயல்களைச் செய்யக்கூடாது. திருடுவது நல்லபழக்கம் அல்ல. எனவே அதை ஒரு போதும் செய்யக்கூடாது!

# எண்ணங்களைக் கட்டுப்படுத்தி வெற்றி காணுங்கள்



1. ஒரு முட்டைக்குள் தங்கம் மறைந்திருக்கிறது என்று கற்பனை செய்யுங்கள். இனி ஒவ்வொரு பிரச்சினையையும் ஒரு முட்டையாகக் கற்பனை செய்யுங்கள். அதற்குள் ஒரு தங்கம் மறைந்திருக்கிறதாக நினையுங்கள், இதுவே பிரச்சினையை வெற்றியாக்கும் வழியாகும்.

2. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 20 வழிகள் இருக்கின்றன என்று கூறுகிறார்கள். முதலில் ஐந்து வழிகளைத் தெரிவு செய்யுங்கள், தேடலை ஆரம்பியுங்கள். அதிலிருந்து புதிதாக 20 வழிகள் பிறக்கக் காண்பீர்கள். இது தான் படைப்பாற்றல், அதாவது படைப்பாற்றலின் தாயே புதிய சிந்தனைதான்.

3. ஒரு பிரச்சினையை வேதனை என்று கருதாதீர்கள். அப்படிக் கருதினால் அந்த வேதனையை உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுத்து விடுவீர்கள்.

4. உங்கள் மனதைச் சுறுசுறுப்பாக்க 20 வழி களைக் காணுங்கள், அதுபோல சேம்பேறிகளாக இருக்கும் பிள்ளைகளின் மனதையும் உற்சாகப்படுவதற்குத் தூண்டி விடுங்கள்.

5. ஆர்வமும் துடிப்பும் உள்ள சக்தியை நீங்கள் உருவாக்கினால் உங்கள் குடும்பம் பயனுள்ள ஓர் இலட்சியத்தை அடையும்.

6. நீங்கள் வார்த்தைகளைக் கடுமையாக உச்சரித்தால் அன்பு என்ற மலர் கசங்கிவிடும் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

7. வெறுப்பு என்பது கூடாத செயல். அது எமது எண் ணத்தில் இருந்து தான் பிறக்கிறது, வெறுப்பு வரும்போதெல்லாம் உள்ளே கூடாத எண்ணம் ஒன்று ஓடுவதைக் கண்டு பிடியுங்கள்.

8. சொர்க்கம் என்பது ஓர் இடமல்ல. மன அழுத்தமில்லாத, இலேசாக, கனமில்லாத உணர்ச்சியை அனுபவிக்கும் நிலைதான் சொர்க்கமாகும்.

9. எமது கையில் ஆண்டவன் தந்து புவிக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிவாயுதம் விலை மதிப்பற்றதாகும், அதைப் பயன்படுத்தாவிட்டால் கழுதை சந்தனக்கட்டையைச் சுமந்து சென்று அதன் வாசம் புரியாமலே ஒரு நாள் செத்தது போன்ற கதையாகிவிடும்.

10. ஓர் எண்ணத்தை நல்ல முறையிலும் தெரிவிக்கலாம், கூடாத முறையிலும் தெரிவிக்கலாம், நல்லது கெட்டது என்பது நாம் தெரிவிக்கும் முறையாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

11. எமது தாய உணர்வின் தரத்தை உயர்த்திக் கொள்ளாததால் தான் மனம் திரும்பத் திரும்பப் பேசுகிறது. ஒரு புலி இரையை உன்னிப்பாக நோக்குவது போல எண்ணங்களை அவதானித்து ஒன்று இரண்டு என்று இலக்கமிடுங்கள். ஒரு கட்டத்தில் அவை நின்று மனம் சாந்தியடையும்.

12. ஆணவத்தை விட்டுச் சரணடையும் போதுதான் ஆன்மிக உடல் வெளிப்படுகிறது. அப்போது இறைவன் அமுதக்கடலாக இருந்து உங்களுக்கு வழி காட்டிக் கொண்டிருப்பதைக் காண்பீர்கள்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்சினைகளை

முதலாவது விசேட ஊடக அறிவிப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர், மேலும் தெரிவித்தவை வருமாறு:–

கட்சிகள், நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் ஜனவரி 8ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட மாற்றத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர். அதை மீண்டும் பின்னோக்கித் திருப்பமுடியாது. அதற்கமைய, இலங்கை அரசின் பிரதமராகக் கடமைகளைப் பொறுப்பேற்க நான் நடவடிக்கை எடுப்பேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்றுச் சந்தித்தேன். அவருடன் இணைந்து நல்லாட்சியை முன்னோக்கிக் கொண்டுசெல்ல நாம் செயற்படுவோம். விசேடமாக ஒரு விடயத்தை நான் குறிப்பிட விரும்புகின்றேன். இணக்கப்பாட்டு அரசொன்றைக் கொண்டுசெல்லவே நாம் இந்தத் தேர்தலில் போட்டியிட்டோம். நாட்டு மக்களின் பிரச்சினைகளைப் பார்த்து, அதைத் தீர்ப்பதற்கு நாடாளுமன்றத்தில் அனைவரையும் ஒன்றிணைக்கவேண்டும். அந்த வேலைத்திட்டத்திலிருந்து நாம் விலகமாட்டோம். அதைச் செய்வோம்.

இணக்கப்பாட்டு அரசுடன் முன்னோக்கிச் செல்ல இந்தச் சந்தர்ப்பத்தில், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் நான் அழைப்பு விடுக்கின்றேன். அரசின் அமைச்சுப் பதவிகள் அல்லது நாடாளுமன்றத்தில் புதிதாக உருவாக்கப்படவுள்ள பதவிகள் என இரு வழிமுறைகள் இருக்கின் றன. இதில் ஒரு மாற்றுவழியினூடாக நாம் அனைவரும் ஒன்றிணைந்து முன்னோக்கிச் செல்வோம்.

இந்த வேலைத் திட்டத்தைச் செய்ய நாடாளுமன்றத்தின் அனுமதியை நாம் கோருகின்றோம். விசேடமாக, இந்தச் சந்தர்ப்பத்தில், தற்போது இருக்கும் அமைச்சு மற்றும் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட பிரதியமைச்சுப் பதவிகளுக்கு மேலதிகமாக, நாடாளுமன் றத்தில் தெரிவுக்குழுக்களை உருவாக்குவோம். அதுபோல, மாவட்ட அபிவிருத்திக்காக மாவட்ட அபி விருத்தி இணைப்புக் குழுவின் தலைவர்களாக நாடாளுமன்ற உறுப்பினர்களை நியமிப்போம். அரசியல்வாதிகள் இல்லாத கிராமிய ஆட்சிக் குழு, கொத்தணிக் கிராமங்களை உருவாக்குவோம். அதுபோல, சிவில் அமைப்புகளின் ஆலோசனைகளைப் பெறுவதற்காக ஆலோசனைக் குழுவொன்றையும் நியமிக்க பேச்சு நடத்துகின்றோம். இதற்கு சமயத் தலைவர்களுடன் அனைவரையும் இணைத்துக்கொள்வதே எனது தேவையாக உள்ளது.

பழைய அரசியலை ஒரு பக்கம் வைத்துவிட்டு, இந்த நாட்டின் அடிப்படைப் பிரச்சினை தொடர் பில் இணக்கப்பாடொன்றை ஏற்படுத்திக்கொள்ள 2, 3 வருடங்கள் பார்ப்போம். எமது திட்டத்துக்காக மக்களிடம் ஆணையைக் கோரினோம். அதை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, தேசிய இணக்கப்பாட்டை ஏற்படுத்தும் கொள்கை வரைவொன்றை உருவாக்கவேண்டும். அதற்கு நாம் தயார். பிரதமராக நான் பதவியேற்றதன் பின்னர், ஜனாதிபதியுடன் இணைந்து ஏனைய கட்சித் தலைவர்களுடன் பேசி, இந்த இணக்கப்பாட்டு அரசைக் கொண்டுசெல்வோம். நாட்டைப் பற்றியும், மக்களைப் பற்றியும் சிந்தித்து ஒன்றிணைந்து செயற்பட முன்னோக்கி வாருங்கள். பிரிவினைக் கொள்கைக்கு நாம் இடமளிக்க மாட்டோம்.

இந்த நல்லாட்சியை அனுமதிக்குமாறுதான் நாம் நாடாளுமன்றத்தில் கேட்கிறோம். அதன் பின்னர் இணக்கப்பாட்டு அரசில் இணையுங்கள். எவரும் இதிலிருந்து விலகிச்செல்ல முடியாது. விலகிச்செல்வது என்பது மக்களுக்கு எதிரானது. தமது பிரச்சினைகளைத் தீர்ப்பதே மக்களின் தேவையாக உள்ளது. நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும், நீதியான சமாதான தேர்தலொன்றுக்கு முகங்கொடுத்தோம். எந்தப் பிரச்சினையும் இல்லை. இது தற்காலிக சம்பவம் அல்ல. சமூகத்தில் எப்போதும் இருக்கவேண்டும். முன்னோக்கிச் சென்று நாட்டின் இளைஞர், யுவதிகளின் பிரச்சினைகளைத் தீர்த்து, துன்பங்களை அனுப விக்கும் சாதாரண மக்களது பிரச்சினைக ளைத் தீர்க்கும் ஆட்சியை நாம் உருவாக்குவோம். இதனூடாக புதிய கட்சி அரசியலை உருவாக்க எம்மால் முடியும். அதுதான் எனது நோக்கம் –என்றார். (த–சி)

## புதிய அரசை

பெற்றுள்ளது. சுயாதீனமானதும் நீதியானதுமான தேர்தல்கள் ஜனநாயகத்துக்கு மிகவும் அவ சியமானது என சுட்டிக்காட்டியுள்ள அவர், தேர்தல் கள் நடத்தப்பட்ட விதம் மிகவும் மகிழ்ச்சியளிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் கூறியுள்ளார்.

இலங்கைத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியக் கண்காணிப்பாளர்களின் அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (த)

## மஹிந்த

மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்ட லக்ஸ்மன் யாப்பா அபே வர்த்தன, ஹேமல் குணசேகர, குருநாகலவில் போட்டியிட்ட ரி.பி.ஏக்கநாயக்க மற்றும்திஸ்ஸ கரலியத்த, ரோஹண புஸ்ப குமார ஆகியோர் தோல்வியடைந்துள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட உதித்த லொக்கு பண்டார, புஷ்ப குமார, சாமிக புத்ததாச, லக்ஸ்மன் செனவிரத்ன ஆகியோரும் மொனராகலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட ஜகத் புஸ்பகுமார, விஜித் விஜயமுனி சொய்சா ஆகியோரும் தோல்வியடைந்துள்ளனர்.

அதேவேளை, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட நிருபமா ராஜபக்ஷ, களுத்துறை மாவட்டத்தில் போட்டியிட்ட மஹிந்த சமரசிங்க, காலியில் போட்டியிட்ட பியசேன கமகே, கம்பகாவில் போட்டியிட்ட உபேக்சா சுவர்ணமாலி, பண்டுபண்டாரநாயக்க, பீலிக்ஸ் பெரேரா, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, ருவன் ரணதுங்க, துலிப் விஜே சேகர, சரத் குமார குணரத்ன போன் றோரும் தோல்வி கண்டுள்ளனர். (த–5)

## சர்வதேச

யிட்டுள்ளார்.

தேர்தலில் அடைந்த தோல்வி மூலம் , மஹிந்த மற்றும் அவ ரது சகோதரர்களை ஹேக்கில் அமைந்துள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் போர்க் குற்றச் செயல் குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் முற்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் அதிகரித்துள்ளதாகத் லீ ரியன்னன் தனது முகநூலில் குறிப்பிட்டுள்ளார். (த)

## பொறுப்புக் கூறல்

குறித்து ஐ.நா. பொதுச் செயலர் பாராட்டுத் தெரிவித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மக்களின் வாக்குரிமையை உறுதிப்படுத்திய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் தேர்தல் ஆணையாளருக்கும் அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார். நல்லாட்சி, பொறுப்புக் கூறல், நல்லிணக் கத்துக்கான மேலதிக நகர்வுகளை புதிய அரசு முன்னெடுக்க வேண் டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். இலங்கையில் நீடித்த அமைதியையும் செழிப்பையும் கட்டி யெழுப்ப ஜனாதிபதி, பிரதமர், மக்கள் அனைவரும், ஆதரவளிக்க வேண்டும் என்றும் ஐ.நா பொதுச் செயலர் கேட்டுக் கொண்டுள்ளார். (த–5–4)

## கூட்டமைப்பில்

உறுப்பினராக இருந்த போதி லும், முதல் முறையாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிட்டு நாடாளு மன்றம் செல்கிறார்.

அம்பாறை மாவட்டத்தில் இருந்து, கவீந்திரன் கோடீஸ்வரன் 17 ஆயிரத்து 779 விருப்பு வாக்குகளைப் பெற்று நாடாளு மன்றத்துக்கு முதல் முறையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தில் ஞா.சிறிநேசன் 48 ஆயிரத்து 221 விருப்பு வாக்குகளைப் பெற்றும், வியாழேந்திரன் (அமல் மாஸ்ரர்) 39 ஆயிரத்து 320 விருப்பு வாக்குகளைப் பெற்றும் நாடாளு மன்றத்துக்கு முதல் முறையாகத் தெரிவாகியுள்ளனர்.

வன்னி தேர்தல் மாவட்டத்தில் இருந்து வடக்கு மாகாணசபை உறுப்பினரான க.சிவமோகன் மற்றும் சாள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் முதல் முறையாக நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை இந்தத் தேர்தலில் போட்டியிட்ட முன்னாள் 4 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்ட சுரேஸ் பிரேமச்சந்திரனும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பொன்.செல்வராசா மற்றும் அரியநேந்திரன் ஆகியோரும் தோல்வியடைந்துள்ளனர்.

வன்னி மாவட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர், வினோநோகராதலிங்கம் தோல்வியைத் தழுவியுள்ளார். (த–5)

## யாழ். மாவட்டத்தில்

வழி களிலும் அர்ப்பணிப்பு டன் செயற்பட்ட தேர்தல்கள் ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், மேலதிக தேர்தல் கள் ஆணையாளர், உதவித் தேர்தல்கள் ஆணையாளர், அரச அதிகாரிகள், அரச அலுவலர்கள், பொலிஸ் அதிகாரி கள், வாக்குப் பெட்டிகளை நெடுந்தீவுக்கு எடுத்துச் சென்று மீள எடுத்து வர உதவிய கடற்படையினர் மற்றும் விமானப் படையினர், போக்குவரத்துச் சபை, தனியார் போக்குவரத்துச் சங்கம், ஊடகவியலாளர்கள், வேட்பாளர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் என்ற ரீதியில் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன் – என்று அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (த–5)

## இலங்கையில்

தேர்தலை நடத்த நடவடிக்கை எடுத்தமை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவின் பிரதான கண்காணிப்பாளர் பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக சட்டவிரோத தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளின்போது தேர்தல்கள் ஆணையாளர் தேர்தல் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்தியதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தேர்தலில் வாக்களிக்கவும் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்குவதிலும் தடைகள் இருக்கவில்லை. அத்துடன் தேர்தலில் போட்டியிட்ட பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை 9 வீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டமை தொடர்பில் ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்புக்குழு தனது கவனத்தை செலுத் தியிருந்தாகவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

## தீர்வை

இது தொடர்பில் கனேடியத் தமிழர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இலங்கை அரசுக்கும் பன்னாடுகளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே தங்கள் தலைமை என்பதை உறுதிபடக் கூறியுள்ளனர். நீண்டகாலத் தமிழர் சிக்கல்களுக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒரு தீர்வு முன்வைக்கப்படவேண்டியதன் அவசியத்தை இது தெளிவுபடுத்துகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நீண்டகாலமாக இணைந்து செயற்படும் அமைப்பாகக் கனேடியத் தமிழர் பேரவை இருந்துவருகிறது. இந்தவகையில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்றைப் பெற்றுத்தருவதில் பன்னாட்டுக் குழுமம்! குறிப்பாக, இந்தியா முழுமை யான உதவிகளை வழங்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது.

இலங்கை மக்கள் மீண்டுமொருமுறை நல்ல மாற்றத்துக்கு வாக்களித்துள்ளனர். இது இவ்வாண்டு ஜனவரியில் நடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் தொடங்கியது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன ஆகியோரை வாழ்த்துவதோடு கடந்த எட்டு மாதங்களாக இடம்பெற்றுவரும் முன்னேற்றப் பணிகளைத் தொடரவேண்டுமெனக் கனேடியத் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுக்கிறது.

எப்போதும் போல் கனேடியத் தமிழர் பேரவை, தமிழ் மக்களின் விருப்புகளை ஏற்றுக்கொள்வதோடு அவற்றுக்கு மதிப்பளிப்பளிக்கிறது. தமிழ் மக்கள் மதிப்போடும், அமைதியோடும், சமாதானத்தோடும், சம உரிமையோடும் வாழும் நிலையை உருவாக்குவதற்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும் அதன் தலைவர் இரா.சம்பந்தனதும் நெடும் பயணத்துக்கு கனேடியத் தமிழர் பேரவை தோள் கொடுத்து நிற்கிறது– என்றுள்ளது. (த)

## சிறுபான்மை

குத் தெரிவாகியுள்ளனர். 14 ஆசனங்களைக் கைப் பற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டு போனஸ் ஆசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதால் தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கை 19 ஆக உயரும். அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் இரண்டு தமிழர்களுக்கும், இரண்டு முஸ்லிம்களுக்கும் போனஸ் ஆசனம் வழங்கப்படவுள்ளது. சிலவேளை இத்தொகை மூன்றாக உயர்வதற்கும் வாய்ப்பிருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பிலும் மூன்று அல்லது நான்கு சிறுபான்மை இனத்தவர்களுக்குத் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்நியமனம் வழங்கப்படவுள்ளது. இதில் முன்னாள் அமைச்சர் பௌஸி, பைஸர் முஸ்தபா ஆகியோருக்கு இடம் கிடைப்பது உறுதியாகியுள்ளது.

ஜே.வி.பியிலும் தமிழர் ஒருவருக்கு தேசியப்பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. எனவே, சபையில் தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மேலும் உயர்வடையும் நிலை இருக்கின்றது.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் போட்டியிட்ட முஸ்லிம் வேட்பாளர்களுள் ஒரே ஒருவர் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளார். அதேபோல் தமிழர்கள் சார்பில் இருவர் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளனர்.

சபைக்குத் தெரிவாகியுள்ள 15 முஸ்லிம்களுள் 13பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் போட்டியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பட்டியலில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒரு லட்சத்து 2 ஆயிரத்து 186 விருப்பு வாக்குகளைப் பெற்றார்.

திகாமடுல்ல மாவட்டத்திலும் மு.கா. யானை சின்னத்தில் போட்டியிட்டு மூன்று ஆசனங்களைத் தனதாக்கியுள்ளது. அதில் பைஸல் ஹாசிம் –61,401, ஹரீஸ் – 59,443, மன்சூர் – 58,536 விருப்பு வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்று முறையே திகாமடுல்ல மாவட்டத்தில் 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பில் தனித்துப் போட்டியிட்ட மு.கா. ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது. அலிசாஹிர் மௌலானா நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மு.கா. தேசியப்பட்டியல், கட்சிப் பொதுச் செயலாளர் ஹஸன் அலிக்கே வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ஐக்கிய தேசியக் கட்சியில் வன்னியில் ரிஷாத், மட்டக்களப்பில் அமீர் அலி, திருகோணமலையில் மஹ்ரூப் மற்றும் அநுராதபுரத்தில் இஷாக் ஹாஜியார் ஆகியோர் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட அமைச்சர் ஹலீம் 111,011 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளதுடன், மாவட்ட ரீதியில் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டார். அதேபோன்று, பெரும்பான்மை மக்கள் அதிகம் உள்ள கேகாலை மாவட்டத்தில் ஐ.தே.க. பொதுச் செயலாளரும், அமைச்சருமான கபீர் ஹாஷீம் 109,030 வாக்குகளைப் பெற்று மாவட்ட ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டார்.

ஐ.தே.க. சார்பில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட எஸ்.எம்.மரிக்கார் மற்றும் முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் வெற்றிபெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளதுடன், திருகோணமலை மாவட்டத்தில் இம்ரான் மஹ்ரூப் வெற்றி பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட பிரபல முஸ்லிம் வேட்பாளர்களான அப்துல் காதர், ஹிஸ்புல்லா, அதாவுல்லா மற்றும் மில்பர் கபூர் போன்றவர்கள் தோல்வியடைந்துள்ளனர். எனினும், ஐ.ம.சு.முவில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட காதர் மஸ்தான் 7,298 வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட மனோ கணேசனும், நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்ட பழனி திகாம்பரம், இராதாகிருஷ்ணன், திலகராஜ் ஆகியோரும், பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட வடிவேல் சுரேஷ், அரவிந்தகுமார் ஆகியோரும், யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட விஜயகலா மகேஸ்வரனும், கண்டி மாவட்டத்தில் போட்டியிட்ட வேலுகுமாரும் வெற்றிபெற்றுள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் போட்டியிட்ட ஆறுமுகன் தொண்டமான், முத்து சிவலிங்கம் ஆகியோரும் வெற்றுபெற்றுள்ளனர். யாழ். மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்ட ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2 போனஸ் ஆசனங்களுடன் 16 ஆசனங்களை வென்றுள்ளது. ஆகவே, நாடாளுமன்றத்தில் தமிழ்பேசும் பிரதிநிதிகளின் பலம் அதிகரிக்கவுள்ளது. (த–சி)

## தொடர்ந்தும்

ஆணையைப் பாதுகாக்கும் வகையில், நான் தொடர்ந்து அரசியலில் ஈடுபடுவேன். நாட்டையும், ஜனநாயக முறைமையையும் பாதுகாக்க நாடாளுமன்றத்துக்குள் இருந்து, செயற்படுவேன், என்று தனது அறிக்கையில் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (த–5)

## தேசியப் பட்டியல்

அவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டியிருக்கின்றது. இவ்வாறு பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்தே, தேசியப் பட்டியல் யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் முடிவெடுப் போம் – என்றார். (சு–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திமலுக்கு எதிராக மிஷ்ராவை வைத்து வியூகம்



இந்தியா – இலங்கை அணிகளுக்கிடையில் இன்று ஆரம்பமாகவுள்ள இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் சந்திமலின் மீது இந்தியப் பந்துவீச்சாளர்களின் கவனம் திரும்பியுள்ளது. சந்திமலை வீழ்த்துவதற்காக சிறப்புப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார் இந்திய நட்சத்திரப் பந்துவீச்சாளர் மிர்ஷா.

முதலாவது டெஸ்டில் இந்தியாவின் பக்கம் வெற்றிக்கான வாய்ப்பு பலமாக இருந்தது. ஆனால் இரண்டாவது இன்னிங்ஸில் சந்திமல் ஆட்டமிழக்காது 162 ஓட்டங்களை விளாசிய காரணத்தினால் இலங்கை தோல்வியில் இருந்து தப்பியதுடன் வெற்றியும் பெற்றது. இதனால் சந்திமலைக் கட்டுப்படுத்த இந்தியா பல்வேறு வியூகங்களை வகுத்துள்ளது. சந்திமலுக்கு எதிரான வியூகங்களை நடைமுறைப்படுத்தவுள்ளவர் மிர்ஷா.

சந்திமலை வீழ்த்துவது தொடர்பாக மிர்ஷா தெரிவித்ததாவது:– சந்திமலின் ஆட்ட நுணுக்கங்களை வீடியோவாக பார்வையிட்டோம். வீரர்கள் கூட்டத்தில் விவாதித்து, அவரது ஆட்டத்தை கட்டுப்படுத்துவதற்கான வியூகம் வகுக்கப்பட்டுள்ளது. எங்களது திட்டத்துக்கு தகுந்தபடி களத்தடுப்பு அமைக்கப்பட்டு அவரது ஓட்டங்களின் குவிப்பை கட்டுப்படுத்தும் வகையில் பந்து வீச்சில் தாக்குதல் தொடுப்போம்.

சுழற்பந்து வீச்சுக்கு எதிராக எங்களது துடுப்பாட்ட வீரர்கள் தடுமாறியதாக நான் நினைக்கவில்லை. எங்களுடைய வீரர்கள் சுழற்பந்து வீச்சுக்கு எதிராக திறம்பட விளையாடக்கூடியவர்கள். சில சமயங்களில் ஒன்றிரண்டு இலக்குகள் வீழ்வதால் நெருக்கடி ஏற்படும். நெருக்கடியில் யாருக்கும் தவறு நடப்பது இயல்பு தான்.

சுழற்பந்து வீச்சுக்கு எதிர்கொள்ளும் திறமையில் நாங்கள் பலவீனம் அடைந்து இருப்பதாக கருதவில்லை. முதல் டெஸ்ட்டின் இரண்டாவது இன்னிங்சில் நாங்கள் இன்னும் கொஞ்சம் ஆக்ரோஷமாக ஆடியிருக்க வேண்டும். அந்த டெஸ்டில் தோற்றாலும் எங்களது மனோதிடம் குறையவில்லை என்றார். (ம)

# சென்.ஜோன்ஸ் எதிர் யாழ்.மத்தி இறுதியில் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ் மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தினால் நடத்தப்படும் துடுப்பாட்டத் தொடர்களில் 15வயதுப்பிரிவு அணியினருக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி இன்று மோதவுள்ளது.

காலை 9மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள குறித்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் முன்னாள் தலைவர் நோயல் விமலேந்திரன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இன்றைய நிகழ்வுகள் யாவும் யாழ். மாவட்ட பாடசாலைகள் துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் அருட்தந்தை ஜெறோ செல்வ நாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம–23)

# யங்கம்பன்ஸ், றோயல் அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 20

அராலி ஏ.எல். விளையாட்டுக்கழகமும், அராலி ஏ.எல் இளைஞர் கழகமும், இணைந்து யாழ், வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வைகிக்கும் விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை அணி மோதிக் கொண்டது. இதில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து புங்குடுதீவு நசேரத் அணி மோதிக் கொண்டது. இதில் ஊரெழு றோயல் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

# இன்றைய மோதல்கள்

***ஏ.எல். வி.கழகத்தொடர்***

யாழ்ப்பாணம், ஓக. 20

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகமும், அராலி ஏ.எல் இளைஞர் கழகமும், இணைந்து யாழ்., வலிகாமம், வடமராட்சி, பருத்தித்துறை மற்றும் தீவகம் ஆகிய உதை பந்தாட்ட லீக்குகளில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈவினை கலைமதி அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை கலையொளி அணி மோதவுள்ளது.

***உதயசூரியன் வி.கழகத்தொடர்***

வத்திராயன் உதயசூரியன் விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதை பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக் கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களில் காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவசக்தி அணியை எதிர்த்து வல்வை அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணி மாலை 3.30 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியாட்டத்தில் கட்டைக் காடு சென்.மேரிஸ் அணியுடன் மோதவுள்ளது. இதேவேளை காலை 10.30மணிக்கு இடம்பெறும் இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் சக்கோட்டை சென்.சேவியர் அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது. (ம–23)



*தேசிய போதைத்தடுப்பு செயற்திட்டத்தின் தூதுவராக பிரபல கிரிக்கெட் வீரரான குமார் சங்கக்கார நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான நியமனக் கடிதத்தினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று (19) முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் வைத்து கையளித்தார். (ம)*



*இந்திய அணியின் கிரிக்கெட் வீரரான டினேஸ் கார்த்திக்கும் ஸ்குவாஷ் வீராங்கனையான தீபிகா பல்லிகலும் நேற்றுத் திருமணம் செய்து கொண்டனர். (ம)*

# சாய்னாவுக்கு மோடி வாழ்த்து



உலக பூப்பந்தாட்டத் தொடரில் இறுதியாட்டம் வரை முன்னேறி வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை சாய்னா நேவாலுக்கு பிரதமர் மோடி வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

சாய்னா தொடர்பாக மோடி தெரிவிக்கையில் உலக பூப்பந்தாட்டத் தொடரில் வெண்கலத்தைத் தவிர வேறொன்றும் இந்தியாவுக்கு சாத்தியமாகவில்லை. இவ்வாறான வரலாற்றை மாற்றி வெள்ளிப் பதக்கம் வென்று சாதித்துள்ளார் சாய்னா. ஒட்டுமொத்த இந்தியாவையும் பெருமைப்படுத்தியுள்ளார் என்றார். (ம)

# ஆஷஸின் இறுதியாட்டம் இன்று

இங்கிலாந்து ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையில் நடைபெற்று வரும் ஆஷஸ் தொடரின் ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

நடைபெற்று முடிந்த முதல் நான்கு ஆட்டங்களில் மூன்று ஆட்டங்களில் வெற்றிபெற்றுள்ள இங்கிலாந்து ஏற்கனவே தொடரைக் கைப்பற்றிவிட்டது. இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவு எதுவாக இருந்தாலும் தொடர் இங்கிலாந்திடமே செல்லும். சுருங்கக்கூறின் இந்த ஆட்டம் சம்பிரதாயபூர்வமான ஒன்றாக மாறியுள்ளது. இருப்பினும் கௌரவ வெற்றிக்காக ஆஸ்திரேலியா பாடுபடும். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னமும் திருந்தலையா?

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியில் எந்தத் தடு மாற்றமும் இருக்காது என்று ரவிசாஸ்திரி தெரிவித்துள்ளது.

முதல் ஆட்டத்தில் தோல்வியடைந்து பின்னடைவில் உள்ள இந்தியாவுக்கு தவானின் விலகல் மேலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் இந்திய அணியின் செயற்பாடு தொடர்பாக சாஸ்திரி தெரிவித்ததாவது மனநிலைகள் அதே போன்றுதான் இருக்கும். முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய அதே ஆக்ரோஷ, வெற்றிபெறும் மனநிலையுடன் 2ஆவது டெஸ்டிலும் ஆடப் போகிறோம். கடைசியில் ஒரு தவறு செய்தோம் அவ்வளவே. இன்னும் கொஞ்சம் தொலைவு நாம் கடக்க வேண்டும். சமச்சீர் தன்மையை எட்ட, சுறுசுறுப்பாக செயல்பட வேண்டும், தன்னம்பிக்கையுடன் ஆடுவதே சிறந்த வழி. தடுத்தாடினால் எதிர்மறையாக ஆடுகிறோம் என்று அர்த்தமல்ல, தடுப்பு உத்தியும் சிறப்பாக அமைந்தால் அதுவும் சரியான அணுகு முறையே என்றார். (ம)

# அஸ்வின், சந்திமால் முன்னேற்றம்

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் டெஸ்ட் தரவரிசை நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது. இதில் துடுப்பாட்டத்தில் சந்திமாலும் பந்து வீச்சில் அஸ்வினும் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

பந்துவீச்சில் அஸ்வின் மூன்று இடங்கள் முன்னேறி ஒன்பதாவது இடத்தை பிடித்துள்ளார். இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் 10 இலக்குகளைக் கைப்பற்றிய காரணத்தினாலேயே அவருக்குஇந்தமுன்னேற்றம்கிட்டியுள்ளது. 162 ஓட்டங்களை விளாசி இலங்கை அணியின் வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்த சந்திமால் தரவரிசையில் 22 இடங்கள் முன்னேறி 23ஆவது இடத்தை பிடித்துள்ளார். முதல் இன்னிங்ஸில் சதம் விளாசினாலும் கோக்லி 10ஆவது இடத்திலேயே உள்ளார். (ம)


## ஒட்டோ விற்பனைக்கு

Bajaj ஓட்டோ பச்சை நிறம் AAI xxxx தனி சொந்தப் பாவனை (3000 km) மட்டும் ஓடியது. விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். தரகர் தேவையில்லை.

தொடர்பு : 077 987 2473

## ஒத்து மாறுதல்

வலிகாமம் கல்வி வலய பாடசாலையில் கற்பிக்கும் ஆங்கில பாட ஆசிரியர் ஒருவர் யாழ் கல்வி வலய பாடசாலைக்கு ஒத்துமாற விரும்புகின்றார். ஒத்து மாற விருப்பம் தெரிவிக்கும் ஆங்கில ஆசிரியர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: 077 107 7091


## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹோட்டல் ஒன்றுக்கு வெயிற்றர் தேவை.

உணவும், தங்குமிடமும் வழங்கப்படும்.

தொடர்பு:
077 384 6330


## இதய அஞ்சலி



விஸ்வப்பிரம்ம குலத்தின் தலைமகன்

**ஸ்தபதி சின்னத்தம்பி அமரசிங்கம் (அராலி)**

அவர்களுக்கு எமது இதய அஞ்சலி

கலை அறிவில்லாத காலனவன்
சிற்பக்கலை புத்தகத்தை கிழித்து விட்டானா?
கலை உலகில் கர்ச்சித்த சிங்கமே
உன் கலை ஊற்று அடைத்து விட்டதா?

10/62,
கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்தபதி செ.பாலச்சந்திரன்
ஆச்சாரியாரும், கலைஞர்களும்
ஸ்ரீ காளிகா சிற்பாலயம்.

## மரண அறிவித்தல்

**திருமதி கணேசம்மா தங்கராசா**

பிறப்பு: 09.09.1950 இறப்பு: 19.08.2015



யாழ். வடமராட்சி திக்கத்தினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கராசா கணேசம்மா நேற்று (19.08.2015) புதன்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற க.தங்கராசாவின் (J.Pஓய்வுநிலை தொழிநுட்ப உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், திருமதி சுமதி இளங்கோ ஞானியாரின் (ஆசிரியர், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) பாசமிகு தாயும், காலஞ்சென்ற வேலும்மயிலும்-பத்தினிப்பிள்ளை தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கதிர்காமத் தம்பி-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், வே.கணேச மூர்த்தி, காலஞ்சென்ற திருமதி சி.நாகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற வே.விநாயகமூர்த்தி, திருமதி சி. இந்திராணி, சி.மங்களேஸ்வரன், சி. குகேஸ்வரன் ஆகியோரின் சிறிய தாயும், Dr. க. இளங்கோஞானியார் (தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை), க. கெங்காதரன், க. சிறீரங்கன், திருமதி வி. ஞான செல்வி ஆகியோரின் பாசமிகு மாமியும், இ. ஞானமதூரி, இ. கதிர் ஞானியார், வி.சனந்தன், வி. சிவோத்தம பூஷணி, வி. வித்ய பூஷணி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2015) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திக்கம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்,

## கண்ணீர் அஞ்சலி



சின்னத்தம்பி
இரவீந்திரன்



விஜயமலர்
சிறிஸ்கந்தவேள்

கடந்த 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்த எமது உறவுகள் சின்னத்தம்பி இரவீந்திரன், திருமதி விஜயமலர் சிறிஸ்கந்தவேள் ஆகியோரின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவர்களது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவிப்பதுடன், அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இரத்தினம்-சுபத்திராதேவி குடும்பம், ராசன்-ரவீந்திரா குடும்பம், ரவி-கௌரி (ராசாத்தி) குடும்பம், கருணா-லக்சி குடும்பம், சிறிதரன்-கௌசி குடும்பம், சுபாசினி, செந்தூரன்

நல்லூர் / பிரான்ஸ்

## மரண அறிவித்தல்

**திருமதி சுந்தரம்பிள்ளை நாகரெத்தினம்**



நீராவியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம்பிள்ளை நாகரெத்தினம் 18.08.2015 செவ்வாயக்கிழமை இறைவனுடன் சங்கமமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரம் பிள்ளை (ஸ்தாபகர் விவேகானந்த அச்சகம்) அவர்களின் அன்பு மனைவியும் இராஜகுலேந்திரன் (உரிமையாளர் விவேகானந்த அச்சகம்) அவர்களின் அன்புத் தாயாரும் ஜெயராணியின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற மயில்வாகனம் மற்றும் தர்மலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் விசாலாட்சி அம்மை, பொன்மணி காலஞ்சென்றவர்களான சிவலிங்கம், செல்வநாயகம், கார்த்திகேசு, திருநாவுக்கரசு, கந்தசாமி, கிருஷ்ணபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஜெயந்திரன் - அமிழினி (விவேகானந்த அச்சகம்), விஜேந்திரன் - வசந்தப்பிரியா (லண்டன்), ரமணேந்திரன் (இந்தியா, அபிராவல்ஸ்) தனுஷா (சுவிஸ்) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் அபிராம், சதுர்சனா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2015) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


24, பிறவுன் வீதி,
யாழ்ப்பாணம்.
0212217076

தகவல் -
சு.இராஜகுலேந்திரன் (மகன்)
(உரிமையாளர் விவேகானந்த அச்சகம்)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

**விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் ஸ்தபதி**



அராலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி அமரசிங்கம் ஆச்சாரியார் நேற்று (19.08.2015) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி ர. விஸ்வரூபி, ஐங்கரநேசன், நர்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தங்கமணி, தங்கரத்தினம், செல்வரட்ணம், கணேசலிங்கம், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், கணபதிப்பிள்ளை, சிவபாக்கியம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ரவிசங்கர், தர்மிளா ஆகியோரின் அன்பு மாமனும், பாலசிங்கம், வடிவேலு, இராசதுரை, லோகநாதன், புஸ்பகுணம், புவனேஸ்வரி, அன்னலட்சுமி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2015) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அராலி கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி தெற்கு, அராலி.
077 117 1170, 077 3999 110, 077 1630 546

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**அமரசிங்கம் தர்மகுலசிங்கம்**



நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் முரசுமோட்டையை நிரந்தர வதிவிடமாகவும் இல, 100, பிறவுண் கம்பனியடி A9 வீதி, வவுனியாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட அமரசிங்கம் தர்மகுலசிங்கம் கடந்த 18.08.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமரசிங்கம் - பராசக்தி தம்பதிகளின் மூத்த மகனும் சத்தியானந்த தேவியின் அன்புக் கணவரும் லதீஸன் (வ/தமிழ் மத்திய மகா வித்தியாலயம் - A/L), தினோசன் (C.T.T.M.S - O/L), கிருதுஜா (வ/றம்பைக்குளம் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் வரதலட்சுமி (திருவையாறு), தர்மானந்தன் (கனடா), கேதீஸ்வரன் (உதவி திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம், கிளிநொச்சி), கமலவேணி (ஆசிரியர் - கிளி/மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சசிரதேவி (லண்டன்), சரசானந்த தேவி (இந்தியா), விஜயகுமாரன் (ஓமர் லொறி உரிமையாளர்), காலஞ்சென்ற விஸ்ணுகுமாரன், ஸ்ரீஸ்கந்தகுமாரன், சாந்தினிதேவி, சிவஞானதேவி, நந்தகுமாரன், கலாதேவி (கனடா), பத்மராணி (மு.உ. பச்சிலைப்பள்ளி பிரதேச சபை), தர்மகுலசூரியர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 20.08.2015 பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல, 100 A9 வீதி, பிறவுன் கம்பனியடி, வவுனியா.
T.P-0778888681, 0770541014

தகவல் -
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பியனானார் முர்ரே




கனடாவில் நடைபெற்ற ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் தொடரின் ஆண்கள் பிரிவில் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரே கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளார்.

கனடாவின் மொன்றியேல் நகரில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோ விச்சும், 2ஆம் நிலை வீரர் இங்கிலாந்தின் ஆன்டி முர்ரேயும் பலப்பரீட்சை செய்தனர். கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜோகோவிச்சை முர்ரே வீழ்த்தியதில்லை. மேலும், இந்த சீசனில் 52 போட்டிகளில் வெற்றியை ருசித்து, 3 தோல்விகளை மட்டுமே ஜோகோவிச் சந்தித்திருந்ததால், ஜோகோவிச் கிண்ணம் வெல்வதற்கு கூடுதல் வாய்ப்பு இருப்ப தாகக் கருதப்பட்டது. ஆனால், அபாரமாக ஆடிய ஆன்டி முர்ரே முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் கணக்கில் கைப்பற்றினார். இரண்டா வது செற்றில் சுதாரித்த ஜோகோவிச் 6:4 என்ற கணக்கில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றில் முர்ரே ஆதிக்கம் செலுத்தினார். இதில் முழுக்க முழுக்க முர்ரேவின் கை ஓங்கியிருந்தது. இறுதியில் 6:3 என்ற புள்ளிகள் கணக்கில் மூன்றாவது செற்றை வென்று, கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

கிண்ணம் வென்றது தொடர்பாக முர்ரே தெரிவித்ததாவது:– எனது பயிற்சியாளர் மிகவும் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்தார். ஆனால் என்னைப் பற்றியே எந்நேரமும் சிந்துக் கொண்டிருப்பார். இந்த வெற்றியை அவருக்கு சமர்ப்பிக்கிறேன். ஜோகோவிச்சை வீழ்த்தியது மிக்க மகிழ்ச்சியை தருகிறது –என் றார். (ம)

# ஹேலப்பை பந்தாடினார் பென்சிச்



கனடாவின் டொரான்டோ நகரில் நடைபெற்ற ரோஜர்ஸ் கிண்ண ரென்னிஸ் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் சுவிற்ஸர்லாந்தின் பென்சிச் கிண்ணம் வென்று அசத்தியுள்ளார்.

இறுதியாட்டத்தில் ருமேனியாவின் சைமோனா ஹேலப்பும், சுவிற்ஸர்லாந்தின் பென்சிச்சும் மோதினர். இதில் முதல் செட்டை 7:6 என்ற கணக்கில் கைப்பற்றினார் பென்சிச். ஆனால் இரண்டாவது செட்டை 6:7 என்ற புள்ளிகள் கணக்கில் இழந்தார். வெற்றியைத் தீர்மானிக்கும் மூன்றாவது செட்டில் பென்சிச் 3:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தபோது, காயம் காரணமாக விலகுவதாக ஹேலப் தெரிவித்தார். இதையடுத்து பென்சிச் சம்பியனாக அறிவிக்கப்பட்டார். இவ் வெற்றி தொடர்பாக பென்சிச் தெரிவித்ததாவது :– எனக்கு சிறப்பாக பேச வராது. இந்த வாரம் மிகச்சிறப்பாக அமைந்தது. நான் தோல்வியடைந்திருந்தால் கூட, மிகச்சிறப்பான அனு பவமாகவே இது இருந்திருக்கும் என்றார். (ம)

## தொடர்ந்து முதலிடத்தில்

# கப்டன் கூல்

விளம்பரம் மூலம் அதிகம் சம்பாதிக்கும் இந்திய வீரர்களின் பட்டியலில் இந்திய அணியின் தலைவர் டோனி முதலிடத்தில் உள்ளார்.

டோனி விளம்பரம் மூலம் ஆண்டுக்கு 390 கோடிகள் முதல் 420 கோடிகள் வரை சம்பாதிக்கிறார். கிட்டத்தட்ட 15 விளம்பர நிறுவனங்களின் ஒப்பந்தங்கள் அவரது கைவசம் உள்ளன. ரித்தி ஸ்போர்ட்ஸ் நிறுவனம் அவரது விளம்பரங்களை கவனித்து வருகிறது. இதை அவரது நண்பர் நடத்தி வருகிறார்.

இவருக்கு அடுத்தபடியாக டெஸ்ட் அணியின் தலைவரான விராட் கோக்லி விளம்பரம் மூலம் ஆண்டுக்கு 180 கோடிகள் முதல் 210 கோடிகள் வரையில் சம்பாதிக்கிறார். 13 நிறுவனங்களின் விளம்பர ஒப்பந்தங்கள் கோக்லியின் கையில் உள்ளன. (ம)




Brighten Economics Hall 364 Stanly Rd (Near DMI)
GAQ, BA I ENGLISH Revision & paper
R.MAHESWARAN (BA.Dip.in.Eng Sp. Trd Eng)
நாளை Fri 9 - 12
sat 11 - 12
sun 1 - 2
தமிழ் - K.தர்மராஜா (MA)
BA I 2.1 மீட்டல் 9-10 (Friday)
BA I 2.2 மீட்டல் 10 - 11 (Friday)

IELTS UK KU Education
MBA(London) Qualified Trainer Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
0777-302882 (AG&L) IELTS Centre@KU
தனிப்பட்ட முறையில் உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய, அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே முன்னணி நிறுவனம். IELTS Life Skills-A1-B1
K.U Education, No 626 1/1, First Floor, K.K.S Rd, Jaffna.


FLC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH IN NORTH
பிரெஞ்சு மொழி வகுப்பு
Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்
விரிவுரையாளர்: MR. V. JEGAN (Trained Teacher in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டு வரும்)
DELF A1, A2 Exam இல் 100 % சித்தி. 985 மாணவர்கள் French கற்றுள்ளனர்....
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781
No. 40, பலாலி வீதி, Jaffna. ஆரிய குளத்துக்கும் இலுப்பையடி சந்திக்கும் இடையில் உள்ளது.
181, பிரதான வீதி நெல்லியடி. TP: 021 320 2973
கண்டி வீதி, சாவகச்சேரி
Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சுமொழியைபிரெஞ்சுமுறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
பிரெஞ்சு கற்பதற்கு இலங்கையில் FRENCH EMBASSYயின் கீழ் இயங்கும்சர்வதேசநிறுவனம் AF மட்டுமே. யாழ். பல்கலைக்கழக பிரெஞ் (பிரான்ஸ் நாட்டவரும்) ஆசிரியர்கள். இலங்கையில் AFமட்டுமே அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)ஐ வழங்குகின்றது. பிரெஞ்சு மொழிபெயர்புகள். யாழ். வன்னி, மன்னார், தீவகத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தேFRANCE, CANADA... செல்கிறார்கள். யாரும் படிக்கலாம்.
13.09.15சனி, ஞாயிறு11-1pm உடன்பதியுங்கள்
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்





தெல்லிநகர் துர்க்காதேவி ஆலய
4 ஆம் திருவிழா
இன்று (20.08.2015) வியாழக்கிழமை


துர்க்கையின் வாசல் சென்றால் துயரில்லை
தூய ஆத்மாவாக துலங்கிடுவர் பக்தர்கள்
வீரத்திருமகள் வீதியில் வீழ்ந்து வணங்கினால்
வில்லங்கம் ஏதுமில்லை விரைந்து வணங்கிடுவீர்.

நாடி வந்தவரெல்லாம் நன்மை பல பெறுவர்
பாடி வலம் வந்தவர் பரிசுகள் பலபெறுவர்
தேடி அவள் தொண்டு செய்தோர்கோடி பல பெறுவர்
வாடி வந்தவர் தெல்லியில் வளம் பல பெறுவரே!

இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.

அனுசரணை: செ. பரந்தாமன் - குடும்பம்
4 ஆம் திருவிழா உபயகாரர்
தெல்லிப்பழை.





ஸ்ரீராம ஜெயம்
தென்மராட்சி மண்ணில், சாவகச்சேரி டச்சு வீதியில்
சகல வசதிகளுடன் கம்பீரமான தோற்றத்தில் புதுப் பொலிவுடன்
நாளை (21.08.2015) வெள்ளிக்கிழமை
ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபம்
தனது சேவையை மீண்டும் ஆரம்பிக்கின்றது என்பதை சகல வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றோம்.
எமது சேவைகள்
திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், பிறந்த நாள் நிகழ்வுகள், அரங்கேற்றங்கள், கூட்டங்கள், கருத்தரங்குகள், பரிசளிப்பு விழாக்கள் போன்ற அனைத்து விதமான களியாட்ட நிகழ்வுகளையும் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவையை பெற்றிட இன்றே நாடுங்கள்.
ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபம்
டச்சு வீதி, சாவகச்சேரி (ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகத்துக்கு அருகில்)
077 224 7583, 021 221 2851
சி. கந்தசாமி (உரிமையாளர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org